## நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை
## மேட்டூர் நகராட்சி

மேட்டூர் நகராட்சியின் சாதாரணக் கூட்டம் நகர்மன்றத்தில் நகராட்சியின் தனி அலுவலர் அவர்களால் 02.11.2018 ம் தேதி பிற்பகல் 4.00 மணிக்கு நடைபெற உள்ளது.

### மன்றப் பொருள்

1) இந்நகராட்சியில் மொத்தம் உள்ள 165 துப்புரவு பணியாளர் பணியிடத்தில் 88 நிரந்தர துப்புரவு பணியாளர்கள் பணிபுரிந்து வந்த நிலையில் காலியாக உள்ள 77 பணியிடங்களுக்கு ஒப்பந்த அடிப்படையில் தனியார் மூலம் பயன்படுத்திக்கொள்ள நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களிடம் அனுமதி கோரப்பட்டதற்கு, நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் செயல்முறைகள் உத்திரவு ந.க.எண்.31096/பி3/2017, நாள்.10.01.2018ல் 47 பணியாளர்களை ஒப்பந்த அடிப்படையில் துப்புரவு பணிக்கு அனுமதித்து உத்திரவிடப்பட்டுள்ளது. அதன்படி குறைவான ஒப்பந்தபள்ளி அளித்த ஈசா அசோசியேட்ஸ் டேனிஷ்பேட் என்ற தனியார் நிறுவனத்திற்கு 20.04.2018 முதல் ஓராண்டிற்கு 47 பணியாளர்களை கொண்டு துப்புரவு பணி செய்ய நகர மன்ற தீர்மான எண்.33 நாள்.28.03.2018ல் அனுமதி பெறப்பட்டு உத்திரவு வழங்கப்பட்டுள்ளது. இந்நிலையில் நகராட்சி நிரந்தர துப்புரவு பணியாளர்கள் 88 பேரில் 5 துப்புரவு பணியாளர்கள் பணியிடைக் காலமாகியும், 3 துப்புரவு பணியாளர்கள் வயது முதிர்வின் காரணமாக பணி ஓய்வு பெற்றதாலும் மொத்தம் 8 துப்புரவு பணியாளர்கள் பணியிடங்கள் காலியாக உள்ளது.

| வ எண் | துப்புரவு பணியாளர் பெயர் | ஓய்வு / இறப்பு | நாள் |
|---|---|---|---|
| 1 | திரு.குப்பன்/ ராமன் | பணி ஓய்வு | 28.02.2018 |
| 2 | திருமதி.பழனியம்மாள்/முனியன் | இறப்பு | 11.03.2018 |
| 3 | திரு.பெருமாள்/ராமன் | இறப்பு | 05.04.2018 |
| 4 | திரு.பழனிசாமி/அங்கமுத்து | இறப்பு | 14.06.2018 |
| 5 | திருமதி.அம்மாசி/ மாதன் | பணி ஓய்வு | 30.06.2018 |
| 6 | திருமதி.லட்சுமி/வீரன் | பணி ஓய்வு | 30.06.2018 |
| 7 | திருமதி.ராணி/சுப்ரமணி | இறப்பு | 01.10.2018 |
| 8 | திரு.சேகர்/குப்பன் | இறப்பு | 17.10.2018 |

துப்புரவு பணியாளர்கள் பற்றாக்குறையால் பொது சுகாதாரப் பணி பெரிதும் பாதிப்படைந்துள்ளதால் காலியாக உள்ள 8 துப்புரவு பணியாளர் பணியிடங்களுக்கும் நிரந்தர துப்புரவு பணியாளர் நியமித்தால் செலவினம் கூடுதலாகும் என்பதால் ஏற்கனவே 47

பணியாளர்களை கொண்டு ஒப்பந்த அடிப்படையில் துப்புரவு பணி செய்து வரும் ஈசா அசோசியேட்ஸ் நிறுவனத்தின் மூலம் மேலும் 8 பணியாளர்களை 01.11.2018 முதல் பயன்படுத்திக் கொள்ளவும் அதற்காகும் தோரய ரூ.5.00 இலட்சத்திற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u>

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் செயல் முறைகள் உத்திரவு ந.க.எண்.31096/பி3/2017 நாள்.10.01.2018ன் படியும் நகர மன்ற தீர்மான எண்.33 நாள்.28.03.2018ன் நிபந்தனைகளுக்குட்படுத்திதயும் அனுமதி வழங்கலாம்.
3. இதற்காகும் செலவினத்தினை திடக்கழிவு மேலாண்மை பயனிட்டாளர் கட்டண தொகையிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண். 3601 /2018/எச்1)**

**தீர்மாள எண். 207 நாள் 02.11.2018**

**அனுமதிக்கப்பட்டது**

2) மேட்டூர் நகரில் குடிநீர் மேம்பாட்டுத் திட்டம் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மூலம் தயாரிக்கப்பட்ட விரிவான திட்ட மதிப்பீடு ரூ.1247.19 இலட்சத்திற்கு அரசாணை எண்.2(D) நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்.20.07.2009–ல் சிறிய மற்றும் நடுத்தர நகரங்களுக்கான உள்கட்டமைப்பு வசதி திட்டத்தில் மேற்கொள்ள நிர்வாக அனுமதி வழங்கப்பட்டது. அதன்படி இப்பணிகள் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தினரால் மேற்கொள்ளப்பட்டு 2015 ஆம் ஆண்டு முடிக்கப்பட்டு நகராட்சி வசம் 2016–ல் ஒப்படைக்கப்பட்டது.

மேட்டூர் நகராட்சியில் 16749 எண்ணிக்கையிலான சொத்துவரி இனங்கள் உள்ளன. அவற்றில் 12501 எண்ணிக்கையில் குடியிருப்புகள் உள்ளன. இவற்றில் 7776 எண்ணிக்கையிலான வீட்டு குடிநீர் குழாய் இணைப்புகள் உள்ளன. நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், சேலம் அவர்களால் நடத்தப்பட்ட ஆய்வுக்கூட்ட அறிவுரைகளின்படி மேட்டூர் நகராட்சி எல்லைக்குள் அனைத்து குடியிருப்புகளுக்கும் குடிநீர் வீட்டு குழாய் இணைப்புகள் வழங்க வேண்டி அறிவுறுத்தப்பட்டுள்ளது.

எனவே 7000 எண்ணிக்கையிலான குடிநீர் வீட்டு இணைப்புகளை பகிர்மானக் குழாயில் இருந்து வீட்டின் உட்புறத்தில் குழாய் இணைப்பு வழங்க வேண்டி பணிகளை மேற்கொள்ள ஆகும் மதிப்பீட்டுத் தொகை ரூ.232.00 லட்சத்திற்கு நிர்வாக அனுமதி பெற பிரேரணையினை அனுப்பப்பட்டு நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களின் செயல்முறை கடித ந.க.எண். 13277/2018/WS –1 நாள். 19.06.2018 ல் ரூ.232.00 லட்சத்திற்கு TUFIDCO சுழல் நிதியில் வட்டியில்லா கடன் மூலம் பெற்று மேற்கொள்ள நிர்வாக அனுமதி வழங்கி உத்திரவு பெறப்பட்டுள்ளது.

மேற்படி வட்டியில்லா கடன் பெற TUFIDCO நிறுவனம் சென்னையில் நடைபெற்ற மதிப்பீடு (Appraisal) ஆய்வு கூட்டத்தில் மதிப்பீடு சரிபார்க்கப்பட்டது. தமிழ்நாடு நகர்புற வளர்ச்சி நிறுவனம் (TUFIDCO) கடித எண். TUFIDCO /URF 1819-33 ULBs /AM (m) 2018 நாள்.15.10.2018 ல் 7000 எண்ணிக்கையிலான குடிநீர் வீட்டு இணைப்புகள் பகிர்மான குழாயிலிருந்து வீட்டின் குழாய் இணைப்பு வழங்க வேண்டி GST மற்றும் இதர கட்டாய வழிவகைகள் தவிர திட்ட செலவினம் ரூ. 200.77 லட்சத்திற்கு வட்டியில்லா கடன் சுழல் நிதியின் கீழ் மேற்கொள்ள ஒப்புதல் கடிதம் வழங்கியுள்ளது.

எனவே மதிப்பீட்டுத் தொகை ரூ.232.00 லட்சத்தில் கடன் தொகை ரூ. 200.77 லட்சத்திற்கு போக மீதமுள்ள தொகையான 31.23 லட்சத்திற்கு நகராட்சி நிதி நிலையினை கருத்தில் கொண்டு உள்கட்டமைப்பு இடைவெளி நிரப்பு மற்றும் இயக்குதல், பராமரிப்பு நிதி அல்லது IUDM திட்ட நிதியில் இருந்து நிதி ஒதுக்கீடு செய்து தருமாறும், அனைத்து வீடுகளுக்கும் குடிநீர் வீட்டிணைப்பு வழங்கும் பணிகளை ரூ.232.00இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ள அனுமதிக்கவும் இணைப்பு வழங்கிய பிறகு குடியிருப்பு உரிமையாளர்களிடம் இருந்து தவணை முறையில் இத்தொகையினையும் மற்றும் முன் வைப்பு தொகையினையும் பயனீட்டாளர் கட்டணத்துடன்

சேர்த்து வசூல் செய்து கொள்ளவும் நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களுக்கு அனுப்பி திருத்திய நிதி ஆதாரத்திற்கு நிர்வாக அனுமதி பெறவும் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு

மன்றம் அனுமதிக்கலாம்

**(ந.க.எண்.686/2018/அ5)**

**தீர்மாள எண். 208 நாள் 02.11.2018**

அனுமதிக்கப்பட்டது

**3)** மேட்டூர் நகராட்சிக்கு உட்பட்ட சமுதாய கழிப்பிடங்கள் 30 எண்ணிக்கையில் உள்ளது அவற்றில் செய்யப்பட்டுள்ள குடிநீர் வசதி மற்றும் மின் வசதிகளில் ஏற்பட்டுள்ள பழுதுகளை சரி செய்து பராமரிக்கும் பணிக்கு ரூ.6.00 இலட்சம் மதிப்பீட்டில் ஒப்பந்தபுள்ளிகள் கோரியதில் 31.07.2018ம் தேதியன்று வரப்பெற்ற கீழ்க்காணும் இரண்டு ஒப்பந்தபுள்ளிகள் மன்றத்தின் முடிவிற்கு வைக்கப்படுகிறது.

| வ. எண். | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி சதவிகிதம் அதிகம்/குறைவு |
|---|---|---|
| 1 | திருவாளர்.கே.கோவிந்தன், ஒப்பந்தததாரர் பூசாரிப்பட்டி | 0.25% குறைவு |
| 2 | திருவாளர்.பவுணாம்பாள் கன்ஷ்ட்ரக்சன்ஸ் | 1.58% அதிகம் |

***அலுவலக குறிப்பு:***

1. அவசர அவசியம் கருதி தனி அலுவலர் முன்அனுமதி பெற்று மன்ற அனுமதியை எதிர்நோக்கி ஒப்பந்தப்புள்ளி கோரியமைக்கு மன்றம் ஏற்கலாம்.
2. வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தபுள்ளிகளின் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட 0.25% சதவீதம் குறைவாக ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் கொடுத்துள்ள திருவாளர்.கே.கோவிந்தன் ஒப்பந்ததாரர் ஒப்பந்தபுள்ளியினை மன்றம் ஏற்றுக் கொள்ளலாம்.
3. அவசர அவசியம் கருதி தனி அலுவலர் முன்னனுமதி பெற்று மன்ற அனுமதியினை எதிர்நோக்கி பணி உத்திரவு வழங்கியமைக்கு மன்றம் ஏற்கலாம்.

**(ந.க.எண்.3438/2018/இ1)**

**தீர்மாள எண். 209 நாள் 02.11.2018**

அனுமதிக்கப்பட்டது

**4)** இந்நகராட்சியில் பழைய சுத்திகரிப்பு நிலையத்தில் Chlorine cylinder – யை இறக்க மற்றும் ஏற்ற OHT Crane வசதி செய்தல் பணிக்கு ரூ.4.00 இலட்சம் மதிப்பீட்டில் ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் 25.09.2018ம் தேதியன்று வரப் பெற்ற கீழ்க்காணும் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் முடிவிற்கு வைக்கப்படுகிறது.

| வ. எண். | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி சதவிகிதம் அதிகம்/குறைவு |
|---|---|---|
| 1 | கே.கோவிந்தன், பூசாரிப்பட்டி, ஓமலூர், சேலம் | 0.15% குறைவு |
| 2 | M.ராமசாமி 8/37 பெரிய வனவாசி, மேட்டூர் அணை | 0.57% அதிகம் |

<u>அலுவலகக் குறிப்பு</u>

1) செலவினம் ரூ.4.00 இலட்சம் குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் ஏற்கலாம்.

2) அவசர அவசியம் கருதி தனிஅலுவலர் முன்அனுமதி பெற்று மன்ற அனுமதியை எதிர்நோக்கி ஒப்பந்தப்புள்ளி கோரியமைக்கு மன்றம் ஏற்கலாம்

3) வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்துபுள்ளிகளில் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட 0.15% குறைவாக ஒப்பந்துபுள்ளி விலை விகிதம் கொடுத்துள்ள திருவாளர் கே.கோவிந்தன் பூசாரிப்பட்டி ஒப்பந்ததாரரது ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஏற்றுக் கொள்ளலாம்.

4) அவசர அவசியம் கருதி தனி அலுவலர் முன்அனுமதி பெற்று மன்ற அனுமதியை எதிர்நோக்கி பணி உத்திரவு வழங்கியமைக்கு மன்றம் ஏற்கலாம்

**(ந.க.எண். 4626 /2018/இ1)**

**தீர்மாள எண். 210 நாள் 02.11.2018**

அனுமதிக்கப்பட்டது

5) மேட்டூர் நகராட்சிக்கு சொந்தமான தலைமை சுத்திகரிப்பு நிலையம், புதிய சுத்திகரிப்பு நிலையம், ஆற்று நீரேற்று நிலையங்கள், நீர் உந்து நிலையம் மற்றும் அலுவலகங்கள் ஆகியவற்றில் எரியும் மின் விளக்குகளுக்கு மின் உதிரி பாகங்கள் வாங்குவதற்கு உத்தேச செலவினம் ரூ.50,000/– ஆகும் மேற்கண்ட செலவினத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு

1) மன்றம் அனுமதிக்கலாம்
2) இதற்காகும் செலவினத்தை குடிநீர் நிதியிலிருந்து மேற்க்கொள்ளலாம்.

**(ந.க.எண்.4791/2018/இ1)**

**தீர்மாள எண். 211 நாள் 02.11.2018**

அனுமதிக்கப்பட்டது

ஆணையாளர் (ம) தனி அலுவலர்,

மேட்டூர் நகராட்சி.

<u>நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை</u>
<u>மேட்டூர் நகராட்சி</u>

மேட்டூர் நகராட்சியின் சாதாரணக் கூட்டம் நகர்மன்றத்தில் நகராட்சியின் தனி அலுவலர் அவர்களால் **13.11.2018** ம் தேதி பிற்பகல் **4.00** மணிக்கு நடைபெற உள்ளது.

<u>மன்றப் பொருள்</u>

1) மேட்டூர் நகரின் அனைத்து வார்டுகளிலும் பாதாள சாக்கடை திட்டம் அமைக்க தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மூலம் தயாரிக்கப்பட்ட விரிவான திட்ட மதிப்பீடு ரூ.7308.78 இலட்சத்திற்கு அரசாணை (D) எண்.25 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை (ந.நி.III) நாள்.27.01.2014–ல் சிறிய மற்றும் நடுத்தர நகரங்களுக்கான உள்கட்டமைப்பு வசதி திட்டத்தில் மேற்கொள்ள நிர்வாக அனுமதி வழங்கப்பட்டது. அதன்படி இப்பணிகள் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தினரால் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை–5 அவர்களின் செயல்முறை கடித ந.க.எண்.99997/2018/UGSS நாள்.23.05.2018– ல் படி TUFIDCO வட்டியில்லாகடன் மூலம் 8800 வீட்டு கழிவுநீர் இணைப்புகள் வீட்டின் உட்புறத்தில் மேற்கொள்ளுதல் பணியினை ரூ.600.00 இலட்சத்தில் (Phase-I) மேற்கொள்ள நிர்வாக அனுமதி வழங்கப்பட்டது. இப்பணியினை மேற்கொள்ள 30.07.18ல் இரண்டாவது முறை ஒப்பந்த புள்ளி கோரியதில் வரப்பெற்ற கீழ்க்கண்ட இரண்டு ஒப்பந்தபுள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண். | ஒப்பந்ததாரர் பெயர் மற்றும் முகவரி |
|---|---|
| 1 | திரு.சண்முகவேல், ஒப்பந்ததாரர், முல்லை நகர், சூரமங்கலம், சேலம் |
| 2 | M/S ஆண்டவர் கன்ஷ்ரக்சன்ஸ், ஒப்பந்ததாரர், மேற்கு மெயின் ரோடு , மேட்டூர் |

வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தபுள்ளிகளையும் இந்நகராட்சியின் ஒப்பந்த கூர்ந்தாய்வு குழு மூலம் கூர்ந்தாய்வு செய்ததில் வரப்பெற்ற இரண்டு ஒப்பந்த புள்ளிகளும், தகுதி பெற்றுள்ள ஒப்பந்தபுள்ளிகள் ஆகும். ஆதலால், ஒப்பந்த புள்ளிகளின் விலைவிகித பட்டியல் 05.09.2018ல் திறக்கப்பட்டு அதன் ஒப்புநோக்கு பட்டியல் கீழ்கண்டவாறு தயார் செய்யப்பட்டுள்ளது

| வ. எண். | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி சதவிகிதம் அதிகம்/குறைவு |
|---|---|---|
| 1 | திரு.சண்முகவேல், ஒப்பந்ததாரர், முல்லை நகர், சூரமங்கலம், சேலம் | 15.26% அதிகம் |
| 2 | M/S ஆண்டவர் கன்ஷ்ரக்சன்ஸ், ஒப்பந்ததாரர், மேற்கு மெயின் ரோடு , மேட்டூர் அணை | 13.03% அதிகம் |

மேற்கண்ட பணிக்கு குறைந்த ஒப்பந்த புள்ளியாக , மதிப்பீட்டை விட 13.03% கூடுதலாக வழங்கியுள்ள M/S ஆண்டவர் கன்ஷ்ரக்சன்ஸ், மேற்கு மெயின் ரோடு , மேட்டூர் அணை அவர்களுக்கு விலை குறைப்பு செய்து தர கோரி 11.09.2018ல் விலை குறைப்பு கடிதம் அனுப்பப்பட்டதில் ஒப்பந்ததாரர் தனது 14.09.2018 ம் தேதிய கடிதத்தில் மதிப்பீட்டை விட கூடுதலாக 11.00% வழங்கி ஒப்பந்தபுள்ளி விகிதத்தை குறைத்து சம்மதம் தெரிவித்துள்ளார்.

ஒப்பந்தபுள்ளி விகிதம் 11.00% மதிப்பீட்டை விட கூடுதலாக இருப்பதால் விலை குறைப்பு செய்து தர கோரி 18.09.2018ல் இரண்டாவது முறையாக விலை குறைப்பு கடிதம் அனுப்பப்பட்டதில் ஒப்பந்ததாரர் விலை குறைப்பு குறித்து எந்தவொரு அறிவிப்பும் செய்யவில்லை மேலும் விலை குறைப்பு செய்து தர கோரி 10.10.2018ல் மூன்றாவது முறையாக விலை குறைப்பு கடிதம் அனுப்பப்பட்டதில் 07.11.2018 ம் தேதிய கடிதத்தில் சில இனங்களில் விலை விகிதத்தினை குறைத்து கொடுத்துள்ளார். அதன் படி ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டதில் 4.98% மதிப்பீட்டை விட அதிகமாக உள்ளது. இப்பணிக்கான மதிப்பீடு 2016–2017 ஆம் ஆண்டின்

செந்தூர விலைவிகித பட்டியலின்படி தயார் செய்யப்பட்டு தொழில்நுட்ப அனுமதி பெறப்பட்டது. தற்போது 2018–2019ம் ஆண்டின் செந்தூர விலைவிகித பட்டியல் வரப்பெற்றுள்ளது.

அதன் அடிப்படையில் உள்ளூர் விலை விகிதத்தின்படி ஒப்புநோக்கியதில் மேற்படி விலைவிகிதம் உள்ளூர் மார்க்கெட் விலைவிகிதங்களை அனுசரித்துள்ளதாலும் இரண்டாவது அழைப்பில் பெறப்பட்ட ஒப்பந்தபுள்ளி என்பதாலும் M/S ஆண்டவர் கன்ஷ்ரக்சன்ஸ், மேற்கு மெயின் ரோடு , மேட்டூர் அணை என்பவர் மதிப்பீட்டை விட கூடுதலாக 4.98% அதிகமாக வழங்கிய ஒப்பந்தபுள்ளியை, பொறியியல் வழிகாட்டு நூலின் குறிப்புகளின்படி ஏற்க மன்றத்தின்அனுமதிக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு:</u>

மன்றம் அனுமதி வழங்கலாம்

**(ந.க.எண்.686/2018/இ1)**

**தீர்மாள எண். 212 நாள் 13.11.2018**

அனுமதிக்கப்பட்டது

2) மேட்டூர் நகரின் அனைத்து வார்டுகளிலும் பாதாள சாக்கடை திட்டம் அமைக்க தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மூலம் தயாரிக்கப்பட்ட விரிவான திட்ட மதிப்பீடு ரூ.7308.78 இலட்சத்திற்கு அரசாணை (D) எண்.25 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை (ந.நி.III) நாள்.27.01.2014–ல் சிறிய மற்றும் நடுத்தர நகரங்களுக்கான உள்கட்டமைப்பு வசதி திட்டத்தில் மேற்கொள்ள நிர்வாக அனுமதி வழங்கப்பட்டது. அதன்படி இப்பணிகள் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தினரால் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை–5 அவர்களின் செயல்முறை கடித ந.க.எண்.99997/2018/UGSS நாள்.23.05.2018– ல் படி TUFIDCO வட்டியில்லாகடன் மூலம் 1200 வீட்டு கழிவுநீர் இணைப்புகள் வீட்டின் உட்புறத்தில் மேற்கொள்ளுதல் பணியினை ரூ.90.00 இலட்சத்தில் (Phase-II) மேற்கொள்ள நிர்வாக அனுமதி வழங்கப்பட்டது. இப்பணியினை மேற்கொள்ள 30.07.18ல் இரண்டாவது முறை ஒப்பந்த புள்ளி கோரியதில் வரப்பெற்ற கீழ்க்கண்ட இரண்டு ஒப்பந்தபுள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண். | ஒப்பந்ததாரர் பெயர் மற்றும் முகவரி |
|---|---|
| 1 | திரு.சண்முகவேல், ஒப்பந்ததாரர், முல்லை நகர், சூரமங்கலம், சேலம் |
| 2 | M/S ஆண்டவர் கன்ஷ்ரக்சன்ஸ், ஒப்பந்ததாரர், மேற்கு மெயின் ரோடு , மேட்டூர் |

வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தபுள்ளிகளையும் இந்நகராட்சியின் ஒப்பந்த கூர்ந்தாய்வு குழு மூலம் கூர்ந்தாய்வு செய்ததில் வரப்பெற்ற இரண்டு ஒப்பந்த புள்ளிகளும், தகுதி பெற்றுள்ள ஒப்பந்தபுள்ளிகள் ஆகும். ஆதலால், ஒப்பந்த புள்ளிகளின் விலைவிகித பட்டியல் 05.09.2018ல் திறக்கப்பட்டு அதன் ஒப்புநோக்கு பட்டியல் கீழ்கண்டவாறு தயார் செய்யப்பட்டுள்ளது

| வ. எண். | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி சதவிகிதம் அதிகம்/குறைவு |
|---|---|---|

| | | |
|---|---|---|
| 1 | திரு.சண்முகவேல், ஒப்பந்ததாரர், முல்லை நகர், சூரமங்கலம், சேலம் | 17.22% அதிகம் |
| 2 | M/S ஆண்டவர் கன்ஷ்ரக்சன்ஸ், ஒப்பந்ததாரர், மேற்கு மெயின் ரோடு , மேட்டூர் அணை | 13.03% அதிகம் |

மேற்கண்ட பணிக்கு குறைந்த ஒப்பந்த புள்ளியாக , மதிப்பீட்டை விட **13.03%** கூடுதலாக வழங்கியுள்ள M/S ஆண்டவர் கன்ஷ்ரக்சன்ஸ், மேற்கு மெயின் ரோடு , மேட்டூர் அணை அவர்களுக்கு விலை குறைப்பு செய்து தர கோரி **11.09.2018**ல் விலை குறைப்பு கடிதம் அனுப்பப்பட்டதில் ஒப்பந்ததாரர் தனது **14.09.2018** ம் தேதிய கடிதத்தில் மதிப்பீட்டை விட கூடுதலாக **11.00%** வழங்கி ஒப்பந்தபுள்ளி விகிதத்தை குறைத்து சம்மதம் தெரிவித்துள்ளார்.

ஒப்பந்தபுள்ளி விகிதம் **11.00%** மதிப்பீட்டை விட கூடுதலாக இருப்பதால் விலை குறைப்பு செய்து தர கோரி **18.09.2018**ல் இரண்டாவது முறையாக விலை குறைப்பு கடிதம் அனுப்பப்பட்டதில் ஒப்பந்ததாரர் விலை குறைப்பு குறித்து எந்தவொரு அறிவிப்பும் செய்யவில்லை மேலும் விலை குறைப்பு செய்து தர கோரி **10.10.2018**ல் மூன்றாவது முறையாக விலை குறைப்பு கடிதம் அனுப்பப்பட்டதில் **07.11.2018** ம் தேதிய கடிதத்தில் சில இனங்களில் விலை விகிதத்தினை குறைத்து கொடுத்துள்ளார். அதன் படி ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டதில் **4.98%** மதிப்பீட்டை விட அதிகமாக உள்ளது. இப்பணிக்கான மதிப்பீடு **2016–2017** ஆம் ஆண்டின் செந்தூர விலைவிகித பட்டியலின்படி தயார் செய்யப்பட்டு தொழில்நுட்ப அனுமதி பெறப்பட்டது. தற்போது **2018–2019**ம் ஆண்டின் செந்தூர விலைவிகித பட்டியல் வரப்பெற்றுள்ளது.

அதன் அடிப்படையில் உள்ளூர் விலை விகிதத்தின்படி ஒப்புநோக்கியதில் மேற்படி விலைவிகிதம் உள்ளூர் மார்க்கெட் விலைவிகிதங்களை அனுசரித்துள்ளதாலும் இரண்டாவது அழைப்பில் பெறப்பட்ட ஒப்பந்தபுள்ளி என்பதாலும் M/S ஆண்டவர் கன்ஷ்ரக்சன்ஸ், மேற்கு மெயின் ரோடு , மேட்டூர் அணை என்பவர் மதிப்பீட்டை விட கூடுதலாக **4.98%** அதிகமாக வழங்கிய ஒப்பந்தபுள்ளியை, பொறியியல் வழிகாட்டு நூலின் குறிப்புகளின்படி ஏற்க மன்றத்தின்அனுமதிக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு:</u>**

மன்றம் அனுமதி வழங்கலாம்

**(ந.க.எண்.686/2018/இ1)**

**தீர்மாள எண். 213 நாள் 13.11.2018**

**அனுமதிக்கப்பட்டது**

**3)** மேட்டூர் அணை தண்ணீர் திறப்பு விழாவிற்கு **19.07.2018** அன்று மாண்புமிகு தமிழக முதல்வர் திரு. எடப்பாடி கே.பழனிசாமி அவர்களையும் மாண்புமிகு துணை முதலமைச்சர் திரு.ஓ.பன்னீர் செல்வம் அவர்களையும் நகராட்சி அலுவலகம் மற்றும் பணியாளர் சார்பாக வரவேற்றமைக்கு தின செய்தி நாளிதழில் வெளியிடப்பட்டமைக்கு விளம்பர கட்டணமாக ரூ.**8820/–**க்கான பட்டியல் வரப்பெற்றுள்ளது. மேற்கண்ட பட்டியல் தொகை வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

***<u>அலுவலக குறிப்பு:</u>***

4. மன்றம் அனுமதிக்கலாம்.

5. இதற்காகும் செலவினத்தை பொது நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.

**(ந.க.எண்.3802/2010/இ1)**

**தீர்மாள எண். 214 நாள் 13.11.2018**

**அனுமதிக்கப்பட்டது**

4) மேட்டூர் நகராட்சியின் அனைத்து பிரிவு கணினிகள் மற்றும் பிரிண்டர்களுக்கு 2018–2019 – ஆம் ஆண்டிற்கான வருடாந்திர பராமரிப்பு பணிகளை (Asset Management Company) திருவாளர் ஸ்பைடர் டெக்னாலஜி மூலம் பழுதுகள் சரி செய்து தர மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு**

5) மன்றம் அனுமதிக்கலாம்.

6) இதற்காகும் செலவினத்தை பொது நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.

**(ந.க.எண். 5541 /2018/இ1)**

**தீர்மாள எண். 215 நாள் 13.11.2018**

**அனுமதிக்கப்பட்டது**

5) மேட்டூர் நகராட்சி தலைமை சுத்திகரிப்பு நிலையத்தில் உள்ள படிகார அறையில் Agitator மோட்டார் பொருத்தவும் மேற்கண்ட அறையினை மராமத்து பணிகள் மேற்கொள்ள தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டு தொகை ரூ. 1,20,000/– ஆகும். மேற்கண்ட செலவினத்தை மேற்க் கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு**

1) மன்றம் அனுமதிக்கலாம்.

2) இதற்காகும் செலவினத்தை குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.

**(ந.க.எண். 5508 /2018/இ1)**

**தீர்மாள எண். 216 நாள் 13.11.2018**

**அனுமதிக்கப்பட்டது**

6) மேட்டூர் நகராட்சி தங்கமாபுரிபட்டிணம் நீர் உந்து நிலையத்தில் உள்ள 10HP SUBMERSIBLE மேட்டார் காயில் பழதடைந்துள்ளதை சரி செய்ய தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ. 58,000/– ஆகும். மேற்கண்ட 10HP SUBMERSIBLE Motor காயிலை புதுப்பிக்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு**

1) மன்றம் அனுமதிக்கலாம்.

2) இதற்காகும் செலவினத்தை குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.

**(ந.க.எண். 5506 /2018/இ1)**

**தீர்மாள எண். 217 நாள் 13.11.2018**

அனுமதிக்கப்பட்டது

7) மேட்டூர் நகராட்சி பகுதி மாதையன் குட்டை க.எண். 10/125 இராஜாஜிநகர், மேட்டூர் அணையில் வசிக்கும் திரு. அங்குராஜ் த/பெ. அங்கப்பன் என்பவர் தனது சொத்திற்கு 1 முதல் 5 வரையிலான பிரதிவாதிகளோ அவர்களது ஆட்களோ, கூலியாட்களோ முகவர்களோ எவ்வித இடையூறும் செய்ய கூடாது என நிரந்தர தடையுத்தரவு கோரி மேட்டூர் சார்பு நீதி மன்றத்தில் O.S.No.184/2018– வழக்கு தொடர்ந்து ஆணையாளர் மேட்டூர் நகராட்சி அவர்களை 6 ம் பிரதி வாதியாக சேர்க்கப்பட்டு வழக்கு தொடர்ந்து உள்ளார். மேற்படி வழக்கினை நகராட்சி வழக்கறிஞர் திரு. TMA இனியன் அவர்களிடம் ஒப்படைத்து நகராட்சி சார்பாக ஏற்று நடத்திடவும் இதற்கு செலவாகும். வழக்கறிஞர் கட்டணம் அனைத்திற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலகக் குறிப்பு</u>

1) மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண். 4640/2018/எப்1)**

**தீர்மாள எண். 218 நாள் 13.11.2018**

அனுமதிக்கப்பட்டது

8) மேட்டூர் நகராட்சி பகுதியில் உள்ள V.P.K. நகர் பகுதியில் வசிக்கும் திரு. ராமர் த/பெ. மாரியப்பன் என்பவர் சொத்துவரி விதிக்கப்பட்டது சம்மந்தமாக மேட்டூர் சார்பு நீதி மன்றத்தில் OS 67/18 மூலம் வழக்கு தொடர்ந்து அதில் ஆணையர் மேட்டூர் நகராட்சி அவர்களை 6 வது பிரதிவாதி சேர்த்து வழக்கு தொடர்ந்துள்ளார். மேற்படி வழக்கினை நகராட்சி வழக்கறிஞர் திரு. TMA இனியன் அவர்களிடம் ஒப்படைத்து நகராட்சி சார்பாக ஏற்று நடத்திடவும், இதற்கு செலவாகும் வழக்கறிஞர் கட்டணம் அனைத்திற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலகக் குறிப்பு</u>

1) மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண். 1408 /2018/எப்1)**

**தீர்மாள எண். 219 நாள் 13.11.2018**

அனுமதிக்கப்பட்டது

9) மேட்டூர் நகராட்சி பகுதியில் குள்ளவீரன் பட்டி கதவு எண். 54 A 26 ல் வசிக்கும் திரு. சக்திவேல் த/பெ. முருகன் என்பவர் சொத்துவரி பெயர் மாற்றம் செய்ய கூடாது என மேட்டூர் சார்பு நீதி மன்றத்தில் I A524 / 2018 in O.S.175/2018 வழக்கு தொடர்ந்து ஆணையாளர் மேட்டூர் நகராட்சி அவர்களை இரண்டாம் பிரதிவாதியாக சேர்க்கப்பட்டுள்ளது.

மேற்படி வழக்கினை நகராட்சி வழக்கறிஞர் திரு. T.M.A இனியன் அவர்களிடம் ஒப்படைத்து நகராட்சி சார்பாக ஏற்று நடத்திடவும் இதற்கு செலவாகும் வழக்கறிஞர் கட்டணம் அனைத்திற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலகக் குறிப்பு</u>

1) மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண். 4330 /2018/எப்1)**

**தீர்மாள எண். 220 நாள் 13.11.2018**

அனுமதிக்கப்பட்டது

10) மேட்டூர் நகராட்சி பகுதியில் உள்ள இராஜகணபதி நகரில் வசிக்கும் டாக்டர் கே.பாஸ்கரன் த/பெ. கைலாசம் டாக்டர் இளவரசி க/பெ. பாஸ்கரன் ஆகியோர் வீட்டின் முன்பு அமைக்கப்பட்டுள்ள சிமெண்ட் கான்கீரிட் தளத்தை அகற்றாமல் இருக்க தடை உத்திரவு கோரி I A168/2018 in O.S.No.70/2018 மூலம் வழக்கு தொடர்ந்துள்ளார்.

மேற்படி வழக்கினை நகராட்சி வழக்கறிஞர் திரு. T.M.A இனியன் அவர்களிடம் ஒப்படைத்து நகராட்சி சார்பாக ஏற்று நடத்திடவும் இதற்கு செலவாகும் வழக்கறிஞர் கட்டணம் அனைத்திற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலகக் குறிப்பு</u>

1) மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண். 1490 /2018/எப்1)**

**தீர்மாள எண். 221 நாள் 13.11.2018**

அனுமதிக்கப்பட்டது

11) மேட்டூர் நகராட்சி பகுதி தங்கமாபுரிபட்டிணம் கதவு எண்.20ல் வசிக்கும் திரு.R.செந்தில் குமார் த/பெ ராமசாமி என்பவர் நகராட்சியால் வழங்கப்பட்ட அறிவிப்பை பெற்று கொண்டு (1055/18/எப்1) அறிவிப்பு செல்லாது என டிக்ளர் செய்யவும், தாவா சொத்தை இடிக்கவோ சேதபடுத்தவோ கூடாது என நிரந்தர உறுத்து கட்டளை கோரி சேலம் விடுமுறை கால மாவட்ட நீதிபதி நீதி மன்றத்தில் வழக்கு தொடர்ந்து அதில் ஆணையர் மேட்டூர் நகராட்சி அவர்களை எதிர்மனுதாரராக சேர்ந்து அசல் வழக்கு எண்,44/18 மூலம் வழக்கு தொடர்ந்துள்ளார். மேற்படி

வழக்கிற்கு மேட்டூர் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம் புதியதாக அசல் வழக்கு எண்.62/18 வழங்கியுள்ளது.

மேற்படி வழக்கினை நகராட்சி வழக்கறிஞர் திரு.TMA. இனியன் அவர்களிடம் ஒப்படைத்து நகராட்சி சார்பாக ஏற்று நடத்திடவும் இதற்கு செலவாகும் வழக்கறிஞர் கட்டணம் அனைத்திற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு:

மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண்.1055/18/எப்1)**

**தீர்மாள எண். 222 நாள் 13.11.2018**

அனுமதிக்கப்பட்டது

12) மேட்டூர் நகராட்சி பகுதியில் உள்ள தூக்கனாம்பட்டி கதவு எண்.15.20A1 ல் வசிக்கும் திரு.S.L முனுசாமி த/பெ லட்சுமண கவுண்டர் என்பவர் சொத்து பிரச்சனை காரணமாக மேட்டூர் மாவட்ட உரிமையியல் நீதி மன்றத்தின்.O.S.No.5t/2017 மூலம் வழக்கு தொடர்ந்துள்ளார். மேற்படி வழக்கில் ஆணையர் மேட்டூர் நகராட்சி அவர்களை 5ம் பிரதிவாதியாக சேர்க்கப்பட்டுள்ளது.

இவ்வழக்கினை நகராட்சி வழக்கறிஞர் திரு.TMA. இனியன்BA LLB அவர்களிடம் ஒப்படைத்து நகராட்சி சார்பாக ஏற்று நடத்திடவும் இதற்கு செலவாகும் வழக்கறிஞர் கட்டணம் அனைத்திற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு:

மன்றம் அனுமதிக்கலாம்

**(ந.க.எண்.1003/2017/எப்1)**

**தீர்மாள எண். 223 நாள் 13.11.2018**

அனுமதிக்கப்பட்டது

13) மேட்டூர் நகராட்சியின் பொது சுகாதாரப் பிரிவின் மலேரியா பணியாளராக பணியாற்றிய திரு.சதீஸ்குமார், 20.04.2014ந் தேதியில் இறந்துவிட்டார் அவர் மேட்டூர் நகராட்சி பணியாளர்கள் கூட்டுறவு கடன் சங்கத்தில் கடன் பெற்றுள்ள தொகையை செலுத்தாத காரணத்தால் ஜாமீன் கையொப்பம் அளித்த திரு.ஆர்.பலராமன் துப்புரவு பணி மேற்பார்வையாளர் மாத ஊதியத்தில் பிடித்தம் செய்வது சம்மந்தமாக மேட்டூர் மாவட்ட உரிமையியல் நீதி மன்றத்தில் Os No.54/2017 மூலம் வழக்கு தொடர்ந்துள்ளார். மேற்படி வழக்கில் ஆணையர் மேட்டூர் நகராட்சி அவர்களை முதல் பிரதிவாதியாக சேர்ந்து வழக்கு தொடர்ந்துள்ளார். இவ்வழக்கினை நகராட்சி வழக்கறிஞர் திரு.TMA.இனியன் BA..., LLB, அவர்களிடம் ஒப்படைத்து நகராட்சி சார்பாக ஏற்று நடத்திடவும் இதற்கு செலவாகும் வழக்கறிஞர் கட்டணம் அனைத்திற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு:

மன்றம் அனுமதிக்கலாம்

**(ந.க.எண்.1071/2017/எப்1)**

**தீர்மாள எண். 224 நாள் 13.11.2018**

அனுமதிக்கப்பட்டது

14) தமிழ்நாடு சட்ட பேரவையில் 2018–2019– ம் ஆண்டிற்கான நகராட்சி நிர்வாக மற்றும் குடிநீர் வழங்கல் துறைக்கான மானியக் கோரிக்கை விவாதித்த போது மாண்புமிகு நகராட்சி நிர்வாக மற்றும் குடிநீர் வடிகால், சிறப்பு திட்ட செயலாக்கத்துறை அமைச்சர் அவர்கள் "**மாநகராட்சிகள் மற்றும் நகராட்சிகளில் உள்ள அனைத்து வார்டுகளிலும் உயர்தரம் வாய்ந்த குடிநீர் மிகக் குறைந்த விலையில் வழங்க தானியங்கு குடிநீர் மையங்கள் (Automatic vending Centres) நிறுவப்படும்**" என்ற அறிவிப்பினை வெளியிட்டார்கள்.

தானியங்கும் குடிநீர் மையங்கள் நாள் ஒன்றுக்கு 10,000 லிட்டர் வீதம் விநியோகிக்கும் திறன் கொண்டதாகும். மேட்டூர் நகராட்சியில் உள்ள 30 வார்டுகளிலும் உள்ள மக்கள் இத்திட்டத்தினால் கீழ்கண்டவாறு பயன்பெறும் வகையில் பொதுமக்களுக்கு உயர்தரம் வாய்ந்த குடிநீர் வழங்கப்படும்.

1. மூலதன செலவினம் தனியார் தொழில் நிறுவனங்களை/ தொழில் முனைவோர்களை சார்ந்ததாகும்.(CSR & Other funds)
2. இயக்குதல் மற்றும் பராமரிப்பிற்கான செலவினங்கள், பயனீட்டாளர்களிடமிருந்து பெறப்படும் கட்டணத்தை வைத்தே முழுமையாக மேற்கொள்ளப்படும்
3. மின் கட்டணம் தன்னார்வ தொண்டு நிறுவனங்களைச் சார்ந்ததாகும்.
4. பொது மக்களுக்கு 1 லிட்டர் சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் 35 பைசா என்ற விகிதத்தில், 20 லிட்டர் குடிநீர் ரூ.7/க்கு வழங்கப்படும்
5. அனைத்து குடியிருப்புகளும் பயன்பெரும் வகையில் ரூ.50/– மதிப்பீட்டில் ஒரு குடும்பத்திற்கு 1 வீதம் Smart Card தனியார் தொழில் நிறுவனம்/ தொண்டு நிறுவனத்தால் வழங்கப்படும்.
6. நகர்ப்புர உள்ளாட்சி அமைப்பு மூலம் நிலையம் அமைப்பதற்கான இடம் மற்றும் குடிநீர் ஆதாரம் மட்டும் செய்து தரப்படும். இதனை தவிர நகர்ப்புற உள்ளாட்சி அமைப்பிற்கு எவ்வித செலவினமும் இல்லை. இதில் நிலம். தரை வாடகை அடிப்படையில் வருடத்திற்கு ஒரு.ச.மீக்கு ரூ.1/– என்ற அடிப்படையில் நிர்ணயம் செய்யப்பட வேண்டும்.

நகராட்சிகளில் உள்ள அனைத்து வார்டுகளிலும் ஒவ்வொரு குடிநீர் மையங்கள் அமைக்க தேர்வு செய்யப்படும் இடங்கள் அம்மா உணவகங்கள் அருகிலோ, அரசு மருத்துவமனை, பேருந்து நிலையம் மற்றும் கடைவீதிகளின் அருகிலோ, வீட்டு பகுதிகளை பொருத்த வரையில் சிறு மின்விசை பம்புகள் உள்ள இடமோ மேல்நிலை நீர்தேக்க தொட்டி உள்ள இடமோ அல்லது உள்ளாட்சி அமைப்புகள் ஒப்படைக்கப்பட்ட திறந்த வெளி இடமாகவோ இருக்குமாறு தேர்வு செய்யப்பட வேண்டும். ஒவ்வொரு இடங்களிலும் இவ்வாறு அமைக்க தலா ரூ.18.00 இலட்சம் மதிப்பீடு ஆகும். 30 இடங்களிலும் நிறுவுவதற்கு உத்தேச மதிப்பீடு ரூ.540.00 இலட்சம் ஆகும்.

மேலும் மாண்புமிகு நகராட்சி நிர்வாக மற்றும் குடிநீர் வடிகால், சிறப்பு திட்ட செயலாக்கத்துறை அமைச்சர் அவர்களின் அறிவிப்பினை செயல்படுத்தும் வகையில், மேட்டூர்

நகராட்சியில் உள்ள அனைத்து வார்டுகளிலும் வார்டுக்கு 1 வீதம் 30 தானியங்கு குடிநீர் மையங்கள் (Automatic vending centres) தனியார் தொழில் நிறுவனங்களுடன் / தொழில் முனைவோர்களும் இணைந்து சமூக பொறுப்புணர்வு மற்றும் பிரநிதியினை பெற்று (Corporate Social responsibility fund) செயல்படுத்தவும் அனுபவம் வாய்ந்த மற்றும் உரிய தொழில் நுட்ப நுணுக்கங்களை கொண்ட தனியார் தொழில் நிறுவனத்தினை தேர்வு செய்ய ஏதுவாக அந்தந்த உள்ளாட்சி அமைப்புகளில் " Expression of Interest" விளம்பரம் செய்து தனியார் தொழில் நிறுவனத்தினை தேர்வு செய்து, இயக்குதல் மற்றும் பராமரிப்பு பணிகளை மேற்கொள்ளப்பட வேண்டும். மேற்கண்ட வழிமுறைகளின் படி உரிய நடவடிக்கை எடுக்க நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் கடித .ந.க.எண்.17018/2018/குவ1 நாள்.23.08.2018ம் தேதிய கடிதத்தில் அறிவுறுத்தப்பட்டுள்ளது. மேற்கண்ட திட்டங்கள் செயல்படுத்துவது தொடர்பாக மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

மன்றம் அனுமதிக்கலாம்

1. இப்பணிகளை மேற்கொள்ள நிர்வாக அனுமதி மற்றும் (Expression of Interest ) கோருவதற்கு அனுமதி ஆகியவை கோரி நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களுக்கு பிரேரனை அனுப்ப மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண்.4984/2018/இ1)**

**தீர்மாள எண். 225 நாள் 13.11.2018**

**அனுமதிக்கப்பட்டது**

ஆணையாளர் (ம) தனி அலுவலர்,
மேட்டூர் நகராட்சி.

<u>நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை</u>
<u>மேட்டூர் நகராட்சி</u>

**மேட்டூர் நகராட்சியின் சாதாரணக் கூட்டம் நகர்மன்றத்தில் நகராட்சியின் தனி அலுவலர் அவர்களால் 23.11.2018 ம் தேதி பிற்பகல் 4.00 மணிக்கு நடைபெற உள்ளது.**

<u>மன்றப் பொருள்</u>

**1)** மேட்டூர் நகராட்சியில் நடைபெற்று வரும் வளர்ச்சி பணிகள் குறித்து சுதந்திர தின சிறப்பு தொழில் மலர் 2018 ன் தமிழ் முரசு நாளிதழில் 14.08.2018 ந் தேதி அன்று வெளியிட்டமைக்கு வரப்பெற்றுள்ள பட்டியல் தொகை ரூ.8,925/— ஆகும் மேற்கண்ட தொகையினை தமிழ் முரசு நாளிதழினை KAL PUBLICATIONS(P)LTD நிறுவனத்திற்கு வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலகக் குறிப்பு</u>

1. மன்றம் அனுமதிக்கலாம்
2. இதற்காகும் செலவினத்தை பொது நிதியிலிருந்து மேற்க்கொள்ளலாம்
3. அவசர அவசியம் கருதி தனி அலுவலர் முன்னனுமதி பெற்று மன்றம் அனுமதியினை எதிர்நோக்கி ரூ.8925/ஐ KAL PUBLICATIONS(P)LTD நிறுவனத்திற்கு வழங்கியமைக்கு மன்றம் ஏற்கலாம்.

**(ந.க.எண்.3802/2018/இ1)**

**தீர்மாள எண். 226 நாள் 23.11.2018**

**அனுமதிக்கப்பட்டது**

2) மேட்டூர் நகராட்சிக்குட்பட்ட 30 வார்டுகளிலும் உள்ள சிறுபாலங்கள் மழைக்காலங்களில் ஏற்படும் அடைப்பினை சீர் செய்யும் வகையில் 25 எண்ணிக்கைகளான குழாய் பாலங்கள் அமைக்க 2மீ நீளம் 1 அடி அகலம் கொண்ட Rcc Non Pressure Pipe- னை வாங்குதல் பணிக்கு உத்தேச செலவுத்தொகை ரூ.58,000/– ஆகும் மேற்கண்ட 25 எண்ணிக்கைகளான Rcc Non Pressure Pipe வாங்கி சேகரம் செய்ய மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலகக் குறிப்பு</u>

1. மன்றம் அனுமதிக்கலாம்
2. இதற்காகும் செலவினத்தை குடிநீர் நிதியிலிருந்து மேற்க்கொள்ளலாம்

**(ந.க.எண்.5628/2018/இ1)**

**தீர்மாள எண். 228 நாள் 23.11.2018**

அனுமதிக்கப்பட்டது

3) இந்நகராட்சியில் பொது சுகாதார பிரிவில் வாகன எண்.TN27W0535ன் பழுதுகளை சரிசெய்து வாகனத்தின் தகுதிச்சான்று புதுப்பித்தல் பணிக்கு ரூ.0.34 இலட்சம் மதிப்பீட்டில் ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் 24.08.2018ம் தேதியன்று வரப்பெற்ற கீழ்க்காணும் இரண்டு ஒப்பந்தபுள்ளிகள் மன்றத்தின் முடிவிற்கு வைக்கப்படுகிறது.

| வ. எண். | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி தொகை | ஒப்பந்தப்புள்ளி சதவிகிதம் அதிகம்/குறைவு |
|---|---|---|---|
| 1 | திருவாளர்.இலட்சுமி ஆட்டோ டீசல் ஒர்க்ஸ், மேட்டூர் | ரூ.33600.00 | குறைவு |
| 2 | திருவாளர் JVK ஆட்டோ டீசல் ஒர்க்ஸ், சேலம் | ரூ.34400.00 | அதிகம் |

<u>அலுவலகக் குறிப்பு</u>

7) செலவினம் ரூ.34000/– க்கு வருவாய் நிதியிலிருந்து பணியினை மேற்கொள்ளலாம்.

8) அவசர அவசியம் கருதி தனி அலுவலர் முன்னனுமதி பெற்று மன்ற அனுமதியினை எதிர் நோக்கி ஒப்பந்தபுள்ளி கோரியமைக்கு மன்றம் ஏற்கலாம்.

9) வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தபுள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளியாக ரூ.33600/– என குறைவான ஒப்பந்தபுள்ளி தொகை கொடுத்துள்ள திருவாளர் இலட்சுமி ஆட்டோ டீசல் ஒர்க்ஸ் ஒப்பந்ததாரரது ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஏற்றுக் கொள்ளலாம்.

10) அவசர அவசியம் கருதி தனி அலுவலர் முன்அனுமதி பெற்று மன்ற அனுமதியை எதிர்நோக்கி பணி உத்திரவு வழங்கியமைக்கு மன்றம் ஏற்கலாம்

**(ந.க.எண்.4529/2018/இ1)**

தீர்மாள எண். 228 நாள் 23.11.2018

அனுமதிக்கப்பட்டது

4) இந்நகராட்சியில் பொது சுகாதாரப்பிரிவில் TN27T7769ன் வாகனத்தின் தகுதி சான்று புதுப்பித்து வாகனத்தில் உள்ள பழுதுகளை சரிசெய்து மற்றும் GPRS கருவிகளை பொருத்துதல் பணிக்கு ரூ.68000.00 மதிப்பீட்டில் ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் 15.11.2018ம் தேதியன்று வரப்பெற்ற கீழ்காணும் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் முடிவிற்கு வைக்கப்படுகிறது.

| வ. எண். | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி தொகை | ஒப்பந்தப்புள்ளி சதவிகிதம் அதிகம்/குறைவு |
|---|---|---|---|
| 1 | திருவாளர்.இலட்சுமி ஆட்டோ டீசல் ஒர்க்ஸ், மேட்டூர் | ரூ.67000.00 | குறைவு |
| 2 | திருவாளர்.J.V.K ஆட்டோ டீசல் ஒர்க்ஸ் | ரூ.69000.00 | அதிகம் |

<u>அலுவலகக் குறிப்பு</u>

வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தபுள்ளியாக ரூபாய் 67000.00 என குறைவான ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள திருவாளர் இலட்சுமி ஆட்டோ டீசல் ஒர்க்ஸ் ஒப்பந்ததாரரது ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஏற்றுக் கொள்ளலாம்.

(ந.க.எண்.5254/2018/இ1)

தீர்மாள எண். 229 நாள் 23.11.2018

அனுமதிக்கப்பட்டது

5) இந்நகராட்சியில் சின்னபார்க்(காமத் பூங்கா) பகுதியில் ஆழ்துளை கிணறு அமைத்து தண்ணீர் வசதி செய்தல் பணிக்கு ரூ.4.80 இலட்சம் மதிப்பீட்டில் ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் 15.11.2018ம் தேதியன்று வரப்பெற்ற கீழ்க்காணும் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் முடிவிற்கு வைக்கப்படுகிறது.

| வ. எண். | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி தொகை | ஒப்பந்தப்புள்ளி சதவிகிதம் அதிகம்/குறைவு |
|---|---|---|---|
| 1 | M/S M.P.P&CO West main Road Mettur | – | 0.35% குறைவு |
| 2 | M.Andavar Construction west main road,mettur | – | 1.80% அதிகம் |

<u>அலுவலகக் குறிப்பு</u>

வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட 0.35% சதவீதம் குறைவாக ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் கொடுத்துள்ள M/s M.P.P & co ஒப்பந்ததாரரது ஒப்பந்தப்புள்ளி மன்றம் ஏற்றுக் கொள்ளலாம்.

**(ந.க.எண்.5194/2018/இ1)**

**தீர்மாள எண். 230 நாள் 23.11.2018**

அனுமதிக்கப்பட்டது

6) இந்நகராட்சியில் வார்டு எண்.23 கூலிலைன் பகுதியில் அங்கன்வாடி மையத்திற்கு கழிப்பிடம் தண்ணீர் வசதி மற்றும் சுற்றுசுவர் அமைத்தல் பணிக்கு ரூ.3.20இலட்சம் மதிப்பீட்டில் ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் 15.11.2018ம் தேதியன்று வரப்பெற்ற கீழ்க்காணும் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் முடிவிற்கு வைக்கப்படுகிறது.

| வ. எண். | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி தொகை | ஒப்பந்தப்புள்ளி சதவிகிதம் அதிகம்/குறைவு |
|---|---|---|---|
| 1 | திருவாளர்.கிருத்திகா கன்ஷ்ட்ரக்சன், மாடி லைன் சேலம்கேம்ப் | – | 0.20% குறைவு |
| 2 | திருவாளர்.ஆர்.ஆர்.கனிஷ்கா &கோ கூலி லைன் மேட்டூர் | – | 1.35% அதிகம் |

அலுவலகக் குறிப்பு

வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட 0.20% சதவீதம் குறைவாக ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் கொடுத்துள்ள திருவாளர் கிருத்திகா கன்ஷ்ட்ரக்சன் ஒப்பந்தததாரரது ஒப்பந்தப்புள்ளி மன்றம் ஏற்றுக் கொள்ளலாம்.

**(ந.க.எண்.5441/2018/இ1)**

**தீர்மாள எண். 231 நாள் 23.11.2018**

அனுமதிக்கப்பட்டது

7) இந்நகராட்சியில் பொன்னகர் நகராட்சி துவக்கப்பள்ளி வளாகத்தில் அங்கன்வாடி மையத்திற்கு கழிப்பிடம் மற்றும் தண்ணீர் வசதி செய்தல் பணிக்கு ரூ.4.80 இலட்சம் மதிப்பீட்டில் ஒப்பந்தபுள்ளிகள் கோரியதில் 15.11.2018ம் தேதியன்று வரப்பெற்ற கீழ்க்காணும் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் முடிவிற்கு வைக்கப்படுகிறது.

| வ. எண். | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி சதவிகிதம் அதிகம்/குறைவு |
|---|---|---|
| 1 | திருவாளர்.கிருத்திகா கன்ஷ்ட்ரக்சன், மாடி லைன் சேலம்கேம்ப் | 0.30% குறைவு |
| 2 | திருவாளர்.ஆர்.ஆர்.கனிஷ்கா &கோ கூலிலைன், மேட்டூர் | 1.75% அதிகம் |

அலுவலகக் குறிப்பு

வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட 0.30% சதவீதம் குறைவாக ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் கொடுத்துள்ள திருவாளர் கிருத்திகா கன்ஷ்ட்ரக்சன் ஒப்பந்ததாரரது ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஏற்றுக் கொள்ளலாம்.

(ந.க.எண்.4813/2018/இ1)

தீர்மாள எண். 232 நாள் 23.11.2018

அனுமதிக்கப்பட்டது

8) மேட்டூர் நகராட்சிக்கு சொந்தமான திருமதி பாப்பம்மாள் திருமண மண்டபம் தற்போது நகராட்சியால் பராமரிக்கப்பட்டு வாடகை அடிப்படையில் இயங்கி வருகிறது. தலைவர் மேட்டூர் அமைதி அறக்கட்டளை மேட்டூர் அணை அவர்களின் 06.12.2017 ந் தேதி கடிதத்தில் அறக்கட்டளை சார்பாக மேட்டூர் நகராட்சியின் புரிந்துணர்வு ஒப்பந்த அடிப்படையில் அனைத்து பொது மக்கள் பயன்பெறும் வகையில் பராமரிப்பு பணி செய்து வர ஆவண செய்யுமாறு கடிதத்தில் தெரிவித்துள்ளார்கள்

மேற்கண்ட திருமண மண்டபத்தினை பராமரிப்பு பணி செய்து வர நகராட்சி விதிகளுக்கு உட்பட்டு தற்போது உள்ள நடைமுறை படி மண்டபத்திற்கு வாடகையினை நகராட்சி அலுவலகத்தில் செலுத்தவும் பராமரிப்பு மட்டும் புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்யும் மேட்டூர் அமைதி அறக்கட்டளைக்கு, ஒப்பந்தம் மூன்று ஆண்டுகளுக்கு ஒப்படைக்கவும் அவர்களின் நடவடிக்கையில் திருப்தி ஏற்படும் பட்சத்தில் அதிகபட்சம் 9 ஆண்டுகள் வரை நீட்டித்து கொள்ளவும் நகர் மன்ற தீர்மான எண்.54 நாள்.06.04.2018ல் மன்ற அனுமதி பெறப்பட்டது.

மேட்டூர் அமைதி அறக்கட்டளையுடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்து கொள்ள நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் அனுமதி பெற நகராட்சி நிர்வாக மண்டல இயக்குனர், சேலம் அவர்களின் வழியாக இவ்வலுவலக கடித.ந.க.எண்.4649/2017 நாள்.20.04.2018 கடிதம் அனுப்பப்பட்டது. நகராட்சி நிர்வாக ஆணையர் , சென்னை அவர்களின் கடித ந.க.எண்.2968/2018/ஆர்2 நாள்.24.07.2018ல் மேற்கண்ட மண்டபத்தினை அமைதி அறக்கட்டளை மூலம் பராமரித்திட கூடுதல் விவரங்கள் தெரிவிக்குமாறு கடிதத்தில் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது. அதில் பாப்பம்மாள் திருமண மண்டபம் 55 ஆண்டு கால பழமை வாய்ந்த கட்டடத்தில் முழுமையான பராமரிப்பு பணிகள் மேற்க்கொள்ளும் வகையில் கட்டடம் தகுதியுள்ளதா என்பதற்கு பொதுப்பணித்துறையினரிடம் கட்டட உறுதி தன்மை சான்று பெற்று அனுப்புமாறு தெரிவிக்கப்பட்டதின்படி இவ்வலுவலக கடித.ந.க.எண்.4649/2017 நாள்.10.08.2018ல் கட்டட உறுதி தன்மை சான்று வழங்க கோரி செயற்பொறியாளர் பொதுப்பணிதுறை சேலம்

அவர்களுக்கு கடிதம் அனுப்பப்பட்டது. மேற்கண்ட கட்டடத்தில் உறுதி தன்மை சான்று வழங்குவது குறித்து சில ஆவணங்கள் வழங்க கோரி 12.09.2018–ல் செயற்பொறியாளர் பொதுப்பணித்துறை சேலம் அவர்களின் கடிதத்தில் தெரிவித்துள்ளார்.

நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்கள் கடிதத்தில் தெரிவிக்கப்பட்ட உறுதி தன்மை சான்று உடன் அனுப்ப வேண்டியுள்ளதால் முதல்வர் அரசு பொறியியல் கல்லூரி கருப்பூர் அவர்களுக்கு கட்டட உறுதி தன்மை சான்று வழங்க கோரி இவ்வலுவலக கடிதத்தில் மூலம் கேட்டுக்கொள்ளப்பட்டது.

முதல்வர் அரசு பொறியியல் கல்லூரி கருப்பூர் அவர்களின் கடித எண் CB241/GCE/SLM/CIVIL/SM/LAB/2018 நாள்.14.11.2018ந் தேதிய கடிதத்தில் திருமதி பாப்பம்மாள் திருமண மண்டபத்திற்கு கட்டட உறுதி தன்மை சான்று வழங்க ரூ.42,480/– செலுத்துமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. மேற்கண்ட தொகையான ரூ.42,480/–"The Principal Government College of Engineering" Salem என்ற பெயருக்கு வரைவோலையாக வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு

1. மன்றம் அனுமதிக்கலாம்
2. இதற்காகும் செலவினத்தை பொது நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.

**(ந.க.எண்.4649/2017/இ1)**

**தீர்மாள எண். 233 நாள் 23.11.2018**

**அனுமதிக்கப்பட்டது**

9) பொது சுகாதாரப்பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ள 165 துப்புரவு பணியாளர் பணியிடங்களில் 81 நிரந்தர துப்புரவு பணியாளர்கள் மற்றும் ஒப்பந்த அடிப்படையில் 47 துப்புரவு பணியாளர்களைக் கொண்டு துப்புரவு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும், மீதமுள்ள 37 பணியிடங்கள் காலியாக உள்ளதால் திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் கலவை உரக்கிடங்கில் மக்கும் குப்பை மக்காத குப்பைகளை பிரித்து உரம் தயாரிக்கும் பணிக்கு ஓம் சக்தி மகளிர் சுய உதவிக்குழு மூலம் 15 நபர்களை கொண்டு நவம்பர் 2018 முதல் மூன்று மாதங்களுக்கு தற்காலிகமாக மாவட்ட ஆட்சியரால் அனுமதிக்கப்பட்ட தினக்கூலி ரூ.319/– என்ற வீதத்தில் பயன்படுத்திக் கொள்ளவும் துப்புரவு ஆய்வர் தனது 01.11.2018ம் தேதிய அறிக்கையில் கோரியுள்ளால். அதன்படி, திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் இந்நகராட்சி கலவை உரக்கிடங்கில் உரம் தயாரிக்கும் பணிக்கு ஓம் சக்தி மகளிர் சுய உதவிக்குழு மூலம் 15 நபர்களை தினக்கூலி ரூ.319/– என்ற வீதத்தில் 01.11.2018 முதல் மூன்று மாதங்களுக்கு பயன்படுத்திக் கொள்ளவும் அதற்காகும் தோராய செலவினம்.ரூ.5.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு

1. மன்றம் அனுமதிக்கலாம்
2. இச்செலவினத்தொகையினை திடக்கழிவு மேலாண்மை நிதியில் இருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.
3. அவசர அவசியம் கருதி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று 01.11.2018 முதல் பணியாளர்களை பயன்படுத்தியமைக்கு மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண்.1501/2018/எச்1)**

**தீர்மாள எண். 234 நாள் 23.11.2018**

அனுமதிக்கப்பட்டது

10) இந்நகராட்சியில் தட்டச்சுபணி காலியாக உள்ளதால் அரசு மற்றும் தனியால் நிறுவனங்களுக்கு தபால் அனுப்புவது கால தாமதம் ஆவதால் மாவட்ட ஆட்சியர் சேலம் அவர்களின் விலைப் பட்டியல் (Contingent Staff Daily and monthly rates of Labour for various categories for the year 2018-2019) சேலம் மாவட்ட அரசிதழ் எண் 4 (SalemDistrict Gazette No.7. Date.May 29.2018) நாள்.மே.2018 ன்படி பல்வேறு பணிகளுக்கு ஊதியம் நிர்ணயம் செய்யப்பட்டு உள்ளது. அதன் அடிப்படையில் உள்ளூர் விலைப்புள்ளிகள் தட்டச்சு பணிக்கு கோரியதில் கீழ்கண்ட இரண்டு நிறுவனங்களிடம் இருந்து விலை புள்ளிகள் வரப்பட்டன.

| வ எண் | நிறுவனத்தின் பெயர் | தொகை |
|---|---|---|
| 1 | வெல்ஸ் தொழில் பயிற்சி நிறுவனம், 9.160 கிழக்கு மெயின் ரோடு , மேட்டூர் அனை, (தட்டச்சு மற்றும் கணிபொறி தெரிந்தவர்கள் மட்டும் ஒரு நாளைக்கு மட்டும்) | ரூ.520.00 (ரூபாய் ஐநூறு இருபது மட்டும்) |
| 2 | சின்னப்பா தொழிற் பயிற்சி நிறுவனம் 23.35 சிவா ரைஸ்மில் காம்பவுண்ட், நாமக்கல் (தட்டச்சு மற்றும் கணிபொறி தெரிந்தவர்கள் மட்டும் ஒரு நாளைக்கு மட்டும்) | ரூ.550.00 (ரூபாய் ஐநூற்று ஐம்பது மட்டும்) |

இதில் குறைந்த விலைப்புள்ளி வழங்கிய வெல்ஸ் தொழில் பயிற்சி நிறுவனம் மேட்டூர் அவர்களின் விலைப்புள்ளியினை ஏற்று மேற்கண்ட செலவினத்தை 11/2018ம் மன்றத்திலிருந்து பொது நிதியில் செலவு செய்யவும் மேற்கண்ட நிறுவனத்திற்கு பணி உத்திரவு வழங்கி தட்டச்சுபணி அவசர அவசியம் கருதி பணி செய்யவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**(ந.க.எண்.4563/2012/சி1)**

அலுவலக குறிப்பு:

பொது நிதியிலிருந்து செலவு செய்ய அனுமதிக்கலாம்.

**தீர்மாள எண். 235 நாள் 23.11.2018**

அனுமதிக்கப்பட்டது

11) மேட்டூர் நகராட்சியில் குடிநீர் பிரிவிற்கு பயன்படுத்தப்படும் வாகன எண்.TN27Y2206 தகுதி சான்றினை புதுப்பிக்கவும் 6 டயர், 6டிஸ்க், 6 டியூப் 6ரிங் மற்றும் பேட்டரி 12v புதியதாக

மாற்றவும் உத்தேச செலவினத்தொகை ரூ.99,500/— ஆகும். மேற்கண்ட செலவினத்தை மேற்க் கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு:

1. மன்றம் அனுமதிக்கலாம்
2. இதற்காகும் செலவினத்தை குடிநீர் நிதியிலிருந்து மேற்க்கொள்ளவும்.

**(ந.க.எண்.4769/2018/இ1)**

**தீர்மாள எண். 236 நாள் 23.11.2018**

அனுமதிக்கப்பட்டது

12) தமிழ்நாடு சட்ட பேரவையில் 2018—2019— ம் ஆண்டிற்கான நகராட்சி நிர்வாக மற்றும் குடிநீர் வழங்கல் துறைக்கான மானியக் கோரிக்கை விவாதித்த போது மாண்புமிகு நகராட்சி நிர்வாக மற்றும் குடிநீர் வடிகால், சிறப்பு திட்ட செயலாக்கத்துறை அமைச்சர் அவர்கள் “**மாநகராட்சிகள் மற்றும் நகராட்சிகளில் உள்ள அனைத்து வார்டுகளிலும் உயர்தரம் வாய்ந்த குடிநீர் மிகக் குறைந்த விலையில் வழங்க தானியங்கு குடிநீர் மையங்கள் (Automatic vending Centres)** நிறுவப்படும்“ என்ற அறிவிப்பினை வெளியிட்டார்கள்.

நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் கடித .ந.க.எண்.17018/2018/குவ1 நாள்.23.08.2018ம் தேதிய கடிதத்தில் அறிவுறுத்தப்பட்டதின்படி மாண்புமிகு நகராட்சி நிர்வாக மற்றும் குடிநீர் வடிகால், சிறப்பு திட்ட செயலாக்கத்துறை அமைச்சர் அவர்களின் அறிவிப்பினை செயல்படுத்தும் வகையில், மேட்டூர் நகராட்சியில் உள்ள கீழ்க்கண்ட 3 வார்டுகளிலும் உள்ள மக்கள் இத்திட்டத்தினால் பயன்பெறும் வகையில் பொதுமக்களுக்கு உயர்தரம் வாய்ந்த குடிநீர் வழங்குதல் பணிக்கு 14.11.18ல் இரண்டாவது முறை Expression of Interest முறையில் ஒப்பந்த புள்ளி கோரியதில் வரப்பெற்ற ஒப்பந்தபுள்ளியில் ஒரு ஒப்பந்தபுள்ளி அளித்துள்ள M/s.Dharana , Infrastructure Projects Private Limited, Chennai ஒப்பந்ததாரர் கீழ்கண்டவாறு ஒப்பந்தபுள்ளி கோரியுள்ளதை மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண். | வேலையின் பெயர் |
|---|---|
| 1 | வார்டு எண்.3,தங்கமாபுரிபட்டிணம், பகுதியில் உயர்தரம் வாய்ந்த தானியங்கும் குடிநீர் மையம் வடிவமைத்து, உருவாக்கி , நிதி ஆதாரத்துடன் இயக்கி பராமரித்து திரும்ப நல்ல முறையில் ஒப்படைத்தல் (தனியார் பங்களிப்புடன் மேற்கொள்ளுதல்) |
| 2 | வார்டு எண்.5, சேலம் கேம்ப் , தாய் சேய் நல விடுதி வளாகத்தில் உயர்தரம் வாய்ந்த தானியங்கும் குடிநீர் மையம் வடிவமைத்து, உருவாக்கி , நிதி ஆதாரத்துடன் இயக்கி பராமரித்து திரும்ப நல்ல முறையில் ஒப்படைத்தல் (தனியார் பங்களிப்புடன் மேற்கொள்ளுதல்) |
| 3 | வார்டு எண்.15, தூக்கனாம்பட்டி பகுதியில் உயர்தரம் வாய்ந்த தானியங்கும் குடிநீர் மையம் வடிவமைத்து, உருவாக்கி , நிதி ஆதாரத்துடன் இயக்கி பராமரித்து பணி திரும்ப நல்ல முறையில் ஒப்படைத்தல் (தனியார் பங்களிப்புடன் மேற்கொள்ளுதல்) |

**Price Schedule**

| S | Description | Rate to be | Rate to | Rate to be |
|---|---|---|---|---|

| no | | remitted to the Municipality Rupees per 20Ltr | be charged for sale to public Rupees per 20Ltr | charged for sale to public Rupees per 1 Ltr from chilling machine |
|---|---|---|---|---|
| 1 | Establishment of 1000 Ltr/ Hr. capacity community drinking water system through Reerse Osmosis with UV treatment in the 3 places mentioned in Mettur Municipality | Rs.1.00 | Rs.6.90 | Rs.1.00 |

அலுவலக குறிப்பு:

1. முதன் முறை ஒப்பந்தப்புள்ளி 04/10/2018ம் தேதி கோரியதில் எந்த ஒப்பந்தபுள்ளியும் வரவில்லை
2. இரண்டாவது முறை ஒப்பந்தப்புள்ளி கோரியதில் ஒரே ஒரு ஒப்பந்தபுள்ளியாக மேற்கண்ட பணிக்கு M/s.Dharana , Infrastructure Projects Private Limited, Chennai நிறுவனம் ஒப்பந்த நமுனாவில் குறிப்பிடப்பட்டுள்ள விலை விகிதத்திற் மிகாமலும் இருபது லிட்டருக்கு ரூ.6.90 என குறைவான விலை விகிதம் அளித்துள்ளார்.
3. எனவே ஒரே ஒப்பந்தப்புள்ளியாக பெறப்பட்டிருந்தாலும் முதல் அழைப்பில் எந்த ஒப்பந்தபுள்ளியும் பெறப்படாததாலும் இரண்டாவது அழைப்பில் பெறப்பட்ட ஒரே ஒப்பந்தப்புள்ளியாக இருப்பினும் ஒப்பந்தபுள்ளி நமுனாவில் குறிப்பிடப்பட்டுள்ள விலை விகிதத்திற்கு மிகாமல் விலை விகிதம் அளிக்கப்பட்டுள்ளதால் மேற்படி ஒப்பந்தப்புள்ளியினை ஏற்கலாம்.

**(ந.க.எண்.4984/2018/இ1)**

**தீர்மாள எண். 237 நாள் 23.11.2018**

**அனுமதிக்கப்பட்டது**

13) புகைவண்டி நிலையத்தின் அருகில் உள்ள இந்நகராட்சிக்குச் சொந்தமான வணிக வளாகத்தின் அருகில் உள்ள 24 திறந்தவெளிக் கடைகளில், காலியாக உள்ள கடைகளுக்கு 20.11.2018ல் மறு ஏலம் / ஒப்பந்தப்புள்ளி கோரியதில், ஏலம் கோர எவரும் முன்வரவில்லை. கடை எண்.9க்கு மட்டும் கீழ்க்கண்டுள்ளவாறு இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது. வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண். | ஒப்பந்தப்புள்ளி கொடுத்தவர் பெயர் | ஒப்பந்தப்புள்ளியில் கோரிய அதிகபட்ச தொகை (ஆண்டு ஒன்றுக்கு) |
|---|---|---|
| 1. | திருமதி.பா.கம்ரூனிஷா,<br>72, சின்னப்ப ஆசாரி தெரு,<br>தேசாய் நகர்,<br>மேட்டூர் அணை. | ரூ.550/- |
| 2. | திரு.B.சதாம் உசேன்,<br>72, சின்னப்ப ஆசாரி தெரு, | ரூ.530/- |

| | | |
|---|---|---|
| | தேசாய் நகர்,<br>மேட்டூர் அணை. | |

<u>அலுவலகக் குறிப்பு</u>

மேற்படி வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் வரிசை எண்.1–ல் கண்டுள்ள திருமதி.பா.கம்ரூனிஷா, மேட்டூர்அணை என்பவர் அதிகபட்சமாக மாதம் ஒன்றுக்கு ரூ.550/-க்கு ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ளார். இந்த ஒப்பந்தப்புள்ளித் தொகையானது இக்கடைக்கு ஏற்கனவே நிர்ணயிக்கப்பட்ட வாடகையை விட ரூ.50/- கூடுதலாக உள்ளது. எனவே இந்த ஒப்பந்தப்புள்ளியை ஏற்பது குறித்து மன்றம் முடிவு செய்யலாம்.

**(ந.க.எண்.2799/2012/அ3)**

**தீர்மாள எண். 238 நாள் 23.11.2018**

அனுமதிக்கப்பட்டது

14) புகைவண்டி நிலையத்தின் அருகில் உள்ள இந்நகராட்சிக்குச் சொந்தமான வணிக வளாகத்தின் அருகில் உள்ள 24 திறந்தவெளிக் கடைகளில், காலியாக உள்ள கடைகளுக்கு 20.11.2018ல் மறு ஏலம் / ஒப்பந்தப்புள்ளி கோரியதில், ஏலம் கோர எவரும் முன்வரவில்லை. கடை எண்.10க்கு மட்டும் கீழ்க்கண்டுள்ளவாறு இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது. வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண். | ஒப்பந்தப்புள்ளி கொடுத்தவர் பெயர் | ஒப்பந்தப்புள்ளியில் கோரிய அதிகபட்ச தொகை (ஆண்டு ஒன்றுக்கு) |
|---|---|---|
| 1. | திருமதி.பா.கம்ரூனிஷா,<br>72, சின்னப்ப ஆசாரி தெரு,<br>தேசாய் நகர்,<br>மேட்டூர் அணை. | ரூ.550/- |
| 2. | திரு.B.சதாம் உசேன்,<br>72, சின்னப்ப ஆசாரி தெரு,<br>தேசாய் நகர்,<br>மேட்டூர் அணை. | ரூ.530/- |

<u>அலுவலகக் குறிப்பு</u>

மேற்படி வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் வரிசை எண்.1–ல் கண்டுள்ள திருமதி.பா.கம்ரூனிஷா, மேட்டூர்அணை என்பவர் அதிகபட்சமாக மாதம் ஒன்றுக்கு ரூ.550/-க்கு ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ளார். இந்த ஒப்பந்தப்புள்ளித் தொகையானது இக்கடைக்கு ஏற்கனவே நிர்ணயிக்கப்பட்ட வாடகையை விட ரூ.50/- கூடுதலாக உள்ளது. எனவே இந்த ஒப்பந்தப்புள்ளியை ஏற்பது குறித்து மன்றம் முடிவு செய்யலாம்.

**(ந.க.எண்.2799/2012/அ3)**

**தீர்மாள எண். 239 நாள் 23.11.2018**

அனுமதிக்கப்பட்டது

ஆணையாளர் (ம) தனி அலுவலர்,
மேட்டூர் நகராட்சி.

நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை
மேட்டூர் நகராட்சி

**மேட்டூர் நகராட்சியின் சாதாரணக் கூட்டம் நகர்மன்றத்தில் நகராட்சியின் தனி அலுவலர் அவர்களால் 30.11.2018 ம் தேதி பிற்பகல் 4.00 மணிக்கு நடைபெற உள்ளது.**

மன்றப் பொருள்

**1).** இந்நகராட்சியின் பொது சுகாதாரப் பிரிவில் துப்புரவு பணியாளராக பணியாற்றி பணிகாலத்தில் 09.06.2017ல் திருமதி.கண்ணம்மாள்/செல்லதுரை இறந்து விட்டார். அன்னாரின் வாரிசுதாரரும் கணவருமாகிய திரு.செல்லதுரை/பொன்னான் என்பவர் தனது மனைவிக்கு வழங்கப்பட வேண்டிய விடுப்பு கணக்கு ஊதியம் வழங்ககோரி சென்னை உயர்நீதி மன்றத்தில் W.P.28359/18 மூலம் வழக்கு தொடர்ந்து உள்ளார். மேற்படி வழக்கில் 1. அரசு செயலாளர் நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை சென்னை, 2. ஆணையர் நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை 3. ஆணையர் மேட்டூர் நகராட்சி ஆகிய மூவரையும் பிரதிவாதியாக சேர்க்கப்பட்டுள்ளது.

இவ்வழக்கினை திரு.வி.கதிர்வேல் சிறப்பு அரசு வழக்கறிஞர் அவர்களிடம் ஒப்படைத்து நகராட்சி சார்பாக ஏற்று நடத்திடவும், இற்கு செலவாகும் வழக்கறிஞர் கட்டணம் அனைத்திற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு

3. மன்றம் அனுமதிக்கலாம்

**(ந.க.எண்.5469/2018/எப்1)**

**தீர்மாள எண். 240 நாள் 30.11.2018**

அனுமதிக்கப்பட்டது

2). மேட்டூர் நகராட்சிக்குச் சொந்தமான கீழ்க்கண்ட உரிம இனங்களின் உரிமக்காலம் 31.03.2019 உடன் முடிவடைவதால் அரசானை (நிலை) எண்.181 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கு துறை நாள்.19.09.2008 ன் 01.04.2019 முதல் 31.03.2022 முடிய உள்ள மூன்று ஆண்டு காலத்திற்கு பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளிகள் மூலம் உரிமங்களை ஒப்படைப்பதற்கும், ஏல விளம்பரங்களை நாளிதழில் விளம்பரம் செய்யவும் அதற்காகும் செலவினத்திற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| வ எண் | உரிம இனத்தின் விவரம் |
|---|---|
| 1 | பேருந்து நிலையத்தில் கட்டப்பட்டுள்ள ஏ.சி.சீட் கூரை போடப்பட்ட 12.50 X 2.50 மீ பரப்பளவுள்ள கூரை போடப்பட்ட சைக்கிள் நிறுத்துமிடம் மற்றும் அதைச் சார்ந்த சுமார் 100'X30' சதுர அடி அளவுள்ள காலி இடமும் இதற்கும் சேர்த்து சைக்கிள் நிலையத்தில் இரண்டு சக்கர வாகனங்கள் நிறுத்தம் செய்பவர்களிடம் கட்டணம் வசூல் செய்யும் உரிமம். |

| | |
|---|---|
| 2 | நகராட்சி எல்லைக்குள் வாரச்சந்தைகள், தினசரி மார்க்கெட் , ஸ்டேட் பேங்க் கார்னர் முதல் காமராஜ் சிலை வரை(சின்ன மார்க், சதுரங்காடி பகுதி மற்றும் தங்கமாபுரிபட்டிணம் வளைவு பகுதிகள் தவிர சாலை ஓரங்களில் தற்காலிகக் கடை வைப்பவர்களிடமும், தெருவில் வாகனங்கள் மூலம் வியாபாரம் செய்பவர்களிடமும் கட்டணம் வசூல் செய்யும் உரிமம். |

அலுவலகக் குறிப்பு

4. 2016–2017 முதல் 2018–2019 முடிய மூன்று ஆண்டு காலத்திற்கு ஏற்கனவே உள்ள பொது ஏலம் மற்றும் பொது சிறப்பு நிபந்தனைகள் இதற்கும் பொருந்தும்.
5. அரசாணை (நிலை) எண்.181, நாள்.19.09.2008ன் படி முதலாம் ஆண்டு (2019–2020) கோரப்படும் உரிமத்தொகையில், இரண்டாம் ஆண்டிற்கு(2020–2021) முதலாம் ஆண்டின் உரிமத் தொகையில் இருந்து 5% உயர்வு செய்து நிர்ணயம் செய்யவும், மூன்றாம் ஆண்டுக்கு (2021–2022) இரண்டாம் அரையாண்டின் உரிமத் தொகையில் இருந்து 5% உயர்வு செய்து நிர்ணயம் செய்யவும் மன்றம் அனுமதிக்கலாம்.
6. நாளிதழ் விளம்பரத்திற்கும், ஏல அறிவிக்கை அச்சடிக்க ஆகும் செலவினங்களுக்கும் மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண்.5811/2018/அ2)**

**தீர்மாள எண். 241 நாள் 30.11.2018**

அனுமதிக்கப்பட்டது

**3)** மேட்டூர் நகராட்சி பகுதியில் உள்ள வார்டு- பி, பிளாக் எண் **-9**, நகரளவு எண் **7/1**ல் பரப்பு **2.2375.0** ச.மீ நத்தம் வகைபாடு கொண்ட நிலத்தில் **0.5980.0** ச.மீ. நிலம் மட்டும் செவிலியர் பயிற்சி கல்லூரி கட்டிடம் கட்ட நில மாறுதல் செய்ய நகராட்சி தீர்மானம் நிறைவேற்றி அதன் நகல் அனுப்பி வைக்க வட்டாட்சியர் மேட்டூர் அவர்களின் கடிதம் ந.க.எண்.**2783/2017**/பி**2** நாள்.**29.11.2018**ல் கோரியுள்ளார். மறு நில அளவை நகரளவு பதிவேட்டின்படி மேற்படி இடம் சர்க்கார் புறம்போக்கு –நத்தம் என பதிவாகியுள்ளது

எனவே மேற்படி இடம் நில மாறுதல் செய்ய நகராட்சிக்கு ஆட்சேபனை ஏதுமில்லை என்பது தொடர்பாக நகர்மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது

அலுவலகக் குறிப்பு

மன்றம் அனுமதிக்கலாம்

**(ந.க.எண்.5854/2018/எப்1)**

**தீர்மாள எண். 242 நாள் 30.11.2018**

அனுமதிக்கப்பட்டது

4) மேட்டூர் நகராட்சியில் தற்போது குடிநீர் வீட்டு இணைப்பில் சம்மந்தப்பட்ட வீட்டு உரிமையாளர்களிடமிருந்து விண்ணப்பம் பெற்று பரிசீலிக்கப்பட்டு அதற்கான முன் வைப்பு தொகை மற்றும் இணைப்பு வழங்குவதற்கான கட்டணம் ஆகியவற்றினை செலுத்துமாறு விண்ணப்பதாரற்கு உரிய கேட்பு அனுப்பப்பட்டு சம்மந்தப்பட்ட விண்ணப்பதாரரிடம் மேற்கூரிய தொகைகளை செலுத்திய உடன் குடிநீர் இணைப்பு வழங்கப்படும் நடைமுறை தற்போது வரை பின்பற்றப்பட்டு வருகிறது.

குடிநீர் திட்டங்களை முழுமையான திறனுக்கு இயக்கவும், அதன் பயன் அனைத்து பொது மக்களுக்கு உடனடியாக சென்று அடையவும், வீட்டு இணைப்புகள் வழங்குவதற்காக அடிக்கடி நகராட்சி சாலைகள் வெட்டப்படுவதைக் தவிர்க்க வேண்டி குடிநீர் இணைப்பு வழங்குதலில் உள்ள நடைமுறையினை மாற்றி மேற்கண்ட முன் வைப்புத் தொகை மற்றும் இணைப்பு கட்டணங்களை சம்மந்தப்பட்ட வீட்டின் சொத்து வரி விதிப்புடன் இணைத்து அதிகபட்சமாக 10 தவணை முறையில் வசூல் செய்து கொள்ளவும் 21.03.2018 அன்று நகராட்சி நிர்வாக ஆணையர்,சென்னை அவர்களின் ஆய்வு கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது

அரசாணை நிலை எண்.126 நகராட்சி நிர்வாக மற்றும் குடிநீர் வழங்கல் (மா.ந.2 ) )துறை நாள்.28.11.2018–ல் நகராட்சிகளில் உள்ள அனைத்து வீடுகளுக்கும் வீட்டு குடிநீர் இணைப்புகள் மற்றும் பாதாள சாக்கடை வீட்டு இணைப்புகள் வழங்க கீழ்கண்டவாறு நிபந்தனைகளுக்குட்பட்டு வழங்கலாம் என முடிவு செய்து ஆணையிடப்பட்டுள்ளது.

1. அனைத்து மாநகராட்சிகள் மற்றும் நகராட்சிகளில் உள்ள அனைத்து வீடுகளுக்கும் வீட்டுக் குடிநீர் இணைப்புகள் மற்றும் பாதாள சாக்கடை வீட்டு இணைப்புகள் வழங்குதல் தொடர்பான வைப்புத்தொகை மற்றும் இணைப்புக்கட்டணம் ஆகியவை அந்தந்த உள்ளாட்சி அமைப்புகளின் பொது நிதியில் வரவு வைக்கப்படும் என்பதால் அவற்றை தனித்தனியாக அந்தந்த நகராட்சி/ மாநகராட்சிகளின் சொந்த நிதியிலிருந்து செய்யப்பட வேண்டும். மேலும் ஒப்பந்ததாரர் மூலம் எண்ணிக்கையில் எவ்வித கட்டுப்பாடும் இன்றி இணைப்புகளை அனைவருக்கும் வழங்க வேண்டும்.
2. குடிநீர் மற்றும் கழிவுநீர் கட்டண வைப்புத்தொகை மற்றும் இணைப்பிற்கான கட்டணத்தினை அந்தந்த வீட்டு சொத்துவரி கேட்புடன் இணைத்து 10 சம தவணைகளாக வசூலிக்க வேண்டும்.
3. ஒவ்வொரு மாதமும் குடிநீர் மற்றும் பாதாள சாக்கடை திட்ட இணைப்புகள் வழங்கப்பட்ட விவரத்தினை சம்மந்தப்பட்ட மாநகராட்சி ஆணையர் மற்றும் நகராட்சிகளை பொறுத்தமட்டில் சம்மந்தப்பட்ட நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் ஆய்வு செய்து நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் ஆய்வு செய்து நகராட்சி நிர்வாக ஆணையருக்கு அறிக்கை அனுப்ப வேண்டும்.
4. அந்தந்த நகர்ப்புர உள்ளாட்சி அமைப்பு தற்போது நடைமுறையில் உள்ள குடிநீர் மற்றும் பாதாள சாக்கடை உப விதிகளில் உரிய திருத்தங்கள் செய்து நடைமுறை படுத்த வேண்டும்.
5. அத்திருத்தங்கள் மேற்கொள்ளும் போது, தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம், 1920 பிரிவு 306ல் உட்பிரிவு 3(d), (e) மற்றும் உட்பிரிவு 5–ன்படி நடவடிக்கை மேற்கொள்ளவும் தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920, பிரிவு 309 மற்றும் 310ல் வரையறுக்கப்பட்ட விதிகளை கடைபிடிக்குமாறும் அறிவுறுத்தப்படுகிறது.
6. மேற்கூறியவாறு அனைத்து மாநகராட்சிகளும் முறையே வீடுகளுக்கு குடிநீர் இணைப்பு, பாதாள சாக்கடை இணைப்புகள் வழங்குவதற்கு அந்தந்த மாநகராட்சிக்குரிய உப சட்ட விதிகளில் (By laws ) திருத்தங்கள் மேற்கொள்ளும் போது, மேலே குறிப்பிட்ட அனைத்து விதிமுறைகளையும் கருத்தில் கொண்டு அதன்படி செயல்படுத்த வேண்டும்.

மேற்கூறியவாறு குடிநீர் விநியோகம் உப விதிகளை கீழ்க்கண்டவாறு திருத்தம் செய்ய மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**மேட்டூர் நகராட்சி திருத்தம் செய்யப்பட்ட குடிநீர் விநியோக உபவிதிகள்**

| <u>நடைமுறையில் உள்ள குடிநீர் கட்டண வைப்பு தொகை</u> | <u>திருத்தம் செய்யப்பட வேண்டிய குடிநீர் கட்டண வைப்பு தொகை</u> |
|---|---|
| முன் வைப்புத்தொகை முன்னரே கீழ்கண்டவாறு வசூலிக்கலாம். குடிநீர் இணைப்பு வாங்க விரும்பும் நபர் கீழ்கண்டவாறு வைப்புத்தெகை செலுத்த வேண்டும்.<br><br>அ. வீட்டு உபயோகம் – இணைப்பு ஒன்றுக்கு ரூ.5000/ | அ. வீட்டு உபயோகம் – இணைப்பு ஒன்றுக்கு ரூ5000/– ஆ.குடியிருப்புகளுக்கான புதிய குடிநீர் கட்டண வைப்புத்தொகை ரூ5000/–ஐ 10 சம தவணைகளில் வசூலிக்கப்படும். தொகையை குறிப்பிட்ட காலத்திற்குள் செலுத்தவேண்டும்.<br><br>இ. குடியிருப்புக்கான சாலை பராமரிப்பு கட்டணம், மேற்பார்வை கட்டணம் குழாய் பதிப்பிற்கான கட்டுமான செலவு ஆகியவற்றுக்கான தொகையை 10 சம தவணைகளில் வசூலிக்கப்படும். இத்தொகை குறிப்பிட்ட காலத்திற்குள் செலுத்த வேண்டும் |

**METTUR MUNICIPAL BY-LAWS AMENDMENT TO WATER SUPPLY**

| <u>**Current Deposits for the provision of drinking water supply :-**</u> | <u>**Revised Deposits for the provision of drinking water supply :-**</u> |
|---|---|
| A Security deposit in advance towards payment of water charges shall be collected in the manner as below Persons desiring to obtain water connections shall remit the deposit<br><br>A. Domestic Purpose Rs.5000/- per Connection | A. Domestic Purpose Rs.5000/- per Connection<br><br>B.Deposit amount for House service connection Rs.5000/- can be paid in 10 installments. Amount can be paid in installments with in stipulated time.<br><br>C.For Domestic house Service connection, Road Cutting charges, supervision charges and expenditure for laying of pipe lines total amount can be paid in Ten installments. The installments can be paid with in stipulated time. |

மேற்கண்டவாறு குடிநீர் இணைப்பு வழங்கும் நடைமுறையில் முன் வைப்பு தொகை மற்றும் இணைப்பு வழங்குவதற்கான கட்டணத்தினை சம்மந்தப்பட்ட வீட்டு வரி விதிப்புடன் இணைத்து அதிகபட்சமாக 10 தவணைகளில் வசூல் செய்ய ஏதுவாக குடிநீர் விநியோகம் உப விதிகளை திருத்தம் செய்ய மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது

அலுவலக குறிப்பு

1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களுக்கு பிரேரணை அனுப்பி உபவிதிகள் திருத்தத்திற்கு ஒப்புதல் பெறலாம்.

**(ந.க.எண்.3855/2018/இ1)**

**தீர்மாள எண். 243 நாள் 30.11.2018**

**அனுமதிக்கப்பட்டது**

5) மேட்டூர் நகராட்சியில் தற்போது பாதாள சாக்கடை இணைப்பில் சம்மந்தப்பட்ட வீட்டு உரிமையாளர்களிடமிருந்து விண்ணப்பம் பெற்று பரிசீலிக்கப்பட்டு அதற்கான முன் வைப்பு தொகை மற்றும் இணைப்பு வழங்குவதற்கான கட்டணம் ஆகியவற்றினை செலுத்துமாறு விண்ணப்பதாரற்கு உரிய கேட்பு அனுப்பப்பட்டு சம்மந்தப்பட்ட விண்ணப்பதாரரிடம் மேற்கூரிய தொகைகளை செலுத்திய உடன் பாதாள சாக்கடை இணைப்பு வழங்கப்படும் நடைமுறை தற்போது வரை பின்பற்றப்பட்டு வருகிறது.

பாதாள சாக்கடை இணைப்புகளை முழுமையான திறனுக்கு இயக்கவும், அதன் பயன் அனைத்து பொது மக்களுக்கு உடனடியாக சென்று அடையவும், பாதாள சாக்கடை இணைப்புகள் வழங்குவதற்காக அடிக்கடி நகராட்சி சாலைகள் வெட்டப்படுவதைக் தவிர்க்க வேண்டி பாதாள சாக்கடை இணைப்பு வழங்குதலில் உள்ள நடைமுறையினை மாற்றி மேற்கண்ட முன் வைப்புத் தொகை மற்றும் இணைப்பு கட்டணங்களை சம்மந்தப்பட்ட வீட்டின் சொத்து வரி விதிப்புடன் இணைத்து அதிகபட்சமாக 10 தவணை முறையில் வசூல் செய்து கொள்ளவும் 21.03.2018 அன்று நகராட்சி நிர்வாக ஆணையர்,சென்னை அவர்களின் ஆய்வு கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது அரசாணை நிலை எண்.126 நகராட்சி நிர்வாக மற்றும் குடிநீர் வழங்கல் (மா.ந.2 ) )துறை நாள்.28.11.2018–ல் நகராட்சிகளில் உள்ள அனைத்து வீடுகளுக்கும் வீட்டு குடிநீர் இணைப்புகள் மற்றும் பாதாள சாக்கடை வீட்டு இணைப்புகள் வழங்க கீழ்கண்டவாறு நிபந்தனைகளுக்குட்பட்டு வழங்கலாம் என முடிவு செய்து ஆணையிடப்பட்டுள்ளது.

1. அனைத்து மாநகராட்சிகள் மற்றும் நகராட்சிகளில் உள்ள அனைத்து வீடுகளுக்கும் வீட்டுக் குடிநீர் இணைப்புகள் மற்றும் பாதாள சாக்கடை வீட்டு இணைப்புகள் வழங்குதல் தொடர்பான வைப்புத்தொகை மற்றும் இணைப்புக்கட்டணம் ஆகியவை அந்தந்த உள்ளாட்சி அமைப்புகளின் பொது நிதியில் வரவு வைக்கப்படும் என்பதால் அவற்றை தனித்தனியாக அந்தந்த நகராட்சி/ மாநகராட்சிகளின் சொந்த நிதியிலிருந்து செய்யப்பட வேண்டும். மேலும் ஒப்பந்ததாரர் மூலம் எண்ணிக்கையில் எவ்வித கட்டுப்பாடும் இன்றி இணைப்புகளை அனைவருக்கும் வழங்க வேண்டும்.
2. குடிநீர் மற்றும் கழிவுநீர் கட்டண வைப்புத்தொகை மற்றும் இணைப்பிற்கான கட்டணத்தினை அந்தந்த வீட்டு சொத்துவரி கேட்புடன் இணைத்து 10 சம தவணைகளாக வசூலிக்க வேண்டும்.
3. ஒவ்வொரு மாதமும் குடிநீர் மற்றும் பாதாள சாக்கடை திட்ட இணைப்புகள் வழங்கப்பட்ட விவரத்தினை சம்மந்தப்பட்ட மாநகராட்சி ஆணையர் மற்றும் நகராட்சிகளை பொறுத்தமட்டில் சம்மந்தப்பட்ட நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் ஆய்வு செய்து நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் ஆய்வு செய்து நகராட்சி நிர்வாக ஆணையருக்கு அறிக்கை அனுப்ப வேண்டும்.
4. அந்தந்த நகர்ப்புர உள்ளாட்சி அமைப்பு தற்போது நடைமுறையில் உள்ள குடிநீர் மற்றும் பாதாள சாக்கடை உப விதிகளில் உரிய திருத்தங்கள் செய்து நடைமுறை படுத்த வேண்டும்.
5. அத்திருத்தங்கள் மேற்கொள்ளும் போது, தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம், 1920 பிரிவு 306ல் உட்பிரிவு 3(d), (e) மற்றும் உட்பிரிவு 5–ன்படி நடவடிக்கை மேற்கொள்ளவும் தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920, பிரிவு 309 மற்றும் 310ல் வரையறுக்கப்பட்ட விதிகளை கடைபிடிக்குமாறும் அறிவுறுத்தப்படுகிறது.
6. மேற்கூறியவாறு அனைத்து மாநகராட்சிகளும் முறையே வீடுகளுக்கு குடிநீர் இணைப்பு, பாதாள சாக்கடை இணைப்புகள் வழங்குவதற்கு அந்தந்த மாநகராட்சிக்குரிய உப சட்ட விதிகளில் (By laws ) திருத்தங்கள் மேற்கொள்ளும் போது, மேலே குறிப்பிட்ட அனைத்து விதிமுறைகளையும் கருத்தில் கொண்டு அதன்படி செயல்படுத்த வேண்டும்.

மேற்கூறியவாறு குடிநீர் விநியோகம் உப விதிகளை கீழ்க்கண்டவாறு திருத்தம் செய்ய மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**நடைமுறையில் உள்ள பாதாள சாக்கடை வைப்பு தொகை**

வீட்டு உபயோகம்

| வீட்டின் பரப்பு | வைப்புத் தொகை |
|---|---|
| 500 சதுர அடிக்கு குறைவு | 5000/– |
| 500–1200 சதுர அடி | 7000/– |
| 1200–2400 சதுர அடி | 10000/– |
| 2400 சதுர அடிக்கு மேல் | 12000/– |

**திருத்தம் செய்யப்பட வேண்டிய பாதாள சாக்கடை வைப்பு தொகை**

வீட்டு உபயோகம்

| வீட்டின் பரப்பளவு | வைப்புத் தொகை |
|---|---|
| | வீட்டு உபயோக இணைப்பு |
| 500.ச.அடிக்கு குறைவு | 5000 |
| 500–1200 ச.அடி | 7000 |
| 1200–2400 ச.அடி | 10000 |
| 2400 ச.அடிக்கு மேல் | 12000 |

மேற்கண்டவாறு வீட்டு உபயோக இனங்களுக்கு வைப்புத் தொகை மேற்பார்வை கட்டணம் மற்றும் இணைப்பு வழங்குவதற்கான கட்டுமான செலவு முதலிய அனைத்தும் 10 சம தவணைகளில் வசூலிக்கப்படும். தவணைக்கான தொகைகளை குறிப்பிட்ட காலத்திற்குள் செலுத்தவேண்டும்

## மேட்டூர் நகராட்சி திருத்தம் செய்யப்பட்ட பாதாள சாக்கடை உபவிதிகள்

## METTUR MUNICIPAL BY-LAWS AMENDMENT TO UNDER GROUND DRAINAGE

**Current Deposits for the provision of Under Ground Drainage :-**

**DOMESTIC**

| Area of the House | Deposit Amount Domestic |
|---|---|
| Below 500. Sqft | 5000/– |
| 500–1200 Sqft | 7000/– |
| 1200–2400 Sqft f | 10000/– |
| Above 2400 Sqft | 12000/– |

**Revised Deposits for the provision of Under Ground Drainage :-**

**DOMESTIC**

| Area of the House | Deposit Amount Domestic |
|---|---|
| Below 500. Sqft | 5000 |
| 500–1200 Sqft | 7000 |
| 1200–2400 Sqft | 10000 |
| Above 2400 Sqft | 12000 |

For Domestic connections the above deposit amount supervision charges and construction expenditure providing to connection can be paid in 10 installments. The installments can be paid with in stipulated time.

மேற்கண்டவாறு பாதாள இணைப்பு வழங்கும் நடைமுறையில் முன் வைப்பு தொகை கட்டுமான செலவு மற்றும் இணைப்பு வழங்குவதற்கான கட்டணத்தினை சம்மந்தப்பட்ட வீட்டு வரி விதிப்புடன் இணைத்து அதிகபட்சமாக 10 தவணைகளில் வசூல் செய்ய ஏதுவாக பாதாள சாக்கடை உப விதிகளை திருத்தம் செய்ய மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது

அலுவலக குறிப்பு

1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களுக்கு பிரேரணை அனுப்பி உபவிதிகள் திருத்தத்திற்கு ஒப்புதல் பெறலாம்.

**(ந.க.எண்.4007/2018/இ1)**

**தீர்மாள எண். 244 நாள் 30.11.2018**

அனுமதிக்கப்பட்டது

6) மேட்டூர் நகராட்சி பாதாள சாக்கடை திட்டம் முழுமையாக முடிவடைந்த பகுதிகள் தார்சாலை மேம்படுத்தி ரூ.1.00 கோடி மதிப்பீட்டில் நிதி ஒதுக்கீடு பெற நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களால் அறிவுறுத்தப்பட்டு இந்நகராட்சியால் சர்ச்ரோடு மற்றும் மேற்கு பிரதான சாலைகள் மேம்படுத்தி நகராட்சி நிர்வாக மண்டல இயக்குனர் சேலம் அவர்களின் வழியாக நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களுக்கு நிர்வாக அனுமதி பெற 4 எண்ணிக்கைகளை திட்ட பிரேரனை தயார் செய்து அனுப்பப்பட்டது. நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்கள் செயல்முறை கடித ந.க.எண்.12981/2018/இ3 நாள்.09.07.2018ல் நிர்வாக அனுமதி பெறப்பட்டது.

மேற்கண்ட பணிக்கான தொழில் நுட்ப அனுமதி பெற மண்டல செயற்பொறியாளர் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், சேலம் அவர்கள் வழியாக தலைமைப் பொறியாளர் நகராட்சி நிர்வாக ஆணையரகம் சென்னை அவர்களுக்கு திட்ட பிரேரனை அனுப்பப்பட்டது. மேற்கண்ட பணிக்கான நிர்வாக அனுமதி பெறப்பட்டமைக்கு திட்ட பிரேரனை தயார் செய்து தொகை ரூ.5850/— மாறும் தொழில் நுட்ப அனுமதி பெற தயார் செய்யப்பட்ட திட்ட பிரேரனைக்கு செலவுத்தொகை ரூ.5280/— ஆக மொத்தம் ரூ.11130/யை தனக்கு வழங்குமாறு இந்நகராட்சியில் உதவிப் பொறியாளர் பணி புரிந்து வரும் திருமதி.எஸ்.பிரேமா அவர்கள் தெரிவித்துள்ளார். எனவே மேற்கண்ட தொகை ரூ.11130/— வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு:-

1) மன்றம் அனுமதிக்கலாம்
2) இதற்காகும் செலவுத் தொகையினை பொது நிதியிலிருந்து வழங்கலாம்

**(ந.க.எண்.4983/2018/இ1)**

**தீர்மாள எண். 245 நாள் 30.11.2018**

அனுமதிக்கப்பட்டது

7) மேட்டூர் நகராட்சியில் பழைய தலைமை சுத்திகரிப்பு நிலையம், பழைய தலைமை நீரேற்று நிலையம், புதிய சுத்திகரிப்பு நிலையம் மற்றும் நீரேற்று நிலையத்தின் மின் உதிரிப்பாகங்கள் சப்ளை செய்தல் பணிக்கு ரூ.50 இலட்சம் மதிப்பீட்டில் விலைப்புள்ளிகள் கோரியதில் 01.11.2018ம் தேதியன்று வரப்பெற்ற கீழ்க்காணும் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் முடிவிற்கு வைக்கப்படுகிறது.

| வ. | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி | ஒப்பந்தப்புள்ளி |
|---|---|---|---|

| எண். | | தொகை | சதவிகிதம் அதிகம்/குறைவு |
|---|---|---|---|
| 1 | Vaibhav Electricals No,33 Arunachalaasari Street , Salem 636001 | ரூ.50825/– | – |
| 2 | King Electrical No.86/2 , Dhabhakuttai main road salem-636001 | ரூ.50400/– | – |
| 3 | Andavar G/O . Hard ware , Electricals berger paints, Ets | ரூ.49600/– | -- |

***அலுவலக குறிப்பு:***

6. வரப் பெற்றுள்ள மூன்று விலைப்புள்ளிகளில் மதிப்பீட்டு விலை ரூ.49600/– தொகையை குறைவான விலைப்புள்ளியாக கொடுத்துள்ள திருவாளர்.S.R.ஆண்டவர் &கோ ஒப்பந்ததாரரது விலைப்புளிளியினை மன்றம் ஏற்றுக் கொள்ளலாம்.
7. அவசர அவசியம் கருதி தனி அலுவலர் முன்னனுமதி பெற்று மன்ற அனுமதியினை எதிர்நோக்கி பணி உத்திரவு வழங்கியமைக்கு மன்றம் ஏற்கலாம்.

**(ந.க.எண்.4791/2018/இ1)**

**தீர்மாள எண். 246 நாள் 30.11.2018**

**அனுமதிக்கப்பட்டது**

8) மேட்டூர் நகராட்சிக்குட்பட்ட பகுதியில் உள்ள தெரு விளக்குகள் இயக்குதல் மற்றும் பராமரிப்பு பணியினை மேற்கொள்ள தனியார் வசம் ஒப்படைத்தல் பணிக்கு நகர் மன்ற தீர்மான எண்.201 நாள்.30.10.2014ல் அனுமதி பெறப்பட்டு பிரேரணயினை நகராட்சி நிர்வாக இயக்குனர், சென்னை அவர்களுக்கு அனுப்பப்பட்டது. தலைமை பொறியாளர் நகராட்சி நிர்வாக இயக்குனரகம் சென்னை, அவர்கள் கடித.ந.க.எண்.45490/2012/DOC நாள்.01.09.2015ல் 3 வருட காலத்திற்கு தெருவிளக்கு பணியினை தனியார் மூலம் இயக்கி பராமரித்தல் பணியினை மேற்கொள்ள ஒப்புதல் அளிக்கப்பட்டது. அதன் அடிப்படையில் ஒப்பந்தபுள்ளி கோரபட்டு 05.11.2015ல் திருவாளர் சஞ்சய் டிரேடர்ஸ் தர்மபுரி அவர்களுக்கு வேலை உத்திரவு வழங்கப்பட்டு பணி நடைபெற்று வருகிறது. அக்டோபர் 2018 மாதத்துடன் 3 வருடம் முடிவடைகின்றது. ஒப்பந்த நிபந்தனைகளில் section 3 conditions of Contract பத்தி எண்.14ல் மூன்று ஆண்டுகளுக்கு பிறகு ஒப்பந்தத்தினை நீட்டிப்பது குறித்து மேட்டூர் நகராட்சியும் ஒப்பந்ததாரற்கும் Mutually agreed மூலம் செய்து கொள்ளலாம் என குறிப்பிடப்பட்டுள்ளது.

மின் சேமிப்பு கணக்கீட்டு முகவர்களை (Investment Grade Audit Agency) நியமித்திடவும் மின் சேமிப்பு கணக்கீட்டு முகவர்களால் தயாரித்து அளிக்கப்பட்டு, நகராட்சி நிர்வாக ஆணையரக மற்றும் மண்டல நகராட்சி நிர்வாக இயக்குநரக தொழில்நுட்ப குழுவினால் ஏற்றுக்கொள்ளப்படும் திட்ட வரைவின் அடிப்படையில் தகுதியான மின் சேமிப்பு நிறுவனத்தின் மூலம் திட்டத்தினை செயல்படுத்த வேண்டி தகுதியான மின் சேமிப்பு நிறுவனங்களை தேர்ந்தெடுத்து பட்டியல்படுத்துவதற்கான நடைமுறைகளை கடைப்பிடித்தலின்படி தகுதியான மின் சேமிப்பு நிறுவனங்களை கண்டறிந்து பட்டியலிடவும் அவ்வாறு பட்டியிலிடப்பட்டவருக்கு மேற்படி நகராட்சி தெருவிளக்கு கட்டமைப்புகளில் உரிய மின் சேமிப்பு சாதனத்தினை பொருத்து ஒளிர்மின் விளக்குகளை அமைத்து இயக்கி பராமரித்திட ஒப்பந்தப்புள்ளிகள் கோரவும் இறுதி வடிவாக்கம்

செய்து தகுதியான 100% முதலீடு செய்ய கூடிய மின்சேமிப்பு நிறுவனங்களுடன் ஒப்பந்தம் ஏற்படுத்தும் வரை தேவையான நடவடிக்கைளை மேற்கொள்ள நகராட்சி நிர்வாக ஆணையர்/மண்டல நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களுக்கு அங்கீகாரம் அளித்திடவும் நகர் மன்ற தீர்மான எண்.102 நாள்.04.05.2017ல் மன்றத்தின் அனுமதி பெறப்பட்டுள்ளது.

எனவே, அதுவரை மேற்கண்ட பணிக்கான ஒப்பந்தத்தினை நீட்டிப்பது குறித்து இவ்வலுவலக கடித ந.க.எண்.355/2015/இ1 நாள்.03.10.2018ல் ஒப்பந்ததாரர் சம்மதம் கோரப்பட்டது.திருவாளர் Sanjai Traders தருமபுரி நிறுவனத்தார் 07.11.2018 ந்தேதிய கடிதத்தில், தெருவிளக்கு பராமரிப்பு பணியானது 3 வருட காலத்திற்கு ஒப்பந்தபுள்ளி நமுனாவிற்கு அனுமதி வழங்கப்பட்டு 05.11.2018ம் தேதியுடன் முடிவடைந்துள்ளதால் தெருவிளக்கு பராமரிப்பு பணியினை மேலும் ஒருவருட காலத்திற்கு நீட்டித்து கொள்ளவும் அல்லது ESCO நிறுவனத்திடம் ஒப்படைக்கும் வரை மேற்கண்ட பணியினை பழைய ஒப்பந்ததாரர் விலை புள்ளியில் கோரி இருந்த விலை விகிதத்தில் தொடர்ந்து பணியினை மேற்கொள்ள முழு மனதுடன் சம்மதிக்கிறேன் எனவும் தெரிவித்துள்ளார்.

எனவே, நான்காம் ஆண்டிற்கு பராமரிப்பு தொகை ரூ.24.79 இலட்சத்திற்கும் திருவாளர் Sanjai Traders தருமபுரி நிறுவனத்தின் மூலம் பராமரிப்பு பணியினை தொடர்ந்து அதே விலைவிகிதத்தில் ஒரு வருட காலத்திற்கோ அல்லது மின்சேமிப்பு நிறுவனங்களுடன் ஒப்பந்தம் ஏற்படுத்தும் வரையிலோ மேற்க்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலவலக குறிப்பு</u>

1. மன்றம் அனுமதிக்கலாம்
2. இதற்காகும் செலவினத்தை பொது நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.

**(ந.க.எண்.2312/2014/இ1)**

**தீர்மாள எண். 247 நாள் 30.11.2018**

**அனுமதிக்கப்பட்டது**

**9)** மேட்டூர் நகராட்சிக்கு சொந்தமான சின்னபார்க் என்றழைக்கப்படும் காமத் பூங்காவில் சிறப்பு தன்னிறைவுத் திட்டத்தின் கீழ் ரூ.60.00 இலட்சம் மதிப்பீட்டில் மணரமைத்தல் பணிகள் மேற்க்கொள்ளப்பட்டு வருகிறது மற்றும் மேற்கு மெயின் ரோடு பிரதான சாலை தமிழ்நாடு நகர்புற சாலைகள் மேம்பாட்டு திட்டம் 2018–2019 ல் கீழ் தார்சாலை பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

மேற்கண்ட பணிகள் முடிக்கப்படும் தருவாயில் உள்ளதால் தார்சாலைகள் சின்னபார்க் சுற்று சுவற்றிற்கும் இடைப்பட்ட பகுதியில் Paver Block அமைக்க தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டு தொகை ரூ.5.00 இலட்சம் ஆகும். மேற்கண்ட செலவினத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலவலக குறிப்பு</u>

1. மன்றம் அனுமதிக்கலாம்
2. இதற்காகும் செலவினத்தை பொது நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.

**(ந.க.எண்.5895/2018/இ1)**

**தீர்மாள எண். 248 நாள் 30.11.2018**

அனுமதிக்கப்பட்டது

10) இந்நகராட்சியில் பொறியியல் பிரிவு மற்றும் பொது சுகாதார பிரிவு இயங்கி வரும் வாகன எண்.TN27Y2206 புதியதாக 6 டயர், 6 டியூப், 6 டிஸ்க் 6 ரிங் மற்றும் பேட்டரி (12v) புதியதாக மாற்றி தகுதி சான்று புதுப்பித்து பணிக்கு ரூ.0.995 இலட்சம் மதிப்பீட்டில் ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் 28.11.2018 ம் தேதியன்று வரப்பெற்ற கீழ்க்காணும் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் முடிவிற்கு வைக்கப்படுகிறது.

| வ. எண். | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி தொகை | ஒப்பந்தப்புள்ளி சதவிகிதம் அதிகம்/குறைவு |
|---|---|---|---|
| 1 | திருவாளர்.இலட்சுமி ஆட்டோ டீசல் ஒர்க்ஸ், மேட்டூர் | ரூ.98700/— | — |
| 2 | திருவாளர். JVK ஆட்டோ டீசல் ஒர்க்ஸ், மேட்டூர், சேலம் | ரூ.99800/— | — |

*__அலுவலக குறிப்பு:__*

1. செலவினம் ரூ.99500/— பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் ஏற்கலாம்.
2. அவசிய அவசியம் கருதி தனி அலுவலர் முன்னனுமதி பெற்று மன்ற அனுமதியை எதிர்நோக்கி ஒப்பந்தப்புள்ளி கோரியமைக்கு மன்றம் ஏற்கலாம்.

3. வரப் பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளியாக ரூ.98700/— என குறைவான ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள திருவாளர்.இலட்சுமி ஆட்டோ டீசல் ஒர்க்ஸ் மேட்டூர் ஒப்பந்ததாரரது ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஏற்றுக் கொள்ளலாம்.
4. பணியின் அவசர அவசியம் கருதி மன்றத்தின்அனுமதியினை எதிர்நோக்கி தனி அலுவலர் முன்னனுமதி பெற்று பணி உத்திரவு வழங்கப்பட்டமையும் மன்றம் ஏற்கலாம்.

(ந.க.எண்.4764/2018/இ1)

**தீர்மாள எண். 249 நாள் 30.11.2018**

அனுமதிக்கப்பட்டது

11) மேட்டூர் நகராட்சி குமரன் நகர், நகராட்சி துவக்கப்பள்ளி மராமத்து பணி மேற்கொள்ளுதல் பணிக்கு ரூ.3.50 இலட்சம் மதிப்பீட்டில் ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் 28.11.2018ம் தேதியன்று வரப்பெற்ற கீழ்க்காணும் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் முடிவிற்கு வைக்கப்படுகிறது.

| வ. எண். | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி தொகை | ஒப்பந்தப்புள்ளி சதவிகிதம் அதிகம்/குறைவு |
|---|---|---|---|
| 1 | திரு.எம்.இராமசாமி<br>8/140 பெரிய வனவாசி(அ)<br>மேட்டூர் | — | 0.35% சதவிகிதம் மதிப்பீட்டு விகிதத்தை விட குறைவு |
| 2 | திரு.கே.கோவிந்தன் | — | 2.40% சதவிகிதம் மதிப்பீட்டு |

| | | | |
|---|---|---|---|
| | பூசாரிப்பட்டி ஓமலூர் (அ)<br>சேலம் | | விகிதத்தை விட அதிகம் |

*அலுவலக குறிப்பு:*

1. வரப் பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட 0.35% சதவீதம் குறைவாக ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் கொடுத்துள்ள திரு.எம்.இராமசாமி, பெரிய வனவாசி ஒப்பந்ததாரரது ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஏற்றுக் கொள்ளலாம்.

**(ந.க.எண்.5442–4/2018/இ1)**

**தீர்மாள எண். 250 நாள் 30.11.2018**

அனுமதிக்கப்பட்டது

**12)** மேட்டூர் நகராட்சியில் தங்கமாபுரிபட்டிணம் நகராட்சி துவக்கப்பள்ளி மராமத்து பணி மேற்கொள்ளுதல் பணிக்கு ரூ.4.80 இலட்சம் மதிப்பீட்டில் ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் 28.11.2018ம் தேதியன்று வரப்பெற்ற கீழ்க்காணும் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் முடிவிற்கு வைக்கப்படுகிறது.

| வ. எண். | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி தொகை | ஒப்பந்தப்புள்ளி சதவிகிதம் அதிகம்/குறைவு |
|---|---|---|---|
| 1 | திரு.எம்.இராமசாமி<br>8/140 பெரிய வனவாசி(அ)<br>மேட்டூர் | – | 0.20% சதவிகிதம் மதிப்பீட்டு விகிதத்தை விட குறைவு |
| 2 | திரு.கே.கோவிந்தன்<br>பூசாரிப்பட்டி ஓமலூர் (அ)<br>சேலம் | – | 1.90% சதவிகிதம் மதிப்பீட்டு விகிதத்தை விட அதிகம் |

*அலுவலக குறிப்பு:*

1. வரப் பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட 0.20% சதவீதம் குறைவாக ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் கொடுத்துள்ள திரு.எம்.இராமசாமி, பெரிய வனவாசி ஒப்பந்ததாரரது ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஏற்றுக் கொள்ளலாம்.

**(ந.க.எண்.5442/2018/இ1)**

**தீர்மாள எண். 251 நாள் 30.11.2018**

அனுமதிக்கப்பட்டது

**13)** மேட்டூர் நகராட்சியில் தூக்கனாம்பட்டி நகராட்சி துவக்கப்பள்ளி மராமத்து பணி மேற்கொள்ளுதல் பணிக்கு ரூ.4.20 இலட்சம் மதிப்பீட்டில் ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் 28.11.2018ம் தேதியன்று வரப்பெற்ற கீழ்க்காணும் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் முடிவிற்கு வைக்கப்படுகிறது.

| வ. எண். | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி தொகை | ஒப்பந்தப்புள்ளி சதவிகிதம் அதிகம்/குறைவு |
|---|---|---|---|

| | | | |
|---|---|---|---|
| 1 | திரு.எம்.இராமசாமி<br>8/140 பெரிய வனவாசி(அ)<br>மேட்டூர் | – | 2.10% சதவிகிதம் மதிப்பீட்டு விகிதத்தை விட அதிகம் |
| 2 | திரு.என்.ஆர் & கோ<br>மாதையன் குட்டை | – | 0.25% சதவிகிதம் மதிப்பீட்டு விகிதத்தை விட குறைவு |

***அலுவலக குறிப்பு:***

வரப் பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட 0.25% சதவீதம் குறைவாக ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் கொடுத்துள்ள திருவாளர். திரு.என்.ஆர்&கோ மாதையன் குட்டை ஒப்பந்ததாரரது ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஏற்கலாம்.

**(ந.க.எண்.5442/2018/இ1)**

**தீர்மாள எண். 252 நாள் 30.11.2018**

அனுமதிக்கப்பட்டது

14) மேட்டூர் நகராட்சியில் பொன்னகர் நகராட்சி துவக்கப்பள்ளி மராமத்து பணி மேற்கொள்ளுதல் பணிக்கு ரூ.4.50 இலட்சம் மதிப்பீட்டில் ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் 28.11.2018ம் தேதியன்று வரப்பெற்ற கீழ்க்காணும் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் முடிவிற்கு வைக்கப்படுகிறது.

| வ. எண். | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி தொகை | ஒப்பந்தப்புள்ளி சதவிகிதம் அதிகம்/குறைவு |
|---|---|---|---|
| 1 | திரு.எம்.இராமசாமி<br>8/140 பெரிய வனவாசி(அ)<br>மேட்டூர் | – | 0.30% சதவிகிதம் மதிப்பீட்டு விகிதத்தை விட குறைவு |
| 2 | திரு.கே.கோவிந்தன்,<br>பூசாரிப்பட்டி, ஓமலூார் (அ)<br>சேலம் | – | 1.60% சதவிகிதம் மதிப்பீட்டு விகிதத்தை விட அதிகம் |

***அலுவலக குறிப்பு:***

வரப் பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட 0.30% சதவீதம் குறைவாக ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் கொடுத்துள்ள திருவாளர். திரு.எம்.ராமசாமி பெரிய வனவாசி ஒப்பந்ததாரரது ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஏற்கலாம்.

**(ந.க.எண்.5442/2018/இ1)**

**தீர்மாள எண். 253 நாள் 30.11.2018**

அனுமதிக்கப்பட்டது

15) மேட்டூர் நகராட்சிக்குட்பட்ட கொளத்தூர் மெயின் ரோடு பகுதியில் Work Shop Corner முதல் குள்ளவீரன்பட்டி பிரிவு ரோடு வரை உள்ள மின் கம்பங்களில் தெருவிளக்குகள் ஏதும் இல்லாத நிலையில் உள்ளதால் 29.11.2018 அன்று அப்பகுதியில் மாவட்ட ஆட்சித் தலைவர் சேலம் அவர்களின் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

மேற்கண்ட பகுதிகளில் போக்குவரத்து மிக அதிகமாக உள்ள காரணத்தினால் உடனடியாக தெருவிளக்குகள் அமைக்குமாறு அறிவுறுத்தப்பட்டதின்படி அப்பகுதிகளில் உள்ள 30 மின் கம்பங்களில் 12 மின்கம்பங்களில் தெருவிளக்கு வசதி உள்ளது. எனவே மீதமுள்ள 18 மின்கம்பங்களில் தெருவிளக்கு அமைக்க தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டு தொகை ரூ.3.00 இலட்சம் ஆகும். மேற்கண்ட செலவினத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலககுறிப்பு</u>

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. இதற்காகும் செலவினத்தை பொது நிதியிலிருந்து மேற்க்கொள்ளலாம்
3. மின்பொருட்கள் வாங்க ஒப்பந்தப்புள்ளி கோரலாம்
4. தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு அதற்கான தொகையை செலுத்தலாம்.

**(ந.க.எண்.5835/2018/இ1)**

**தீர்மாள எண். 254 நாள் 30.11.2018**

அனுமதிக்கப்பட்டது

**16)** மேட்டூர் நகராட்சி அலுவலகத்தில் பணிபுரியும் அலுவலர்கள் மற்றும் பணியாளர்களின் இருசக்கர வாகனங்களை நிறுத்தம் செய்து எடுத்து செல்ல ஏதுவாக அலுவலக வளாகத்தில் தெற்குபுறமாக காலியாக உள்ள இடத்தில் புதியதாக இருசக்கர வாகனங்கள் நிறுத்துமிடம் அமைக்க தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டு தொகை ரூ.2.00 இலட்சம் ஆகும். மேற்கண்ட செலவினத்தை மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலவலக குறிப்பு</u>

1. மன்றம் அனுமதிக்கலாம்
2. இதற்காகும் செலவினத்தை பொது நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.

**(ந.க.எண்.5897/2018/இ1)**

**தீர்மாள எண். 255 நாள் 30.11.2018**

அனுமதிக்கப்பட்டது

**17)** மேட்டூர் நகராட்சிக்கு சொந்தமான சதுரங்காடி பகுதியில் அமைந்துள்ள தினசரி மார்கெட் கட்டிடம் கட்டப்பட்டு 20 வருடங்களுக்கு மேல் ஆகியுள்ளதால் கட்டிடங்களில் Sun shede மற்றும் கைப்பிடிச் சுவர் பழுதடைந்து இடியும் தருவாயில் உள்ளது என மேட்டூர் வட்டார அழுகும் பொருள் காய் , கனி வியாபாரிகள் சங்கம் நிர்வாகிகள் தெரிவித்துள்ளதார் . அதன் அடிப்படையில் ஆய்வு மேற்கொள்ளப்பட்டு பழுதடைந்த சன்சைடு மற்றும் கைப்பிடிச் சுவர் இடிந்து அப்புறப்படுத்தி புதியதாக அமைக்கவும் மற்றும் நடை பாதைக்கு Tiles மற்றும் மேற்கூலி அமைத்து மராமத்து பணிகள் மேற்க்கொள்ளவும் தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டு தொகை ரூ.7.50 இலட்சம் ஆகும். மேற்கண்ட செலவினத்தை மேற்க் கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

*<u>அலுவலக குறிப்பு:</u>*

1. மன்றம் அனுமதிக்கலாம்
2. இதற்காகும் செலவினத்தை பொது நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்

**(ந.க.எண்.5897/2018/இ1)**

**தீர்மாள எண். 256 நாள் 30.11.2018**

அனுமதிக்கப்பட்டது

**18)** மேட்டூர் நகராட்சியில் தங்கமாபுரிப்பட்டிணம் நீருந்து நிலையத்தில் 10HP மோட்டார் காயில் கட்டுதல் பணிக்கு ரூ.58000/– மதிப்பீட்டில் ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் 30.11.2018 ம் தேதியன்று வரப்பெற்ற கீழ்காணும் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் முடிவிற்கு வைக்கப்படுகிறது.

| வ. எண். | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி தொகை | ஒப்பந்தப்புள்ளி சதவிகிதம் அதிகம்/குறைவு |
|---|---|---|---|
| 1 | திரு.கே.கோவிந்தன்<br>பூசாரிப்பட்டி<br>ஓமலூர்(அ), சேலம் | – | 0.15% சதவிகிதம் மதிப்பீட்டு விகிதத்தை விட குறைவு |
| 2 | திரு.எம்.ராமசாமி<br>8/140 பெரிய வனவாசி<br>மேட்டூர் | – | 0.10% சதவிகிதம் மதிப்பீட்டு விகிதத்தை விட அதிகம் |

*அலுவலக குறிப்பு:*

வரப் பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட 0.15% சதவீதம் குறைவாக ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் கொடுத்துள்ள திரு.கே.கோவிந்தன், பூசாரிப்பட்டி ஒப்பந்ததாரரது ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஏற்கலாம்.

**(ந.க.எண்.5506/2018/இ1)**

**தீர்மாள எண். 257 நாள் 30.11.2018**

அனுமதிக்கப்பட்டது

**19)** மேட்டூர் நகராட்சியில் கழிவுநீர் நிலையத்தில் 30HP மோட்டார் மற்றும் பம்பு சர்வீஸ் செய்தல் பணிக்கு ரூ.1.00 இலட்சம் மதிப்பீட்டில் ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் 30.11.2018 ம் தேதியன்று வரப்பெற்ற கீழ்க்காணும் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் முடிவிற்கு வைக்கப்படுகிறது.

| வ. எண். | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி தொகை | ஒப்பந்தப்புள்ளி சதவிகிதம் அதிகம்/குறைவு |
|---|---|---|---|
| 1 | திரு.கே.கோவிந்தன்<br>பூசாரிப்பட்டி<br>ஓமலூர்(அ), சேலம் | – | 0.40% சதவிகிதம் மதிப்பீட்டை விட குறைவு |
| 2 | திரு.எம்.ராமசாமி<br>8/140 பெரிய வனவாசி<br>மேட்டூர் | – | 2.30% சதவிகிதம் மதிப்பீட்டை விட அதிகம் |

அலுவலக குறிப்பு:

1. அவசர அவசியம் கருதி தனி அலுவலர் முன் அனுமதி பெற்று மன்ற அனுமதியை எதிர்நோக்கி ஒப்பந்தப்புள்ளி கோரியமைக்கு மன்றம் ஏற்கலாம்.

2. வரப் பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட 0.40% சதவீதம் குறைவாக ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் கொடுத்துள்ள திரு.கே.கோவிந்தன், ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஏற்றுக் கொள்ளலாம்.

3. மேற்கண்ட பணிக்கு செலவினத்தினை குடிநீர் நிதியில் இருந்து மேற்கொள்ளலாம்.

**(ந.க.எண்.5498/2018/இ1)**

**தீர்மாள எண். 258 நாள் 30.11.2018**

அனுமதிக்கப்பட்டது

20) மேட்டூர் நகராட்சியில் தலைமை சுத்திகரிப்பு நிலையத்தில் படிகார அறையில் Agilator மோட்டார் பொருத்தி மராமத்து பணி மேற்கொள்ளுதல் பணிக்கு ரூ.1.20 இலட்சம் மதிப்பீட்டில் ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் 30.11.2018ம் தேதியன்று வரப் பெற்ற கீழ்க்காணும் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் முடிவிற்கு வைக்கப்படுகிறது.

| வ. எண். | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி தொகை | ஒப்பந்தப்புள்ளி சதவிகிதம் அதிகம்/குறைவு |
|---|---|---|---|
| 1 | திரு.கே.கோவிந்தன்<br>பூசாரிப்பட்டி<br>ஓமலூர்(அ), சேலம் | – | 0.15% சதவிகிதம் மதிப்பீட்டு விகிதத்தை விட குறைவு |
| 2 | திரு.எம்.ராமசாமி<br>8/140 பெரிய வனவாசி<br>மேட்டூர் | – | 2.60% சதவிகிதம் மதிப்பீட்டு விகிதத்தை விட அதிகம் |

அலுவலக குறிப்பு:

1. வரப் பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட 0.15% சதவீதம் குறைவாக ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் கொடுத்துள்ள திரு.கே.கோவிந்தன், பூசாரிப்பட்டி, ஓமலூா் ஒப்பந்ததாரரது ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஏற்றுக் கொள்ளலாம்.

**(ந.க.எண்.5508/2018/இ1)**

**தீர்மாள எண். 259 நாள் 30.11.2018**

அனுமதிக்கப்பட்டது

21). மேட்டூர் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண். 21 நேரு நகர் பகுதியில் அமைந்துள்ள சுகாதார வளாகம் 2003–ம் ஆண்டு கட்டப்பட்டு பொதுமக்களின் பயன்பாட்டில் இருந்து வந்து தற்போது பராமரிப்பு செய்யாமல் உள்ளதால் கட்டிடத்தின் உட்புறம் கதவுகள் மற்றும் குடிநீர் வசதி செய்து மராமத்து பணிகள் மேற்க்கொள்ள தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டு தொகை ரூ.3.80 இலட்சம் ஆகும். மேற்கண்ட செலவினத்தை மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு:

1). மன்றம் அனுமதிக்கலாம்.

2). இதற்காகும் செலவினத்தை குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.

**(ந.க.எண். 6005/2018/இ1)**

**தீர்மாள எண். 260 நாள் 30.11.2018**

அனுமதிக்கப்பட்டது

22). மேட்டூர் நகராட்சியின் மேற்கு மெயின் ரோடு பிரதான சாலை தமிழ்நாடு நகர்புற சாலைகள் மேம்பாட்டு திட்டத்தின் கீழ் ரூ. 1.00 கோடி நிதி ஒதுக்கீடு பெறப்பட்டு தற்போது பணிகள் நடை பெற்றுவருவதால் மேற்கண்ட சாலையின் அணுகு சாலைகளான

1). MLA Office, 2). Dr. Subrayan Nagar 3). முருகன் கோயில் 4). நீதி மன்ற சாலை 5). உழவர் சந்தை ஐயப்பன் கோவில் எதிர்புறம் 6). நேரு நகர் சாலை 7). நகராட்சி சாலை 8). மசூதி சாலை, 9). பிட்டர்மேன் குவாட்டர்ஸ் சாலை 10). கூலி லைன் சாலை போன்ற சாலைகள் மேற்கு பிரதான சாலைக்கு மேடு பள்ளமாக இருப்பதாலும் பிரதான சாலை மற்றும் அணுகு சாலைகள் சமன் படுத்தி அமைக்க தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டு தொகை ரூ. 6.00 இலட்சம் ஆகும். மேற்கண்ட செலவினத்தை மேற்க்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு:</u>

1). மன்றம் அனுமதிக்கலாம்.

2). இதற்காகும் செலவினத்தை பொது நிதியிலிருந்து மேற்க்கொள்ளலாம்.

3). அவசர அவசியம் கருதி தனி அலுவலர் முன்னனுமதி பெற்று மன்ற அனுமதியினை எதிர்நோக்கி ஒப்பந்த புள்ளி கோரியமைக்கு மன்றம் ஏற்கலாம்.

**(ந.க.எண். 2650–1 /2018/இ1)**

**தீர்மாள எண். 261 நாள் 30.11.2018**

அனுமதிக்கப்பட்டது

23). இந்நகராட்சியில் பொது சுகாதார பிரிவில் வாகன எண். TN 27 T 7796 பழுதடைந்த ஜாக்கி மாற்றுதல் பணிக்கு ரூ.0.79 இலட்சம் மதிப்பீட்டில் ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் 21.08.2018 ம் தேதியன்று வரப் பெற்று கீழ்க்காணும் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் முடிவிற்கு வைக்கப்படுகிறது.

| வ. எண். | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி தொகை | ஒப்பந்தப்புள்ளி சதவிகிதம் அதிகம்/குறைவு |
|---|---|---|---|
| 1 | திருவாளர் இலட்சுமி ஆட்டோ டீசல் ஒர்க்ஸ், மேட்டூர் | ரூ.78500/– | – |
| 2 | திருவாளர் J.V.K ஆட்டோ டீசல் ஒர்க்ஸ் | ரூ.79500/– | – |

<u>அலுவலக குறிப்பு:</u>

1. செலவினம் ரூ.79000/– க்கு வருவாய் நிதியிலிருந்து பணியினை மேற்க்கொள்ளலாம்.

2. அவசர அவசியம் கருதி தனி அலுவலர் முன்னனுமதி பெற்று மன்ற அனுமதியினை எதிர்நோக்கி ஒப்பந்தப்புள்ளி கோரியமைக்கு மன்றம் ஏற்கலாம்.

3. வரப் பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளியாக ரூ.78500 என ஒப்பந்தப்புள்ளி தொகை கொடுத்துள்ள திருவாளர்.இலட்சுமி ஆட்டோ டீசல் ஒர்க்ஸ் மேட்டூர். ஒப்பந்ததாரரது ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஏற்றுக் கொள்ளலாம்.

4. அவசர அவசியம் கருதி தனி அலுவலர் முன்னனுமதி பெற்று மன்ற அனுமதியினை எதிர்நோக்கி திருவாளர்.இலட்சுமி ஆட்டோ டீசல் ஒர்க்ஸ் நிறுவனத்திற்கு பணி உத்தரவு வழங்கியமைக்கு மன்றம் ஏற்கலாம்.

**(ந.க.எண். 3995/2018/இ1)**

**தீர்மாள எண். 262 நாள் 30.11.2018**

**அனுமதிக்கப்பட்டது**

24) மேட்டூர் நகரின் அனைத்து வார்டுகளிலும் பாதாள சாக்கடை திட்டம் அமைக்க தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மூலம் தயாரிக்கப்பட்ட விரிவான திட்ட மதிப்பீடு ரூ.7308.78 இலட்சத்திற்கு அரசாணை (D) எண்.25 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (ந.நி.III) துறை நாள்.27.01.2014–ல் சிறிய மற்றும் நடுத்தர நகரங்களுக்கான உள்கட்டமைப்பு வசதி திட்டம் மற்றும் ஒருங்கிணைந்த நகர்ப்புற வளர்ச்சி திட்டம் ஆகியவற்றின் கீழ் மேற்கொள்ள நிர்வாக அனுமதி வழங்கப்பட்டது.

அதன்படி இப்பணிகள் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தினரால் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மூன்று கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் அமைத்தல் பணிகளில் இரண்டு முழுமையாக மேற்கொள்ளப்பட்டு உள்ளது. ஒரு பணி முன்னேற்றத்தில் உள்ளது. இப்பணிகள் அனைத்தும் பிப்ரவரி – 2019க்குள் முடிக்க தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தினரால் இலக்கு நிர்ணயிக்கப்பட்டு பணி நடைபெற்று வருகிறது. இத்திட்டத்தில் பல வார்டுகளில் சில பகுதிகளில் உள்ள தெருக்களில் சேகரிப்பு குழாய்களான கழிவு நீர் குழாய் பதித்தல் பணிகள் விடுபட்டுள்ளது. இப்பணிகளை மேற்கொள்ள அங்கீகரிக்கப்பட்ட மதிப்பீட்டுத் தொகைக்குள் செய்ய நிதி ஆதாரம் இல்லை என்பதால் விடுபட்ட பகுதிகளுக்கு பாதாள சாக்கடை திட்டத்தின் சேகரிப்பு கழிவு நீர் குழாய்கள் பதிக்க அளவீடுகள் மேற்கொள்ளப்பட்டு ரூ.978.00 இலட்சத்திற்கு தயார் செய்யப்பட்டுள்ளது.

விடுப்பட்ட பகுதிகளுக்கு ஏறத்தாழ 12.00 கிலோ மீட்டர் நீளத்திற்கு பாதாள சாக்கடை திட்டத்தின் சேகரிப்பு கழிவு நீர் குழாய்கள், வீட்டு இணைப்புகளுக்கான குழாய், நீருந்து நிலையங்கள்( 5 எண்ணிக்கை), சுற்றுச்சுவர் மற்றும் வீட்டில் உட்புறங்களில் கழிவுநீர் குழாய் அமைத்தல் ஆகிய பணிகள் மேற்கொள்ள வேண்டியுள்ளது. இப்பணியினை செய்ய தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ.978.00 இலட்சத்தினை ஈடு செய்ய மேட்டூர் நகராட்சி நிதி நிலைமை திருப்திகரமாக இல்லை.

எனவே, நிதி ஒதுக்கீடு கோரி பிரேரணை 20.06.2018ல் நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களுக்கு கடிதம் அனுப்பப்பட்டது. அரசாணை (MS)எண்.82, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (MA2) துறை நாள்.23.08.2018ல் ஒருங்கிணைந்த நகர்ப்புற வளர்ச்சி திட்டம் 2018–

2019 ன் கீழ் ரூ.978.00 இலட்சத்திற்கு நிர்வாக அனுமதி வழங்கி உத்திரவிடப்பட்டுள்ளதை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு

மன்றம் பதிவு செய்யலாம்.

**(ந.க.எண்.2557/2018/இ1)**

**தீர்மாள எண். 263 நாள் 30.11.2018**

**அனுமதிக்கப்பட்டது**

ஆணையாளர் (ம) தனி அலுவலர்,
மேட்டூர் நகராட்சி

## நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை
## மேட்டூர் நகராட்சி

மேட்டூர் நகராட்சியின் சாதாரணக் கூட்டம் நகர்மன்றத்தில் நகராட்சியின் தனி அலுவலர் அவர்களால் 13.11.2018 ம் தேதி பிற்பகல் 4.00 மணிக்கு நடைபெற உள்ளது.

### மன்றப் பொருள்

1) மேட்டூர் நகரின் அனைத்து வார்டுகளிலும் பாதாள சாக்கடை திட்டம் அமைக்க தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மூலம் தயாரிக்கப்பட்ட விரிவான திட்ட மதிப்பீடு ரூ.7308.78 இலட்சத்திற்கு அரசாணை (D) எண்.25 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை (ந.நி.III) நாள்.27.01.2014– ல் சிறிய மற்றும் நடுத்தர நகரங்களுக்கான உள்கட்டமைப்பு வசதி திட்டத்தில் மேற்கொள்ள நிர்வாக அனுமதி வழங்கப்பட்டது. அதன்படி இப்பணிகள் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தினரால் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை–5 அவர்களின் செயல்முறை கடித ந.க.எண்.99997/2018/UGSS நாள்.23.05.2018– ல் படி TUFIDCO வட்டியில்லாகடன் மூலம் 8800 வீட்டு கழிவுநீர் இணைப்புகள் வீட்டின் உட்புறத்தில் மேற்கொள்ளுதல் பணியினை ரூ.600.00 இலட்சத்தில் (Phase-I) மேற்கொள்ள நிர்வாக அனுமதி வழங்கப்பட்டது. இப்பணியினை மேற்கொள்ள 30.07.18ல் இரண்டாவது முறை ஒப்பந்த புள்ளி கோரியதில் வரப்பெற்ற கீழ்க்கண்ட இரண்டு ஒப்பந்தபுள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண். | ஒப்பந்ததாரர் பெயர் மற்றும் முகவரி |
|---|---|
| 1 | திரு.சண்முகவேல், ஒப்பந்ததாரர், முல்லை நகர், சூரமங்கலம், சேலம் |
| 2 | M/S ஆண்டவர் கன்ஷ்ரக்சன்ஸ், ஒப்பந்ததாரர், மேற்கு மெயின் ரோடு , மேட்டூர் |

வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தபுள்ளிகளையும் இந்நகராட்சியின் ஒப்பந்த கூர்ந்தாய்வு குழு மூலம் கூர்ந்தாய்வு செய்ததில் வரப்பெற்ற இரண்டு ஒப்பந்த புள்ளிகளும், தகுதி பெற்றுள்ள ஒப்பந்தபுள்ளிகள் ஆகும். ஆதலால், ஒப்பந்த புள்ளிகளின் விலைவிகித பட்டியல் 05.09.2018ல் திறக்கப்பட்டு அதன் ஒப்புநோக்கு பட்டியல் கீழ்கண்டவாறு தயார் செய்யப்பட்டுள்ளது

| வ. எண். | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி சதவிகிதம் அதிகம்/குறைவு |
|---|---|---|
| 1 | திரு.சண்முகவேல், ஒப்பந்ததாரர், முல்லை நகர், சூரமங்கலம், சேலம் | 15.26% அதிகம் |
| 2 | M/S ஆண்டவர் கன்ஷ்ரக்சன்ஸ், ஒப்பந்ததாரர், மேற்கு மெயின் ரோடு , மேட்டூர் அணை | 13.03% அதிகம் |

மேற்கண்ட பணிக்கு குறைந்த ஒப்பந்த புள்ளியாக , மதிப்பீட்டை விட 13.03% கூடுதலாக வழங்கியுள்ள M/S ஆண்டவர் கன்ஷ்ரக்சன்ஸ், மேற்கு மெயின் ரோடு , மேட்டூர் அணை அவர்களுக்கு விலை குறைப்பு செய்து தர கோரி 11.09.2018ல் விலை குறைப்பு கடிதம் அனுப்பப்பட்டதில் ஒப்பந்ததாரர் தனது 14.09.2018 ம் தேதிய கடிதத்தில் மதிப்பீட்டை விட கூடுதலாக 11.00% வழங்கி ஒப்பந்தபுள்ளி விகிதத்தை குறைத்து சம்மதம் தெரிவித்துள்ளார்.

ஒப்பந்தபுள்ளி விகிதம் 11.00% மதிப்பீட்டை விட கூடுதலாக இருப்பதால் விலை குறைப்பு செய்து தர கோரி 18.09.2018ல் இரண்டாவது முறையாக விலை குறைப்பு கடிதம் அனுப்பப்பட்டதில் ஒப்பந்ததாரர் விலை குறைப்பு குறித்து எந்தவொரு அறிவிப்பும் செய்யவில்லை மேலும் விலை குறைப்பு செய்து தர கோரி 10.10.2018ல் மூன்றாவது முறையாக விலை குறைப்பு கடிதம் அனுப்பப்பட்டதில் 07.11.2018 ம் தேதிய கடிதத்தில் சில இனங்களில் விலை விகிதத்தினை குறைத்து கொடுத்துள்ளார். அதன் படி ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டதில் 4.98% மதிப்பீட்டை விட அதிகமாக உள்ளது. இப்பணிக்கான மதிப்பீடு 2016–2017 ஆம் ஆண்டின் செந்தூர விலைவிகித பட்டியலின்படி தயார் செய்யப்பட்டு தொழில்நுட்ப அனுமதி பெறப்பட்டது. தற்போது 2018–2019ம் ஆண்டின் செந்தூர விலைவிகித பட்டியல் வரப்பெற்றுள்ளது.

அதன் அடிப்படையில் உள்ளூர் விலை விகிதத்தின்படி ஒப்புநோக்கியதில் மேற்படி விலைவிகிதம் உள்ளூர் மார்க்கெட் விலைவிகிதங்களை அனுசரித்துள்ளதாலும் இரண்டாவது அழைப்பில் பெறப்பட்ட ஒப்பந்தபுள்ளி என்பதாலும் M/S ஆண்டவர் கன்ஷ்ரக்சன்ஸ், மேற்கு மெயின் ரோடு , மேட்டூர் அணை என்பவர் மதிப்பீட்டை விட கூடுதலாக 4.98% அதிகமாக வழங்கிய ஒப்பந்தபுள்ளியை, பொறியியல் வழிகாட்டு நூலின் குறிப்புகளின்படி ஏற்க மன்றத்தின் அனுமதிக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு:</u>

மன்றம் அனுமதி வழங்கலாம்

**(ந.க.எண்.686/2018/இ1)**

**தீர்மாள எண். 212 நாள் 13.11.2018**

அனுமதிக்கப்பட்டது

2) மேட்டூர் நகரின் அனைத்து வார்டுகளிலும் பாதாள சாக்கடை திட்டம் அமைக்க தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மூலம் தயாரிக்கப்பட்ட விரிவான திட்ட மதிப்பீடு ரூ.7308.78 இலட்சத்திற்கு அரசாணை (D) எண்.25 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை (ந.நி.III) நாள்.27.01.2014–ல் சிறிய மற்றும் நடுத்தர நகரங்களுக்கான உள்கட்டமைப்பு வசதி திட்டத்தில் மேற்கொள்ள நிர்வாக அனுமதி வழங்கப்பட்டது. அதன்படி இப்பணிகள் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தினரால் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை–5 அவர்களின் செயல்முறை கடித ந.க.எண்.99997/2018/UGSS நாள்.23.05.2018– ல் படி TUFIDCO வட்டியில்லாகடன் மூலம் 1200 வீட்டு கழிவுநீர் இணைப்புகள் வீட்டின் உட்புறத்தில் மேற்கொள்ளுதல் பணியினை ரூ.90.00 இலட்சத்தில் (Phase-II) மேற்கொள்ள நிர்வாக அனுமதி வழங்கப்பட்டது. இப்பணியினை மேற்கொள்ள 30.07.18ல் இரண்டாவது முறை ஒப்பந்த புள்ளி கோரியதில் வரப்பெற்ற கீழ்க்கண்ட இரண்டு ஒப்பந்தபுள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண். | ஒப்பந்ததாரர் பெயர் மற்றும் முகவரி |
|---|---|
| 1 | திரு.சண்முகவேல், ஒப்பந்ததாரர், முல்லை நகர், சூரமங்கலம், சேலம் |
| 2 | M/S ஆண்டவர் கன்ஷ்ரக்சன்ஸ், ஒப்பந்ததாரர், மேற்கு மெயின் ரோடு , மேட்டூர் |

வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தபுள்ளிகளையும் இந்நகராட்சியின் ஒப்பந்த கூர்ந்தாய்வு குழு மூலம் கூர்ந்தாய்வு செய்ததில் வரப்பெற்ற இரண்டு ஒப்பந்த புள்ளிகளும், தகுதி பெற்றுள்ள ஒப்பந்தபுள்ளிகள் ஆகும். ஆதலால், ஒப்பந்த புள்ளிகளின் விலைவிகித பட்டியல் **05.09.2018**ல் திறக்கப்பட்டு அதன் ஒப்புநோக்கு பட்டியல் கீழ்கண்டவாறு தயார் செய்யப்பட்டுள்ளது

| **வ. எண்.** | **ஒப்பந்ததாரர் பெயர்** | **ஒப்பந்தப்புள்ளி சதவிகிதம் அதிகம்/குறைவு** |
|---|---|---|
| **1** | திரு.சண்முகவேல், ஒப்பந்ததாரர், முல்லை நகர், சூரமங்கலம், சேலம் | 17.22% அதிகம் |
| **2** | M/S ஆண்டவர் கன்ஷ்ரக்சன்ஸ், ஒப்பந்ததாரர், மேற்கு மெயின் ரோடு , மேட்டூர் அணை | 13.03% அதிகம் |

மேற்கண்ட பணிக்கு குறைந்த ஒப்பந்த புள்ளியாக , மதிப்பீட்டை விட **13.03%** கூடுதலாக வழங்கியுள்ள M/S ஆண்டவர் கன்ஷ்ரக்சன்ஸ், மேற்கு மெயின் ரோடு , மேட்டூர் அணை அவர்களுக்கு விலை குறைப்பு செய்து தர கோரி **11.09.2018**ல் விலை குறைப்பு கடிதம் அனுப்பப்பட்டதில் ஒப்பந்ததாரர் தனது **14.09.2018** ம் தேதிய கடிதத்தில் மதிப்பீட்டை விட கூடுதலாக **11.00%** வழங்கி ஒப்பந்தபுள்ளி விகிதத்தை குறைத்து சம்மதம் தெரிவித்துள்ளார்.

ஒப்பந்தபுள்ளி விகிதம் **11.00%** மதிப்பீட்டை விட கூடுதலாக இருப்பதால் விலை குறைப்பு செய்து தர கோரி **18.09.2018**ல் இரண்டாவது முறையாக விலை குறைப்பு கடிதம் அனுப்பப்பட்டதில் ஒப்பந்ததாரர் விலை குறைப்பு குறித்து எந்தவொரு அறிவிப்பும் செய்யவில்லை மேலும் விலை குறைப்பு செய்து தர கோரி **10.10.2018**ல் மூன்றாவது முறையாக விலை குறைப்பு கடிதம் அனுப்பப்பட்டதில் **07.11.2018** ம் தேதிய கடிதத்தில் சில இனங்களில் விலை விகிதத்தினை குறைத்து கொடுத்துள்ளார். அதன் படி ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டதில் **4.98%** மதிப்பீட்டை விட அதிகமாக உள்ளது. இப்பணிக்கான மதிப்பீடு **2016–2017** ஆம் ஆண்டின் செந்தூர விலைவிகித பட்டியலின்படி தயார் செய்யப்பட்டு தொழில்நுட்ப அனுமதி பெறப்பட்டது. தற்போது **2018–2019**ம் ஆண்டின் செந்தூர விலைவிகித பட்டியல் வரப்பெற்றுள்ளது.

அதன் அடிப்படையில் உள்ளூர் விலை விகிதத்தின்படி ஒப்புநோக்கியதில் மேற்படி விலைவிகிதம் உள்ளூர் மார்க்கெட் விலைவிகிதங்களை அனுசரித்துள்ளதாலும் இரண்டாவது அழைப்பில் பெறப்பட்ட ஒப்பந்தபுள்ளி என்பதாலும் M/S ஆண்டவர் கன்ஷ்ரக்சன்ஸ், மேற்கு மெயின் ரோடு , மேட்டூர் அணை என்பவர் மதிப்பீட்டை விட கூடுதலாக **4.98%** அதிகமாக வழங்கிய ஒப்பந்தபுள்ளியை, பொறியியல் வழிகாட்டு நூலின் குறிப்புகளின்படி ஏற்க மன்றத்தின்அனுமதிக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு:</u>**

மன்றம் அனுமதி வழங்கலாம்

**(ந.க.எண்.686/2018/இ1)**

**தீர்மான எண். 213 நாள் 13.11.2018**

**அனுமதிக்கப்பட்டது**

3) மேட்டூர் அணை தண்ணீர் திறப்பு விழாவிற்கு 19.07.2018 அன்று மாண்புமிகு தமிழக முதல்வர் திரு. எடப்பாடி கே.பழனிசாமி அவர்களையும் மாண்புமிகு துணை முதலமைச்சர் திரு.ஓ.பன்னீர் செல்வம் அவர்களையும் நகராட்சி அலுவலகம் மற்றும் பணியாளர் சார்பாக வரவேற்றமைக்கு தின செய்தி நாளிதழில் வெளியிடப்பட்டமைக்கு விளம்பர கட்டணமாக ரூ.8820/–க்கான பட்டியல் வரப்பெற்றுள்ளது. மேற்கண்ட பட்டியல் தொகை வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

*<u>அலுவலக குறிப்பு:</u>*

8. மன்றம் அனுமதிக்கலாம்.

9. இதற்காகும் செலவினத்தை பொது நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.

**(ந.க.எண்.3802/2010/இ1)**

**தீர்மாள எண். 214 நாள் 13.11.2018**

அனுமதிக்கப்பட்டது

4) மேட்டூர் நகராட்சியின் அனைத்து பிரிவு கணினிகள் மற்றும் பிரிண்டர்களுக்கு 2018–2019 – ஆம் ஆண்டிற்கான வருடாந்திர பராமரிப்பு பணிகளை (Asset Management Company) திருவாளர் ஸ்பைடர் டெக்னாலஜி மூலம் பழுதுகள் சரி செய்து தர மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலகக் குறிப்பு</u>

11) மன்றம் அனுமதிக்கலாம்.

12) இதற்காகும் செலவினத்தை பொது நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.

**(ந.க.எண். 5541 /2018/இ1)**

**தீர்மாள எண். 215 நாள் 13.11.2018**

அனுமதிக்கப்பட்டது

5) மேட்டூர் நகராட்சி தலைமை சுத்திகரிப்பு நிலையத்தில் உள்ள படிகார அறையில் Agitator மோட்டார் பொருத்தவும் மேற்கண்ட அறையினை மராமத்து பணிகள் மேற்கொள்ள தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டு தொகை ரூ. 1,20,000/– ஆகும். மேற்கண்ட செலவினத்தை மேற்க் கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலகக் குறிப்பு</u>

3) மன்றம் அனுமதிக்கலாம்.

4) இதற்காகும் செலவினத்தை குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.

**(ந.க.எண். 5508 /2018/இ1)**

**தீர்மாள எண். 216 நாள் 13.11.2018**

அனுமதிக்கப்பட்டது

6) மேட்டூர் நகராட்சி தங்கமாபுரிபட்டிணம் நீர் உந்து நிலையத்தில் உள்ள 10HP SUBMERSIBLE மேட்டார் காயில் பழதடைந்துள்ளதை சரி செய்ய தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ. 58,000/– ஆகும். மேற்கண்ட 10HP SUBMERSIBLE Motor காயிலை புதுப்பிக்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலகக் குறிப்பு</u>

3) மன்றம் அனுமதிக்கலாம்.

4) இதற்காகும் செலவினத்தை குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.

**(ந.க.எண். 5506 /2018/இ1)**

**தீர்மாள எண். 217 நாள் 13.11.2018**

அனுமதிக்கப்பட்டது

7) மேட்டூர் நகராட்சி பகுதி மாதையன் குட்டை க.எண். 10/125 இராஜாஜிநகர், மேட்டூர் அணையில் வசிக்கும் திரு. அங்குராஜ் த/பெ. அங்கப்பன் என்பவர் தனது சொத்திற்கு 1 முதல் 5 வரையிலான பிரதிவாதிகளோ அவர்களது ஆட்களோ, கூலியாட்களோ முகவர்களோ எவ்வித இடையூறும் செய்ய கூடாது என நிரந்தர தடையுத்தரவு கோரி மேட்டூர் சார்பு நீதி மன்றத்தில் O.S.No.184/2018– வழக்கு தொடர்ந்து ஆணையாளர் மேட்டூர் நகராட்சி அவர்களை 6 ம் பிரதி வாதியாக சேர்க்கப்பட்டு வழக்கு தொடர்ந்து உள்ளார். மேற்படி வழக்கினை நகராட்சி வழக்கறிஞர் திரு. TMA இனியன் அவர்களிடம் ஒப்படைத்து நகராட்சி சார்பாக ஏற்று நடத்திடவும் இதற்கு செலவாகும். வழக்கறிஞர் கட்டணம் அனைத்திற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலகக் குறிப்பு</u>

2) மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண். 4640/2018/எப்1)**

**தீர்மாள எண். 218 நாள் 13.11.2018**

அனுமதிக்கப்பட்டது

8) மேட்டூர் நகராட்சி பகுதியில் உள்ள V.P.K. நகர் பகுதியில் வசிக்கும் திரு. ராமர் த/பெ. மாரியப்பன் என்பவர் சொத்துவரி விதிக்கப்பட்டது சம்மந்தமாக மேட்டூர் சார்பு நீதி மன்றத்தில் OS 67/18 மூலம் வழக்கு தொடர்ந்து அதில் ஆணையர் மேட்டூர் நகராட்சி அவர்களை 6 வது பிரதிவாதி சேர்த்து வழக்கு தொடர்ந்துள்ளார். மேற்படி வழக்கினை நகராட்சி வழக்கறிஞர்

திரு. TMA இனியன் அவர்களிடம் ஒப்படைத்து நகராட்சி சார்பாக ஏற்று நடத்திடவும், இதற்கு செலவாகும் வழக்கறிஞர் கட்டணம் அனைத்திற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலகக் குறிப்பு</u>

2) மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண். 1408 /2018/எப்1)**

**தீர்மாள எண். 219 நாள் 13.11.2018**

**அனுமதிக்கப்பட்டது**

**9)** மேட்டூர் நகராட்சி பகுதியில் குள்ளவீரன் பட்டி கதவு எண். 54 A 26 ல் வசிக்கும் திரு. சக்திவேல் த/பெ. முருகன் என்பவர் சொத்துவரி பெயர் மாற்றம் செய்ய கூடாது என மேட்டூர் சார்பு நீதி மன்றத்தில் I A524 / 2018 in O.S.175/2018 வழக்கு தொடர்ந்து ஆணையாளர் மேட்டூர் நகராட்சி அவர்களை இரண்டாம் பிரதிவாதியாக சேர்க்கப்பட்டுள்ளது.

மேற்படி வழக்கினை நகராட்சி வழக்கறிஞர் திரு. T.M.A இனியன் அவர்களிடம் ஒப்படைத்து நகராட்சி சார்பாக ஏற்று நடத்திடவும் இதற்கு செலவாகும் வழக்கறிஞர் கட்டணம் அனைத்திற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலகக் குறிப்பு</u>

2) மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண். 4330 /2018/எப்1)**

**தீர்மாள எண். 220 நாள் 13.11.2018**

**அனுமதிக்கப்பட்டது**

**10)** மேட்டூர் நகராட்சி பகுதியில் உள்ள இராஜகணபதி நகரில் வசிக்கும் டாக்டர் கே.பாஸ்கரன் த/பெ. கைலாசம் டாக்டர் இளவரசி க/பெ. பாஸ்கரன் ஆகியோர் வீட்டின் முன்பு அமைக்கப்பட்டுள்ள சிமெண்ட் கான்கீரிட் தளத்தை அகற்றாமல் இருக்க தடை உத்திரவு கோரி I A168/2018 in O.S.No.70/2018 மூலம் வழக்கு தொடர்ந்துள்ளார்.

மேற்படி வழக்கினை நகராட்சி வழக்கறிஞர் திரு. T.M.A இனியன் அவர்களிடம் ஒப்படைத்து நகராட்சி சார்பாக ஏற்று நடத்திடவும் இதற்கு செலவாகும் வழக்கறிஞர் கட்டணம் அனைத்திற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலகக் குறிப்பு</u>

2) மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண். 1490 /2018/எப்1)**

**தீர்மாள எண். 221 நாள் 13.11.2018**

அனுமதிக்கப்பட்டது

**11)** மேட்டூர் நகராட்சி பகுதி தங்கமாபுரிபட்டிணம் கதவு எண்.**20**ல் வசிக்கும் திரு.R.செந்தில் குமார் த/பெ ராமசாமி என்பவர் நகராட்சியால் வழங்கப்பட்ட அறிவிப்பை பெற்று கொண்டு **(1055/18/எப்1)** அறிவிப்பு செல்லாது என டிக்ளர் செய்யவும், தாவா சொத்தை இடிக்கவோ சேதபடுத்தவோ கூடாது என நிரந்தர உறுத்து கட்டளை கோரி சேலம் விடுமுறை கால மாவட்ட நீதிபதி நீதி மன்றத்தில் வழக்கு தொடர்ந்து அதில் ஆணையர் மேட்டூர் நகராட்சி அவர்களை எதிர்மனுதாரராக சேர்ந்து அசல் வழக்கு எண்,**44/18** மூலம் வழக்கு தொடர்ந்துள்ளார். மேற்படி வழக்கிற்கு மேட்டூர் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம் புதியதாக அசல் வழக்கு எண்.**62/18** வழங்கியுள்ளது.

மேற்படி வழக்கினை நகராட்சி வழக்கறிஞர் திரு.TMA. இனியன் அவர்களிடம் ஒப்படைத்து நகராட்சி சார்பாக ஏற்று நடத்திடவும் இதற்கு செலவாகும் வழக்கறிஞர் கட்டணம் அனைத்திற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு:</u>

மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண்.1055/18/எப்1)**

**தீர்மாள எண். 222 நாள் 13.11.2018**

அனுமதிக்கப்பட்டது

**12)** மேட்டூர் நகராட்சி பகுதியில் உள்ள தூக்கனாம்பட்டி கதவு எண்.**15.20**A1 ல் வசிக்கும் திரு.S.L முனுசாமி த/பெ லட்சுமண கவுண்டர் என்பவர் சொத்து பிரச்சனை காரணமாக மேட்டூர் மாவட்ட உரிமையியல் நீதி மன்றத்தின்.O.S.No.5t/2017 மூலம் வழக்கு தொடர்ந்துள்ளார். மேற்படி வழக்கில் ஆணையர் மேட்டூர் நகராட்சி அவர்களை **5**ம் பிரதிவாதியாக சேர்க்கப்பட்டுள்ளது.

இவ்வழக்கினை நகராட்சி வழக்கறிஞர் திரு.TMA. இனியன்BA LLB அவர்களிடம் ஒப்படைத்து நகராட்சி சார்பாக ஏற்று நடத்திடவும் இதற்கு செலவாகும் வழக்கறிஞர் கட்டணம் அனைத்திற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு:</u>

மன்றம் அனுமதிக்கலாம்

**(ந.க.எண்.1003/2017/எப்1)**

**தீர்மாள எண். 223 நாள் 13.11.2018**

அனுமதிக்கப்பட்டது

**13)** மேட்டூர் நகராட்சியின் பொது சுகாதாரப் பிரிவின் மலேரியா பணியாளராக பணியாற்றிய திரு.சதீஸ்குமார், **20.04.2014**ந் தேதியில் இறந்துவிட்டார் அவர் மேட்டூர் நகராட்சி பணியாளர்கள்

கூட்டுறவு கடன் சங்கத்தில் கடன் பெற்றுள்ள தொகையை செலுத்தாத காரணத்தால் ஜாமீன் கையொப்பம் அளித்த திரு.ஆர்.பலராமன் துப்புரவு பணி மேற்பார்வையாளர் மாத ஊதியத்தில் பிடித்தம் செய்வது சம்மந்தமாக மேட்டூர் மாவட்ட உரிமையியல் நீதி மன்றத்தில் Os No.54/2017 மூலம் வழக்கு தொடர்ந்துள்ளார். மேற்படி வழக்கில் ஆணையர் மேட்டூர் நகராட்சி அவர்களை முதல் பிரதிவாதியாக சேர்ந்து வழக்கு தொடர்ந்துள்ளார். இவ்வழக்கினை நகராட்சி வழக்கறிஞர் திரு.TMA.இனியன் BA..., LLB, அவர்களிடம் ஒப்படைத்து நகராட்சி சார்பாக ஏற்று நடத்திடவும் இதற்கு செலவாகும் வழக்கறிஞர் கட்டணம் அனைத்திற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு:</u>

மன்றம் அனுமதிக்கலாம்

**(ந.க.எண்.1071/2017/எப்1)**

**தீர்மாள எண். 224 நாள் 13.11.2018**

**அனுமதிக்கப்பட்டது**

14) தமிழ்நாடு சட்ட பேரவையில் 2018–2019– ம் ஆண்டிற்கான நகராட்சி நிர்வாக மற்றும் குடிநீர் வழங்கல் துறைக்கான மானியக் கோரிக்கை விவாதித்த போது மாண்புமிகு நகராட்சி நிர்வாக மற்றும் குடிநீர் வடிகால், சிறப்பு திட்ட செயலாக்கத்துறை அமைச்சர் அவர்கள் “**மாநகராட்சிகள் மற்றும் நகராட்சிகளில் உள்ள அனைத்து வார்டுகளிலும் உயர்தரம் வாய்ந்த குடிநீர் மிகக் குறைந்த விலையில் வழங்க தானியங்கு குடிநீர் மையங்கள் (Automatic vending Centres)** நிறுவப்படும்“ என்ற அறிவிப்பினை வெளியிட்டார்கள்.

தானியங்கும் குடிநீர் மையங்கள் நாள் ஒன்றுக்கு 10,000 லிட்டர் வீதம் விநியோகிக்கும் திறன் கொண்டதாகும். மேட்டூர் நகராட்சியில் உள்ள 30 வார்டுகளிலும் உள்ள மக்கள்

இத்திட்டத்தினால் கீழ்கண்டவாறு பயன்பெறும் வகையில் பொதுமக்களுக்கு உயர்தரம் வாய்ந்த குடிநீர் வழங்கப்படும்.

7. மூலதன செலவினம் தனியார் தொழில் நிறுவனங்களை/ தொழில் முனைவோர்களை சார்ந்ததாகும்.(CSR & Other funds)
8. இயக்குதல் மற்றும் பராமரிப்பிற்கான செலவினங்கள், பயனீட்டாளர்களிடமிருந்து பெறப்படும் கட்டணத்தை வைத்தே முழுமையாக மேற்கொள்ளப்படும்
9. மின் கட்டணம் தன்னார்வ தொண்டு நிறுவனங்களைச் சார்ந்ததாகும்.
10. பொது மக்களுக்கு 1 லிட்டர் சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் 35 பைசா என்ற விகிதத்தில், 20 லிட்டர் குடிநீர் ரூ.7/க்கு வழங்கப்படும்
11. அனைத்து குடியிருப்புகளும் பயன்பெரும் வகையில் ரூ.50/– மதிப்பீட்டில் ஒரு குடும்பத்திற்கு 1 வீதம் Smart Card தனியார் தொழில் நிறுவனம்/ தொண்டு நிறுவனத்தால் வழங்கப்படும்.
12. நகர்ப்புர உள்ளாட்சி அமைப்பு மூலம் நிலையம் அமைப்பதற்கான இடம் மற்றும் குடிநீர் ஆதாரம் மட்டும் செய்து தரப்படும். இதனை தவிர நகர்ப்புற உள்ளாட்சி அமைப்பிற்கு எவ்வித செலவினமும் இல்லை. இதில் நிலம். தரை வாடகை அடிப்படையில் வருடத்திற்கு ஒரு.ச.மீக்கு ரூ.1/– என்ற அடிப்படையில் நிர்ணயம் செய்யப்பட வேண்டும்.

நகராட்சிகளில் உள்ள அனைத்து வார்டுகளிலும் ஒவ்வொரு குடிநீர் மையங்கள் அமைக்க தேர்வு செய்யப்படும் இடங்கள் அம்மா உணவகங்கள் அருகிலோ, அரசு மருத்துவமனை, பேருந்து நிலையம் மற்றும் கடைவீதிகளின் அருகிலோ, வீட்டு பகுதிகளை பொருத்த வரையில் சிறு மின்விசை பம்புகள் உள்ள இடமோ மேல்நிலை நீர்தேக்க தொட்டி உள்ள இடமோ அல்லது உள்ளாட்சி அமைப்புகள் ஒப்படைக்கப்பட்ட திறந்த வெளி இடமாகவோ இருக்குமாறு தேர்வு செய்யப்பட வேண்டும். ஒவ்வொரு இடங்களிலும் இவ்வாறு அமைக்க தலா ரூ.18.00 இலட்சம் மதிப்பீடு ஆகும். 30 இடங்களிலும் நிறுவுவதற்கு உத்தேச மதிப்பீடு ரூ.540.00 இலட்சம் ஆகும்.

மேலும் மாண்புமிகு நகராட்சி நிர்வாக மற்றும் குடிநீர் வடிகால், சிறப்பு திட்ட செயலாக்கத்துறை அமைச்சர் அவர்களின் அறிவிப்பினை செயல்படுத்தும் வகையில், மேட்டூர் நகராட்சியில் உள்ள அனைத்து வார்டுகளிலும் வார்டுக்கு 1 வீதம் 30 தானியங்கு குடிநீர் மையங்கள் (Automatic vending centres) தனியார் தொழில் நிறுவனங்களுடன் / தொழில் முனைவோர்களும் இணைந்து சமூக பொறுப்புணர்வு மற்றும் பிரநிதியினை பெற்று (Corporate Social responsibility fund) செயல்படுத்தவும் அனுபவம் வாய்ந்த மற்றும் உரிய தொழில் நுட்ப நுணுக்கங்களை கொண்ட தனியார் தொழில் நிறுவனத்தினை தேர்வு செய்ய ஏதுவாக அந்தந்த உள்ளாட்சி அமைப்புகளில் " Expression of Interest" விளம்பரம் செய்து தனியார் தொழில் நிறுவனத்தினை தேர்வு செய்து, இயக்குதல் மற்றும் பராமரிப்பு பணிகளை மேற்கொள்ளப்பட வேண்டும். மேற்கண்ட வழிமுறைகளின் படி உரிய நடவடிக்கை எடுக்க நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை

அவர்களின் கடித .ந.க.எண்.17018/2018/குவ1 நாள்.23.08.2018ம் தேதிய கடிதத்தில் அறிவுறுத்தப்பட்டுள்ளது. மேற்கண்ட திட்டங்கள் செயல்படுத்துவது தொடர்பாக மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

2. மன்றம் அனுமதிக்கலாம்
3. இப்பணிகளை மேற்கொள்ள நிர்வாக அனுமதி மற்றும் (Expression of Interest ) கோருவதற்கு அனுமதி ஆகியவை கோரி நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களுக்கு பிரேரனை அனுப்ப மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண்.4984/2018/இ1)**

**தீர்மாள எண். 225 நாள் 13.11.2018**

அனுமதிக்கப்பட்டது

ஆணையாளர் (ம) தனி அலுவலர்,
மேட்டூர் நகராட்சி.

நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை
மேட்டூர் நகராட்சி

மேட்டூர் நகராட்சியின் சாதாரணக் கூட்டம் நகர்மன்றத்தில் நகராட்சியின் தனி அலுவலர் அவர்களால் 23.11.2018 ம் தேதி பிற்பகல் 4.00 மணிக்கு நடைபெற உள்ளது.

மன்றப் பொருள்

1) மேட்டூர் நகராட்சியில் நடைபெற்று வரும் வளர்ச்சி பணிகள் குறித்து சுதந்திர தின சிறப்பு தொழில் மலர் 2018 ன் தமிழ் முரசு நாளிதழில் 14.08.2018 ந் தேதி அன்று வெளியிட்டமைக்கு வரப்பெற்றுள்ள பட்டியல் தொகை ரூ.8,925/– ஆகும் மேற்கண்ட தொகையினை தமிழ் முரசு நாளிதழினை KAL PUBLICATIONS(P)LTD நிறுவனத்திற்கு வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு

7. மன்றம் அனுமதிக்கலாம்
8. இதற்காகும் செலவினத்தை பொது நிதியிலிருந்து மேற்க்கொள்ளலாம்
9. அவசர அவசியம் கருதி தனி அலுவலர் முன்னனுமதி பெற்று மன்றம் அனுமதியினை எதிர்நோக்கி ரூ.8925/ஐ KAL PUBLICATIONS(P)LTD நிறுவனத்திற்கு வழங்கியமைக்கு மன்றம் ஏற்கலாம்.

**(ந.க.எண்.3802/2018/இ1)**

**தீர்மாள எண். 226 நாள் 23.11.2018**

அனுமதிக்கப்பட்டது

2) மேட்டூர் நகராட்சிக்குட்பட்ட 30 வார்டுகளிலும் உள்ள சிறுபாலங்கள் மழைக்காலங்களில் ஏற்படும் அடைப்பினை சீர் செய்யும் வகையில் 25 எண்ணிக்கைகளான குழாய் பாலங்கள் அமைக்க 2மீ நீளம் 1 அடி அகலம் கொண்ட Rcc Non Pressure Pipe- னை வாங்குதல் பணிக்கு உத்தேச செலவுத்தொகை ரூ.58,000/– ஆகும் மேற்கண்ட 25 எண்ணிக்கைகளான Rcc Non Pressure Pipe வாங்கி சேகரம் செய்ய மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு

4. மன்றம் அனுமதிக்கலாம்
5. இதற்காகும் செலவினத்தை குடிநீர் நிதியிலிருந்து மேற்க்கொள்ளலாம்

**(ந.க.எண்.5628/2018/இ1)**

**தீர்மாள எண். 227 நாள் 23.11.2018**

அனுமதிக்கப்பட்டது

3) இந்நகராட்சியில் பொது சுகாதார பிரிவில் வாகன எண்.TN27W0535ன் பழுதுகளை சரிசெய்து வாகனத்தின் தகுதிச்சான்று புதுப்பித்தல் பணிக்கு ரூ.0.34 இலட்சம் மதிப்பீட்டில் ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் 24.08.2018ம் தேதியன்று வரப்பெற்ற கீழ்க்காணும் இரண்டு ஒப்பந்தபுள்ளிகள் மன்றத்தின் முடிவிற்கு வைக்கப்படுகிறது.

| வ. எண். | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி தொகை | ஒப்பந்தப்புள்ளி சதவிகிதம் |
|---|---|---|---|

| | | | அதிகம்/குறைவு |
|---|---|---|---|
| 1 | திருவாளர்.இலட்சுமி ஆட்டோ டீசல் ஒர்க்ஸ், மேட்டூர் | ரூ.33600.00 | குறைவு |
| 2 | திருவாளர் JVK ஆட்டோ டீசல் ஒர்க்ஸ், சேலம் | ரூ.34400.00 | அதிகம் |

<u>அலுவலகக் குறிப்பு</u>

13) செலவினம் ரூ.34000/– க்கு வருவாய் நிதியிலிருந்து பணியினை மேற்கொள்ளலாம்.

14) அவசர அவசியம் கருதி தனி அலுவலர் முன்னனுமதி பெற்று மன்ற அனுமதியினை எதிர் நோக்கி ஒப்பந்துபுள்ளி கோரியமைக்கு மன்றம் ஏற்கலாம்.

15) வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்துபுள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளியாக ரூ.33600/– என குறைவான ஒப்பந்துபுள்ளி தொகை கொடுத்துள்ள திருவாளர் இலட்சுமி ஆட்டோ டீசல் ஒர்க்ஸ் ஒப்பந்ததாரரது ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஏற்றுக் கொள்ளலாம்.

16) அவசர அவசியம் கருதி தனி அலுவலர் முன்அனுமதி பெற்று மன்ற அனுமதியை எதிர்நோக்கி பணி உத்திரவு வழங்கியமைக்கு மன்றம் ஏற்கலாம்

**(ந.க.எண்.4529/2018/இ1)**

**தீர்மாள எண். 228 நாள் 23.11.2018**

<u>அனுமதிக்கப்பட்டது</u>

**4)** இந்நகராட்சியில் பொது சுகாதாரப்பிரிவில் TN27T7769ன் வாகனத்தின் தகுதி சான்று புதுப்பித்து வாகனத்தில் உள்ள பழுதுகளை சரிசெய்து மற்றும் GPRS கருவிகளை பொருத்துதல் பணிக்கு ரூ.68000.00 மதிப்பீட்டில் ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் 15.11.2018ம் தேதியன்று வரப்பெற்ற கீழ்காணும் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் முடிவிற்கு வைக்கப்படுகிறது.

| வ. எண். | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி தொகை | ஒப்பந்தப்புள்ளி சதவிகிதம் அதிகம்/குறைவு |
|---|---|---|---|
| 1 | திருவாளர்.இலட்சுமி ஆட்டோ டீசல் ஒர்க்ஸ், மேட்டூர் | ரூ.67000.00 | குறைவு |
| 2 | திருவாளர்.J.V.K ஆட்டோ டீசல் ஒர்க்ஸ் | ரூ.69000.00 | அதிகம் |

<u>அலுவலகக் குறிப்பு</u>

வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்துபுள்ளியாக ரூபாய் 67000.00 என குறைவான ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள திருவாாளர் இலட்சுமி ஆட்டோ டீசல் ஒர்க்ஸ் ஒப்பந்ததாரரது ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஏற்றுக் கொள்ளலாம்.

(ந.க.எண்.5254/2018/இ1)

தீர்மாள எண். 229 நாள் 23.11.2018

அனுமதிக்கப்பட்டது

5) இந்நகராட்சியில் சின்னபார்க்(காமத் பூங்கா) பகுதியில் ஆழ்துளை கிணறு அமைத்து தண்ணீர் வசதி செய்தல் பணிக்கு ரூ.4.80 இலட்சம் மதிப்பீட்டில் ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் 15.11.2018ம் தேதியன்று வரப்பெற்ற கீழ்க்காணும் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் முடிவிற்கு வைக்கப்படுகிறது.

| வ. எண். | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி தொகை | ஒப்பந்தப்புள்ளி சதவிகிதம் அதிகம்/குறைவு |
|---|---|---|---|
| 1 | M/S M.P.P&CO West main Road Mettur | – | 0.35% குறைவு |
| 2 | M.Andavar Construction west main road,mettur | – | 1.80% அதிகம் |

<u>அலுவலகக் குறிப்பு</u>

வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட 0.35% சதவீதம் குறைவாக ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் கொடுத்துள்ள M/s M.P.P & co ஒப்பந்ததாரரது ஒப்பந்தப்புள்ளி மன்றம் ஏற்றுக் கொள்ளலாம்.

(ந.க.எண்.5194/2018/இ1)

தீர்மாள எண். 230 நாள் 23.11.2018

அனுமதிக்கப்பட்டது

6) இந்நகராட்சியில் வார்டு எண்.23 கூலிலைன் பகுதியில் அங்கன்வாடி மையத்திற்கு கழிப்பிடம் தண்ணீர் வசதி மற்றும் சுற்றுசுவர் அமைத்தல் பணிக்கு ரூ.3.20இலட்சம் மதிப்பீட்டில் ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் 15.11.2018ம் தேதியன்று வரப்பெற்ற கீழ்க்காணும் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் முடிவிற்கு வைக்கப்படுகிறது.

| வ. எண். | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி தொகை | ஒப்பந்தப்புள்ளி சதவிகிதம் அதிகம்/குறைவு |
|---|---|---|---|
| 1 | திருவாளர்.கிருத்திகா கன்ஷ்ட்ரக்சன், மாடி லைன் சேலம்கேம்ப் | – | 0.20% குறைவு |
| 2 | திருவாளர்.ஆர்.ஆர்.கனிஷ்கா &கோ கூலி லைன் மேட்டூர் | – | 1.35% அதிகம் |

<u>அலுவலகக் குறிப்பு</u>

வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட 0.20% சதவீதம் குறைவாக ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் கொடுத்துள்ள திருவாளர் கிருத்திகா கன்ஷ்ட்ரக்சன் ஒப்பந்ததாரரது ஒப்பந்தப்புள்ளி மன்றம் ஏற்றுக் கொள்ளலாம்.

(ந.க.எண்.5441/2018/இ1)

தீர்மாள எண். 231 நாள் 23.11.2018

அனுமதிக்கப்பட்டது

7) இந்நகராட்சியில் பொன்னகர் நகராட்சி துவக்கப்பள்ளி வளாகத்தில் அங்கன்வாடி மையத்திற்கு கழிப்பிடம் மற்றும் தண்ணீர் வசதி செய்தல் பணிக்கு ரூ.4.80 இலட்சம் மதிப்பீட்டில் ஒப்பந்துபுள்ளிகள் கோரியதில் 15.11.2018ம் தேதியன்று வரப்பெற்ற கீழ்க்காணும் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் முடிவிற்கு வைக்கப்படுகிறது.

| வ. எண். | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி சதவிகிதம் அதிகம்/குறைவு |
|---|---|---|
| 1 | திருவாளர்.கிருத்திகா கன்ஷ்ட்ரக்சன், மாடி லைன் சேலம்கேம்ப் | 0.30% குறைவு |
| 2 | திருவாளர்.ஆர்.ஆர்.கனிஷ்கா &கோ கூலிலைன், மேட்டூர் | 1.75% அதிகம் |

<u>அலுவலகக் குறிப்பு</u>

வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட 0.30% சதவீதம் குறைவாக ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் கொடுத்துள்ள திருவாளர் கிருத்திகா கன்ஷ்ட்ரக்சன் ஒப்பந்ததாரரது ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஏற்றுக் கொள்ளலாம்.

(ந.க.எண்.4813/2018/இ1)

தீர்மாள எண். 232 நாள் 23.11.2018

அனுமதிக்கப்பட்டது

8) மேட்டூர் நகராட்சிக்கு சொந்தமான திருமதி பாப்பம்மாள் திருமண மண்டபம் தற்போது நகராட்சியால் பராமரிக்கப்பட்டு வாடகை அடிப்படையில் இயங்கி வருகிறது. தலைவர் மேட்டூர் அமைதி அறக்கட்டளை மேட்டூர் அணை அவர்களின் 06.12.2017 ந் தேதி கடிதத்தில் அறக்கட்டளை சார்பாக மேட்டூர் நகராட்சியின் புரிந்துணர்வு ஒப்பந்த அடிப்படையில் அனைத்து பொது மக்கள்

பயன்பெறும் வகையில் பராமரிப்பு பணி செய்து வர ஆவண செய்யுமாறு கடிதத்தில் தெரிவித்துள்ளார்கள்

மேற்கண்ட திருமண மண்டபத்தினை பராமரிப்பு பணி செய்து வர நகராட்சி விதிகளுக்கு உட்பட்டு தற்போது உள்ள நடைமுறை படி மண்டபத்திற்கு வாடகையினை நகராட்சி அலுவலகத்தில் செலுத்தவும் பராமரிப்பு மட்டும் புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்யும் மேட்டூர் அமைதி அறக்கட்டளைக்கு, ஒப்பந்தம் மூன்று ஆண்டுகளுக்கு ஒப்படைக்கவும் அவர்களின் நடவடிக்கையில் திருப்தி ஏற்படும் பட்சத்தில் அதிகபட்சம் 9 ஆண்டுகள் வரை நீட்டித்து கொள்ளவும் நகர் மன்ற தீர்மான எண்.54 நாள்.06.04.2018ல் மன்ற அனுமதி பெறப்பட்டது.

மேட்டூர் அமைதி அறக்கட்டளையுடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்து கொள்ள நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் அனுமதி பெற நகராட்சி நிர்வாக மண்டல இயக்குனர், சேலம் அவர்களின் வழியாக இவ்வலுவலக கடித.ந.க.எண்.4649/2017 நாள்.20.04.2018 கடிதம் அனுப்பப்பட்டது. நகராட்சி நிர்வாக ஆணையர் , சென்னை அவர்களின் கடித ந.க.எண்.2968/2018/ஆர்2 நாள்.24.07.2018ல் மேற்கண்ட மண்டபத்தினை அமைதி அறக்கட்டளை மூலம் பராமரித்திட கூடுதல் விவரங்கள் தெரிவிக்குமாறு கடிதத்தில் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது. அதில் பாப்பம்மாள் திருமண மண்டபம் 55 ஆண்டு கால பழமை வாய்ந்த கட்டடத்தில் முழுமையான பராமரிப்பு பணிகள் மேற்க்கொள்ளும் வகையில் கட்டடம் தகுதியுள்ளதா என்பதற்கு பொதுப்பணித்துறையினரிடம் கட்டட உறுதி தன்மை சான்று பெற்று அனுப்புமாறு தெரிவிக்கப்பட்டதின்படி இவ்வலுவலக கடித.ந.க.எண்.4649/2017 நாள்.10.08.2018ல் கட்டட உறுதி தன்மை சான்று வழங்க கோரி செயற்பொறியாளர் பொதுப்பணிதுறை சேலம் அவர்களுக்கு கடிதம் அனுப்பப்பட்டது. மேற்கண்ட கட்டடத்தில் உறுதி தன்மை சான்று வழங்குவது குறித்து சில ஆவணங்கள் வழங்க கோரி 12.09.2018—ல் செயற்பொறியாளர் பொதுப்பணித்துறை சேலம் அவர்களின் கடிதத்தில் தெரிவித்துள்ளார்.

நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்கள் கடிதத்தில் தெரிவிக்கப்பட்ட உறுதி தன்மை சான்று உடன் அனுப்ப வேண்டியுள்ளதால் முதல்வர் அரசு பொறியியல் கல்லூரி கருப்பூர் அவர்களுக்கு கட்டட உறுதி தன்மை சான்று வழங்க கோரி இவ்வலுவலக கடிதத்தில் மூலம் கேட்டுக்கொள்ளப்பட்டது.

முதல்வர் அரசு பொறியியல் கல்லூரி கருப்பூர் அவர்களின் கடித எண் CB241/GCE/SLM/CIVIL/SM/LAB/2018 நாள்.14.11.2018ந் தேதிய கடிதத்தில் திருமதி பாப்பம்மாள் திருமண மண்டபத்திற்கு கட்டட உறுதி தன்மை சான்று வழங்க ரூ.42,480/—

செலுத்துமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. மேற்கண்ட தொகையான ரூ.42,480/–"The Principal Government College of Engineering" Salem என்ற பெயருக்கு வரைவோலையாக வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு

3. மன்றம் அனுமதிக்கலாம்
4. இதற்காகும் செலவினத்தை பொது நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.

**(ந.க.எண்.4649/2017/இ1)**

**தீர்மான எண். 233 நாள் 23.11.2018**

அனுமதிக்கப்பட்டது

**9)** பொது சுகாதாரப்பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ள **165** துப்புரவு பணியாளர் பணியிடங்களில் **81** நிரந்தர துப்புரவு பணியாளர்கள் மற்றும் ஒப்பந்த அடிப்படையில் **47** துப்புரவு பணியாளர்களைக் கொண்டு துப்புரவு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும், மீதமுள்ள **37** பணியிடங்கள் காலியாக உள்ளதால் திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் கலவை உரக்கிடங்கில் மக்கும் குப்பை மக்காத குப்பைகளை பிரித்து உரம் தயாரிக்கும் பணிக்கு ஓம் சக்தி மகளிர் சுய உதவிக்குழு மூலம் **15** நபர்களை கொண்டு நவம்பர் **2018** முதல் மூன்று மாதங்களுக்கு தற்காலிகமாக மாவட்ட ஆட்சியரால் அனுமதிக்கப்பட்ட தினக்கூலி ரூ.**319/–** என்ற வீதத்தில் பயன்படுத்திக் கொள்ளவும் துப்புரவு ஆய்வர் தனது **01.11.2018**ம் தேதிய அறிக்கையில் கோரியுள்ளார். அதன்படி, திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் இந்நகராட்சி கலவை உரக்கிடங்கில் உரம் தயாரிக்கும் பணிக்கு ஓம் சக்தி மகளிர் சுய உதவிக்குழு மூலம் **15** நபர்களை தினக்கூலி ரூ.**319/–** என்ற வீதத்தில் **01.11.2018** முதல் மூன்று மாதங்களுக்கு பயன்படுத்திக் கொள்ளவும் அதற்காகும் தோராய செலவினம்.ரூ.**5.00** இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு

4. மன்றம் அனுமதிக்கலாம்
5. இச்செலவினத்தொகையினை திடக்கழிவு மேலாண்மை நிதியில் இருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.
6. அவசர அவசியம் கருதி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று **01.11.2018** முதல் பணியாளர்களை பயன்படுத்தியமைக்கு மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண்.1501/2018/எச்1)**

**தீர்மான எண். 234 நாள் 23.11.2018**

அனுமதிக்கப்பட்டது

**10)** இந்நகராட்சியில் தட்டச்சுபணி காலியாக உள்ளதால் அரசு மற்றும் தனியால் நிறுவனங்களுக்கு தபால் அனுப்புவது கால தாமதம் ஆவதால் மாவட்ட ஆட்சியர் சேலம் அவர்களின் விலைப் பட்டியல் (Contingent Staff Daily and monthly rates of Labour for

various categories for the year 2018-2019) சேலம் மாவட்ட அரசிதழ் எண் 4 (SalemDistrict Gazette No.7. Date.May 29.2018) நாள்.மே.2018 ன்படி பல்வேறு பணிகளுக்கு ஊதியம் நிர்ணயம் செய்யப்பட்டு உள்ளது. அதன் அடிப்படையில் உள்ளூர் விலைப்புள்ளிகள் தட்டச்சு பணிக்கு கோரியதில் கீழ்கண்ட இரண்டு நிறுவனங்களிடம் இருந்து விலை புள்ளிகள் வரப்பட்டன.

| வ எண் | நிறுவனத்தின் பெயர் | தொகை |
|---|---|---|
| 1 | வெல்ஸ் தொழில் பயிற்சி நிறுவனம், 9.160 கிழக்கு மெயின் ரோடு , மேட்டூர் அனை, (தட்டச்சு மற்றும் கணிபொறி தெரிந்தவர்கள் மட்டும் ஒரு நாளைக்கு மட்டும்) | ரூ.520.00 (ரூபாய் ஐநூறு இருபது மட்டும்) |
| 2 | சின்னப்பா தொழிற் பயிற்சி நிறுவனம் 23.35 சிவா ரைஸ்மில் காம்பவுண்ட், நாமக்கல் (தட்டச்சு மற்றும் கணிபொறி தெரிந்தவர்கள் மட்டும் ஒரு நாளைக்கு மட்டும்) | ரூ.550.00 (ரூபாய் ஐநூற்று ஐம்பது மட்டும்) |

இதில் குறைந்த விலைப்புள்ளி வழங்கிய வெல்ஸ் தொழில் பயிற்சி நிறுவனம் மேட்டூர் அவர்களின் விலைப்புள்ளியினை ஏற்று மேற்கண்ட செலவினத்தை 11/2018ம் மன்றத்திலிருந்து பொது நிதியில் செலவு செய்யவும் மேற்கண்ட நிறுவனத்திற்கு பணி உத்திரவு வழங்கி தட்டச்சுபணி அவசர அவசியம் கருதி பணி செய்யவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**(ந.க.எண்.4563/2012/சி1)**

**அலுவலக குறிப்பு:**

பொது நிதியிலிருந்து செலவு செய்ய அனுமதிக்கலாம்.

**தீர்மாள எண். 235 நாள் 23.11.2018**

**அனுமதிக்கப்பட்டது**

11) மேட்டூர் நகராட்சியில் குடிநீர் பிரிவிற்கு பயன்படுத்தப்படும் வாகன எண்.TN27Y2206 தகுதி சான்றினை புதுப்பிக்கவும் 6 டயர், 6டிஸ்க், 6 டியூப் 6ரிங் மற்றும் பேட்டரி 12v புதியதாக மாற்றவும் உத்தேச செலவினத்தொகை ரூ.99,500/– ஆகும். மேற்கண்ட செலவினத்தை மேற்க் கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

3. மன்றம் அனுமதிக்கலாம்
4. இதற்காகும் செலவினத்தை குடிநீர் நிதியிலிருந்து மேற்க்கொள்ளவும்.

**(ந.க.எண்.4769/2018/இ1)**

**தீர்மாள எண். 236 நாள் 23.11.2018**

**அனுமதிக்கப்பட்டது**

12) தமிழ்நாடு சட்ட பேரவையில் 2018–2019– ம் ஆண்டிற்கான நகராட்சி நிர்வாக மற்றும் குடிநீர் வழங்கல் துறைக்கான மானியக் கோரிக்கை விவாதித்த போது மாண்புமிகு நகராட்சி நிர்வாக மற்றும் குடிநீர் வடிகால், சிறப்பு திட்ட செயலாக்கத்துறை அமைச்சர் அவர்கள்

“மாநகராட்சிகள் மற்றும்  நகராட்சிகளில் உள்ள அனைத்து வார்டுகளிலும் உயர்தரம் வாய்ந்த குடிநீர் மிகக் குறைந்த விலையில் வழங்க தானியங்கு குடிநீர் மையங்கள் (**Automatic vending Centres)** நிறுவப்படும்“ என்ற அறிவிப்பினை வெளியிட்டார்கள்.

நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் கடித .ந.க.எண்.17018/2018/குவ1 நாள்.23.08.2018ம் தேதிய கடிதத்தில் அறிவுறுத்தப்பட்டதின்படி மாண்புமிகு நகராட்சி நிர்வாக மற்றும் குடிநீர் வடிகால், சிறப்பு திட்ட செயலாக்கத்துறை அமைச்சர் அவர்களின் அறிவிப்பினை செயல்படுத்தும் வகையில், மேட்டூர் நகராட்சியில் உள்ள கீழ்க்கண்ட 3 வார்டுகளிலும் உள்ள மக்கள் இத்திட்டத்தினால் பயன்பெறும் வகையில் பொதுமக்களுக்கு உயர்தரம் வாய்ந்த குடிநீர் வழங்குதல் பணிக்கு 14.11.18ல் இரண்டாவது முறை Expression of Interest முறையில் ஒப்பந்த புள்ளி கோரியதில் வரப்பெற்ற ஒப்பந்தபுள்ளியில் ஒரு ஒப்பந்தபுள்ளி அளித்துள்ள M/s.Dharana , Infrastructure Projects Private Limited, Chennai ஒப்பந்ததாரர் கீழ்கண்டவாறு ஒப்பந்தபுள்ளி கோரியுள்ளதை மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண். | வேலையின் பெயர் |
|---|---|
| 1 | வார்டு எண்.3,தங்கமாபுரிபட்டிணம், பகுதியில் உயர்தரம் வாய்ந்த தானியங்கும் குடிநீர் மையம் வடிவமைத்து, உருவாக்கி , நிதி ஆதாரத்துடன் இயக்கி பராமரித்து திரும்ப நல்ல முறையில் ஒப்படைத்தல் (தனியார் பங்களிப்புடன் மேற்கொள்ளுதல்) |
| 2 | வார்டு எண்.5, சேலம் கேம்ப் , தாய் சேய் நல விடுதி வளாகத்தில் உயர்தரம் வாய்ந்த தானியங்கும் குடிநீர் மையம் வடிவமைத்து, உருவாக்கி , நிதி ஆதாரத்துடன் இயக்கி பராமரித்து திரும்ப நல்ல முறையில் ஒப்படைத்தல் (தனியார் பங்களிப்புடன் மேற்கொள்ளுதல்) |
| 3 | வார்டு எண்.15, தூக்கனாம்பட்டி பகுதியில் உயர்தரம் வாய்ந்த தானியங்கும் குடிநீர் மையம் வடிவமைத்து, உருவாக்கி , நிதி ஆதாரத்துடன் இயக்கி பராமரித்து பணி திரும்ப நல்ல முறையில் ஒப்படைத்தல் (தனியார் பங்களிப்புடன் மேற்கொள்ளுதல்) |

**Price Schedule**

| S no | Description | Rate to be remitted to the Municipality Rupees per 20Ltr | Rate to be charged for sale to public Rupees per 20Ltr | Rate to be charged for sale to public Rupees per 1 Ltr from chilling machine |
|---|---|---|---|---|
| 1 | Establishment of 1000 Ltr/ Hr. capacity community drinking water system through Reerse Osmosis with UV treatment in the 3 places mentioned in Mettur Municipality | Rs.1.00 | Rs.6.90 | Rs.1.00 |

அலுவலக குறிப்பு:

4. முதன் முறை ஒப்பந்தப்புள்ளி 04/10/2018ம் தேதி கோரியதில் எந்த ஒப்பந்தபுள்ளியும் வரவில்லை

5. இரண்டாவது முறை ஒப்பந்தப்புள்ளி கோரியதில் ஒரே ஒரு ஒப்பந்தபுள்ளியாக மேற்கண்ட பணிக்கு M/s.Dharana , Infrastructure Projects Private Limited, Chennai நிறுவனம் ஒப்பந்த நமுனாவில் குறிப்பிடப்பட்டுள்ள விலை விகிதத்திற் மிகாமலும் இருபது லிட்டருக்கு ரூ.6.90 என குறைவான விலை விகிதம் அளித்துள்ளார்.
6. எனவே ஒரே ஒப்பந்தப்புள்ளியாக பெறப்பட்டிருந்தாலும் முதல் அழைப்பில் எந்த ஒப்பந்தபுள்ளியும் பெறப்படாததாலும் இரண்டாவது அழைப்பில் பெறப்பட்ட ஒரே ஒப்பந்தப்புள்ளியாக இருப்பினும் ஒப்பந்தபுள்ளி நமுனாவில் குறிப்பிடப்பட்டுள்ள விலை விகிதத்திற்கு மிகாமல் விலை விகிதம் அளிக்கப்பட்டுள்ளதால் மேற்படி ஒப்பந்தப்புள்ளியினை ஏற்கலாம்.

**(ந.க.எண்.4984/2018/இ1)**

**தீர்மாள எண். 237 நாள் 23.11.2018**

**அனுமதிக்கப்பட்டது**

13) புகைவண்டி நிலையத்தின் அருகில் உள்ள இந்நகராட்சிக்குச் சொந்தமான வணிக வளாகத்தின் அருகில் உள்ள 24 திறந்தவெளிக் கடைகளில், காலியாக உள்ள கடைகளுக்கு 20.11.2018ல் மறு ஏலம் / ஒப்பந்தப்புள்ளி கோரியதில், ஏலம் கோர எவரும் முன்வரவில்லை. கடை எண்.9க்கு மட்டும் கீழ்க்கண்டுள்ளவாறு இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது. வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண். | ஒப்பந்தப்புள்ளி கொடுத்தவர் பெயர் | ஒப்பந்தப்புள்ளியில் கோரிய அதிகபட்ச தொகை (ஆண்டு ஒன்றுக்கு) |
|---|---|---|
| 1. | திருமதி.பா.கம்ரூனிஷா,<br>72, சின்னப்ப ஆசாரி தெரு,<br>தேசாய் நகர்,<br>மேட்டூர் அணை. | ரூ.550/- |
| 2. | திரு.B.சதாம் உசேன்,<br>72, சின்னப்ப ஆசாரி தெரு,<br>தேசாய் நகர்,<br>மேட்டூர் அணை. | ரூ.530/- |

<u>அலுவலகக் குறிப்பு</u>

மேற்படி வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் வரிசை எண்.1–ல் கண்டுள்ள திருமதி.பா.கம்ரூனிஷா, மேட்டூர்அணை என்பவர் அதிகபட்சமாக மாதம் ஒன்றுக்கு ரூ.550/-க்கு ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ளார். இந்த ஒப்பந்தப்புள்ளித் தொகையானது இக்கடைக்கு ஏற்கனவே நிர்ணயிக்கப்பட்ட வாடகையை விட ரூ.50/- கூடுதலாக உள்ளது. எனவே இந்த ஒப்பந்தப்புள்ளியை ஏற்பது குறித்து மன்றம் முடிவு செய்யலாம்.

**(ந.க.எண்.2799/2012/அ3)**

**தீர்மாள எண். 238 நாள் 23.11.2018**

**அனுமதிக்கப்பட்டது**

14) புகைவண்டி நிலையத்தின் அருகில் உள்ள இந்நகராட்சிக்குச் சொந்தமான வணிக வளாகத்தின் அருகில் உள்ள 24 திறந்தவெளிக் கடைகளில், காலியாக உள்ள கடைகளுக்கு 20.11.2018ல் மறு ஏலம் / ஒப்பந்தப்புள்ளி கோரியதில், ஏலம் கோர எவரும் முன்வரவில்லை. கடை எண்.10க்கு மட்டும் கீழ்க்கண்டுள்ளவாறு இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது. வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண். | ஒப்பந்தப்புள்ளி கொடுத்தவர் பெயர் | ஒப்பந்தப்புள்ளியில் கோரிய அதிகபட்ச தொகை (ஆண்டு ஒன்றுக்கு) |
|---|---|---|
| 1. | திருமதி.பா.கம்ரூனிஷா,<br>72, சின்னப்ப ஆசாரி தெரு,<br>தேசாய் நகர்,<br>மேட்டூர் அணை. | ரூ.550/- |
| 2. | திரு.B.சதாம் உசேன்,<br>72, சின்னப்ப ஆசாரி தெரு,<br>தேசாய் நகர்,<br>மேட்டூர் அணை. | ரூ.530/- |

<u>அலுவலகக் குறிப்பு</u>

மேற்படி வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் வரிசை எண்.1–ல் கண்டுள்ள திருமதி.பா.கம்ரூனிஷா, மேட்டூர்அணை என்பவர் அதிகபட்சமாக மாதம் ஒன்றுக்கு ரூ.550/-க்கு ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ளார். இந்த ஒப்பந்தப்புள்ளித் தொகையானது இக்கடைக்கு ஏற்கனவே நிர்ணயிக்கப்பட்ட வாடகையை விட ரூ.50/- கூடுதலாக உள்ளது. எனவே இந்த ஒப்பந்தப்புள்ளியை ஏற்பது குறித்து மன்றம் முடிவு செய்யலாம்.

**(ந.க.எண்.2799/2012/அ3)**

**தீர்மான எண். 239 நாள் 23.11.2018**

**அனுமதிக்கப்பட்டது**

ஆணையாளர் (ம) தனி அலுவலர்,
மேட்டூர் நகராட்சி.

நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை
மேட்டூர் நகராட்சி

மேட்டூர் நகராட்சியின் சாதாரணக் கூட்டம் நகர்மன்றத்தில் நகராட்சியின் தனி அலுவலர் அவர்களால் 30.11.2018 ம் தேதி பிற்பகல் 4.00 மணிக்கு நடைபெற உள்ளது.

மன்றப் பொருள்

1). இந்நகராட்சியின் பொது சுகாதாரப் பிரிவில் துப்புரவு பணியாளராக பணியாற்றி பணிகாலத்தில் 09.06.2017ல் திருமதி.கண்ணம்மாள்/செல்லதுரை இறந்து விட்டார். அன்னாரின் வாரிசுதாரரும் கணவருமாகிய திரு.செல்லதுரை/பொன்னான் என்பவர் தனது மனைவிக்கு வழங்கப்பட வேண்டிய விடுப்பு கணக்கு ஊதியம் வழங்ககோரி சென்னை உயர்நீதி மன்றத்தில் W.P.28359/18 மூலம் வழக்கு தொடர்ந்து உள்ளார். மேற்படி வழக்கில் 1. அரசு செயலாளர் நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை சென்னை, 2. ஆணையர் நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை 3. ஆணையர் மேட்டூர் நகராட்சி ஆகிய மூவரையும் பிரதிவாதியாக சேர்க்கப்பட்டுள்ளது.

இவ்வழக்கினை திரு.வி.கதிர்வேல் சிறப்பு அரசு வழக்கறிஞர் அவர்களிடம் ஒப்படைத்து நகராட்சி சார்பாக ஏற்று நடத்திடவும், இற்கு செலவாகும் வழக்கறிஞர் கட்டணம் அனைத்திற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு

6. மன்றம் அனுமதிக்கலாம்

(ந.க.எண்.5469/2018/எப்1)

தீர்மாள எண். 240 நாள் 30.11.2018

அனுமதிக்கப்பட்டது

2). மேட்டூர் நகராட்சிக்குச் சொந்தமான கீழ்க்கண்ட உரிம இனங்களின் உரிமக்காலம் 31.03.2019 உடன் முடிவடைவதால் அரசாணை (நிலை) எண்.181 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கு துறை நாள்.19.09.2008 ன் 01.04.2019 முதல் 31.03.2022 முடிய உள்ள மூன்று ஆண்டு காலத்திற்கு பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளிகள் மூலம் உரிமங்களை ஒப்படைப்பதற்கும், ஏல விளம்பரங்களை நாளிதழில் விளம்பரம் செய்யவும் அதற்காகும் செலவினத்திற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| வ எண் | உரிம இனத்தின் விவரம் |
|---|---|
